உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 25 } பிரமாதி ஹு மார்கழிமீ கஉ 1939ஹு டிசம்பர்மீ 16உ {பகுதி 6

கடவுள் வணக்கம்.

—:0:—

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே யெண்ணின்அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின்அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல்வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியா உன்அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. (1)

———

தேவார்ந்த தேவனைத்தேவர் எல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டமாடி
நான்முகனும் இந்திரனும் மாலும்போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் காணப்பெற்றாய்
கழுக் குன்றத்து உச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. (2)

———

ஒருவனையும் அல்லாது உணராது உள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத்து உள்ளேநின்ற
இருவரையும் மூவரையும் என்மேல்ஏவி
இல்லாத தரவறுத்தாய்க்கு இல்லேன்வலத்
கருவரைசூழ் கானல் இலங்கைவேந்தன்
கடுந்தேர்மீதோடு ஆமைக் காலால்செற்ற
பொருவரையாய் உன்அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. (3)

அரும்பொருள் விளக்கம்

(இ-ள்.) திருப்பூம்புகலூர் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கும புண்ணிய சிவமூர்த்தியே! சதா சிந்தனையிலேயே ஆழ்ந்திருக்கும் நான், அடியேனது உயிர்த்தலைவனாகிய தேவரீரது திருவடிகளைத் தியானஞ் செய்வதல்லது, வேறு என்ன சொல்லி இறைஞ்சுவது! ஊனக்கண்ணிருந்தும் ஞானக்கண்ணில்லாதவன் நான்; அது மட்டுமா! எனக்கு உற்றாரும் உறுதுணையும் ஒன்றுமில்லை; ஆதலால், தேவரீரது வீர சதங்கை யணிந்த திருவடிகளைப் பற்றுக்கோடாகக்கொண்டு அவைகளைத் தரிசித்தவாறே கைகூப்பி வணங்கிக் கொண்டிருப்பதுதான் செய்யத் தக்கது. என் ஒரு தேகத்தில் நவ துவாரங்களை அமைத்து உயிர்வாழச் செய்திருப்பதால், அவை ஏககாலத்தில் அடைபட நேருஞ் சமயத்தில் ஒன்றையும் உணர முடியாது; ஆதலால், புண்ணியமூர்த்தியே! இப்போதே உன் திருவடிகளைத் தஞ்சமாக அடைகிறேன். (எ-று.)

'உற்றார் யாருளரோ உயிர்கொண்டு போம்பொழுது; குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார் யாருளரோ!' என்ற உண்மையை இப் பாடலிலும் 'கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்' என்ற அடி வாயிலாக திருநாவுக்கரசு சுவாமிகள் தெளிவுபடுத்துகிறார். (1)

(இ-ள்.) திருப்பூம்புகலூர் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள புண்ணிய சிவமூர்த்தியே! உண்மையான தெய்வத்தன்மை பொருந்திய தேவதேவனாகிய தேவரீரை, மற்ற தேவகணங்களெல்லாம் திருவடிகளில் மலர்தூவி, நா தழுதழுக்க வேதகீதம் பாடியும், மெய் மறந்து கூத்தாடியும் தேடி நிற்கவும், பிரம்மதேவனும், தேவேந்திரனும் மகாவிஷ்ணுவும் போற்றி நிற்கவும் பூஞ்சோலைகளும், காடுமலைகளும், குலம், ஆறு, கடல்களும் நிறைந்த அகில உலகங்களையும் படைத்து காத்து அழித்து வருகிறீர்கள். திருக்கழுக்குன்றத்தின் சிகரத்தில் கண் கண்ட தெய்வமாய் விளங்கும் முழு முதற்பொருளே! தங்களுடைய மலர்கள் நிறைந்த பொன்னடிகளையே அடியேன் தஞ்சமாக அடைகிறேன். (எ-று.)

தேவ தேவனாயிருந்து முத் தொழிலையுஞ் செய்ய வல்லவன் சிவபெருமானே என்பதை இப் பாடல் விளக்குகிறது. (2)

(இ-ள்.) திருப்பூம்புகலூர் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள புண்ணிய சிவமூர்த்தியே! நான் நிலை பெற்றிருப்பதற்கே ஜீவனாயுள்ள ஆன்மா இல்லாது என் மனம் எதையும் உணரமுடியாது; அவ்வித உணர்ச்சி தடுமாற்ற மடையுங் காலமாகிய மரண சமயத்தில் உள்ளே இருக்கும் ஐம்புலன்களையும் என் மீது ஏவிச் சேஷ்டை செய்யவைத்து ஒன்றுமில்லாதவனாக்கி வேடிக்கை பார்க்கிறாய்; இது நியாயமா! ஏலக்காடும் கருத்த மலைகளும் சூழ்ந்த கானலில் இலங்கை வேந்தனாகிய இராவணன் வெகுவேகமாக ஓடும் தேரின்மீது பறந்தவாறே, கயிலாயத்தைத் தூக்க முயன்றபோது பெருவிரலால் நசுக்கிப் புத்தி வரச்செய்த திருக்கயிலாய நாயகனே! ஒரு களைகண்ணுமில்லாத அடியேன் தேவரீருடைய திருவடிகளையே தஞ்சமாக அடைகிறேன். (எ-று.)

ஆணவத்தால் தருக்கி நிற்கும் உயிர்களை, இருவினைகளையும், பொறி புலன்களையுங்கொண்டு ஆட்டி வைக்கின்றான் ஆண்டவன் என்னும் உண்மை இப் பாட்டால் பெறப்படுகிறது. (3)

விடுதலைக்கு வழிகாட்டும் கதர்

"அறிவைவிட வாழ்க்கை உயர்ந்தது. நமது முன்னோர்கள் வைத்திருக்கும் பொக்கிஷம் அருமையானது. உலகில் எல்லா தேசங்களுக்கும் சரி சமத்துவமான அந்தஸ்தை அடைய அது உரிமையுடையது. அந்த அந்தஸ்தை நமது நாடு அடைய வேண்டுமானால், ஜாதி, மத, வகுப்பு வழியில் நாம் யோசனை செய்வதை விட்டுவிடவேண்டும்; எல்லோரும் ஒன்றுபட வேண்டும். நம்முள்ளிருந்துவரும் தீங்குகளை ஒழிக்க வேண்டும்............தேச சேவைக்கு உங்களுடைய வாழ்நாளை அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்' என இந்தியக் கவி கோகிலம் ஸ்ரீமதி சரோஜனிதேவியார் நாகபுரி சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம் செய்யும்போது குறிப்பிட்டார். இது ஆப்தவாக்கியமாகும். இம்மொழி நாகபுரி மாணவர்களுக்கு மட்டும் விடுக்கப்பட்டதல்ல; இந்தியாவிலுள்ள எல்லா வாலிபர்களையுமே நோக்கி விடுக்கப்பட்டதாகும். உலகிலுள்ள மற்ற சுதந்திர தேசங்களைப் போல், நம் இந்தியாவும் அடிமைத்தனத்தை யொழித்து சுதந்திரம்பெற்று சரிசமத்துவமான அந்தஸ்துடன் விளங்கவேண்டுமானால் இந்திய மக்களாகிய ஒவ்வொருவரும் ஸ்ரீமதி சரோஜனி தேவி கேட்டுக்கொண்டதுபோல் தேச சேவை செய்வதைத் தமது வாழ்க்கையின் முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தேச சேவை என்றால் என்ன? நமது தேசத்துக்கு எந்த விதமான சேவை தேவை? நாம் எந்தவிதமாகச் சேவைபுரிய வேண்டும்? அன்னிய ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும் நம் தேசம் விடுதலை யடைவதற்கு—சுயராஜ்யம் பெறுவதற்கான முறையில் சேவைபுரிய வேண்டுமென்பதை எடுத்துக் கூறவேண்டியதில்லை. நம் தேசம் விடுதலை பெறுவதற்கான தேசியப்போராட்ட முறைகளை—நிர்மாண வேலைத் திட்டங்களை மகாத்மா காந்தி முதலிய தேசத் தலைவர்கள் வகுத்திருக்கின்றனர். தேச மகாசபையா

கிய காங்கிரஸ் காலதேச வர்த்தமானத்தை யொட்டி அவ்வப்போது வேலைத் திட்டங்களைக் கோலிவருகிறது. தற்போது தேசத்துக்கும் காங்கிரஸுக்கும் வழிகாட்டியாக இருந்து வருபவர் மகாத்மா காந்தி யாதலால், 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' எனக் கருதித் தேச சேவையில் ஈடுபட விரும்பும் எவரும் அவர் கூறிவரும் மார்க்கங்களை அனுஷ்டித்து வருவார்களானால், தாங்கள் பிறந்த நாட்டுக்குச் சேவை செய்த புண்ணியத்தையும், தங்களது வாழ்க்கையின் இறுதி லட்சியத்தையும் பயனையும் அடைவார்கள் என்பது நிச்சயம்.

மகாத்மாகாந்தி நம் நாட்டு விடுதலைக்காக, பலவித போராட்டங்களை நடத்தியும், பலவித வேலைத் திட்டங்களை வகுத்துக் காட்டியும் வருகிறாராலும், ஆதியிலிருந்தே அவர் சுயராஜ்யம் பெறுவதற்குக் கூறிவரும் சுலபமான வழி அல்லது யோசனை கதர் திட்டத்தைப் பற்றியேயாகும். 'கதரினால்தான் நமக்கும் நாட்டுக்கும் கதிமோட்சம் கிடைக்கும். ராட்டையினால்தான் சுயராஜ்யம் ஏற்படும்' என்று அடிகள் சமயம் நேர்ந்தபோதெல்லாம் கூறி வருகிறார். 'இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் தாமே நூல்நூற்று நெய்து தமக்கும் தம் குடும்பத்துக்கும் வேண்டிய ஆடைகளைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். அவ்விதஞ் செய்தால் கட்டாயம் நமக்குச் சுயராஜ்யங் கிடைக்கும். கதர் திட்டத்தை எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமாக நாம் அமுலுக்குக் கொண்டு வருகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக நம்நாடு சுதந்திரத்தைப் பெறும்' என்று அவர் உறுதியாகக் கூறி வருகிறார். அவர் உபதேசித்துவரும் நூல் நூற்றலின் தத்துவம் அல்லது கதரின் தத்துவம் வெகுபேருக்கு நன்றாக விளங்கவில்லை. பெரும்பாலார் மனதில் அத்தத்துவம் பதியவேயில்லை. ஆகவே, அவர்கள் மகாத்மா இவ்விஷயத்தை எவ்வளவு வற்புறுத்திக் கூறினாலும் அசட்டையாகவே இருந்து வருகின்றனர். விதண்டாவாதக் காரர்களான மற்றும் சிலர், 'கதரினாலாவது கதிமோட்சமாவது? அதெல்லாம் வெறும் ஹம்பக். கதரினால் பொருளாதாரப் பிரச்சினை தீருமா? பொருளாதார அபிவிருத்தி ஏற்படுமா?' என்று கேட்டு கேலிசெய்து வருகின்றனர். காங்கிரஸ் காரர்களிலேயே பலருக்குக் கதர் விஷயத்தில் இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை யென்றால், மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்! கதர் விஷயத்தில் காங்கிரஸ் காரர்களுக்குள்ள அசிரத்தையைக் கண்டு மகாத்மா பலமுறை வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார். அவர் காங்கிரஸ் மகாசபையை விட்டு வெளியேறி ஒதுங்கி யிருப்பதற்கே கதர் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் கொண்டுள்ள அவநம்பிக்கை தான் காரணமாகும். சமீபத்தில் இதைப் பகிரங்கமாகச் சொல்லியும் விட்டார்.

நூல் நூற்றலினால் அல்லது கதர் திட்டத்தினால் நம் நாட்டுக்கு எப்படி விமோசனம் ஏற்படும் எனச் சிலர் கேட்கிறார்கள். இதற்கு மகாத்மாகாந்தியும் மற்ற காங்கிரஸ் தலைவர்களும் தக்க பதில் சொல்லி யிருக்கிறார்கள். ஒரு காலத்தில் நம்நாடு நெசவுத் தொழிலுக்கு மிகவும் பேர் போனது. இங்கு நெய்யப்பட்ட 'டாக்கா மஸ்லின்' உலகப் பிரசித்தி பெற்றது அத்தகைய நாடு அன்னிய ஆட்சிக்குட்பட்டதன் காரணமாக அத் தொழிலில் உள்ள திறமையை இழந்து விட்டது. நெசவுத் தொழிலே குன்றிப் போயிற்று. நாட்டுமக்கள் தாங்கள் உப யோகிக்கும் ஆடைகளுக்கு பிற நாட்டிலிருந்து இறக்குமதி யாகும் அன்னிய நாட்டுத் துணிகளை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார்கள். எனவே, அன்னி யத் துணிகளை வாங்குவதன் வாயிலாக, நம் நாட்டின் செல்வம் வருஷந்தோறும் கோடிக் கணக்கில் வெளி தேசங்களுக்குப் போகத் தலைப்பட்டு விட்டது. லண்டன் லங்காஷயர், மான் செஸ்டர் போன்ற ஆலைகள் நம் நாட்டுப் பணத்தால் மிகவுங் கொழுத்துப் போய்விட்டன. இது போன்றே மற்ற சாமான்கள், பண்டங்களுக்காக நம் தேச மக்கள் அன்னியநாடுகளுக்கு ஏராள மான பணத்தை யனுப்பிவருகிறார்கள். இவ்விதம் அன்னியநாட் டார் நம் நாட்டிலிருக்கும் செல்வத்தைச் சுரண்டிச் செல்வதைத் தடுப்பதற்காகவே, மகாத்மாகாந்தி கதர் திட்டத்தையும் சுதேசி இயக்கத்தையும் ஏற்படுத்தினார். கதர் திட்டம் அமுலுக்கு வந்த தால், துணி காரணமாக வெளி நாட்டுக்குப் போய்க்கொண் டிருந்த பணம் எவ்வளவோ மிச்சமடைந்திருக்கிறது. சுதேசி இயக்கத்தாலும் ஒருவாறு நமக்குப் பலனேற்பட்டிருக்கிறது. மகாத்மாகாந்தியின் உபதேசத்தை மட்டும் பூரணமாகக் கேட்டு, தேச மக்க ளனைவரும் கதர் திட்டத்தையும் சுதேசி இயக்கத்தை யும் வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்திருப்பார்களானால், அவர் கூறியபடியே, நம் நாட்டுக்கு விடுதலை யேற்பட்டிருக்கு மென்பது நம் அபிப்பிராயம்.

நம் துரதிர்ஷ்டவசமோ நம் நாட்டின் துரதிர்ஷ்டவசமோ நாம் மகாத்மாவின் உபதேசத்தைக் கேட்டு நடக்காதிருந்து வரு கிறோம். நவநாகரிகத்தின் பயனாக, அல்லது அன்னியநாட்டு மக்கள் கூட்டுறவின் பயனாக நம் வாழ்க்கைக்கு இன்றியமையாத தாய்ப் போயிருக்கும் சில நவீனப் பொருள்களுக்குத்தான் நாம் அன்னிய நாட்டை எதிர்பார்க்கவேண்டிய நிலை ஏற்படுகிறதென் றால், நாம் உடுத்தும் ஆடைகளுக்குக்கூட அன்னிய நாட்டை எதிர்பார்த்து நிற்பது அவமானமாக இல்லையா? இந்த உணர்ச்சி நமக்கு இன்னும் உதயமாக இல்லை. இனியேனும் நமக்கு இவ் விஷயத்தில் அறிவேற்படுமா?

மகாத்மா காந்தி கதர் திட்டம் சம்பந்தமாகச் சமீபத்தில்
வெளியான ஹரிஜன் பத்திரிகையில் இரு கட்டுரைகள் எழுதி
யிருக்கிறார். அதிலுள்ள விஷயங்கள் ஒவ்வொருவரும் படிக்க
வேண்டியவை யாகும். காங்கிரஸ் காரியக் கமிட்டி சட்டமறுப்
புக்கு நூல் நூற்பது இன்றியமையாத ஒரு நிபந்தனை யென ஏற்
றுக்கொண்டதை அனைவரும் அறிவர். அதை ஆதாரமாகக்
கொண்டு, மகாத்மா காந்தி "பெண்கள் மூலம் சுயராஜ்யம்" என்ற
தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி, "இப்போது இந்தியாவுக்கு ஊழி
யஞ் செய்ய பெண்களுக்கு ஒரு நல்ல தருணம் ஏற்பட்டிருப்ப"
தாக விளக்கி யிருக்கிறார். மேலும் அவர் அதில், "இதனால்
கிராமத்திலுள்ள பெண்மணிகளுக்கு என்றுமில்லாதபடி ஒரு
பெருமை கிடைத்திருக்கிறது. நூற்கும் விஷயத்தில் பெண்
மணிகளுக்கு அதிக வசதிகளிருக்கின்றன. ஆதிமுதலே இவ்
விஷயத்தில் இரு பாலாரும் ஒத்துழைத் திருக்கின்றனர். நூற்
பது பெண்கள் வேலையாகவும், நெய்வது ஆண்கள் வேலையாக
வும் இருந்திருக்கிறது.........அநுபவத்தில் நூல் நூற்பது பெண்
களுக்கே யுரியதென நன்கு தெரிகிறது. நூல் நூற்பதற்கு
அமைதியும் பொறுமையும் வேண்டும். பெண்மணிகள் தியாகத்
தின் உருவமாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களிடம் அஹிம்
சையு மிருக்கிறது............நூல் நூற்றல் என்பது முக்கியமாக
இந்தியாவில் பெண்களுக்கான தொழிலாகவே கருதப்படுகிறது.
காரியக் கமிட்டியின் தீர்மானம் புருஷர்களிடமிருந்து பொறுப்
பைப் பெண்களுக்கு மாற்றித் தங்கள் சக்தியைக் காட்ட அவர்
களுக்குச் சந்தர்ப்ப மளிக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், காந்தி அடிகள் நூல் நூற்றலின் அவசியத்தையும்,
அதனால் ஏற்படும் பலனையும்பற்றி இன்னொரு கட்டுரையில் கூறு
கிறார்:—"அதிக மூலதனத்துக்கு அவசிய மில்லாததும், தேகத்
துக்கு நன்மையளிக்கக் கூடியதுமான தொழில் எது? நூல் நூற்
றலும் அதைச் சேர்ந்த முறைகளும்தான் என்று அழுத்தமாகக்
கூறலாம். இது தொன்றுதொட்டு நம் நாட்டின் தொழிலாகும்.
லட்சக்கணக்கானவர்கள் இதைச் சுலபமாகக் கற்றுக்கொண்டு
விடலாம். எவ்வளவு நூல் நூற்கிறோமோ அவ்வளவும் மதிப்பு
தான். இந்நாட்டில் ஆலைகளே இல்லாமலிருந்தால் நெய்க்கு
எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு மதிப்பு கையால் நூற்கப்
பட்ட நூலுக்கு மிருக்கும். முக்கியமான பொருள்கள் கிடைக்
காமல்போனால் எப்படி பஞ்சத்தால் பாதவிக்கிறோமோ அது
போலவே நூல் கிடைக்காமல் போனாலும் தவிப்போம். மக்க
ளுக்கு மட்டும் மனமிருந்தால் அவர்கள் அதிக சிரமமில்லாமல் தங்கள்
ஆடைகளைத் தாங்களே தயார் செய்து கொள்ளலாம்.........ஒவ்
வொரு காங்கிரஸ்காரரும் நாளொன்றுக்கு, குறைந்தது அரை

மணி நேரமாவது நூல் நூற்கவேண்டு மென்பதே எனது உத்தேசம்...........ஒருவர் தாம் நூற்கும் நூலைக்கொண்டே தமது ஆடையைத் தயாரித்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அவருக்கு ஆண்டொன்றுக்கு 20 கஜம் துணி வேண்டுமென்றால், அவர் நாள் ஒன்றுக்கு ஒருமணிநேரம் நூற்றால் போதுமானது. ஆகவே, தலைக்கு 20 கஜம் துணி அவசியமென்ற கணக்கின்படி பார்த்தால் இந்தியாவிலுள்ள அத்தனை பேரின் ஆடைகளும் தயாராவதற்கு மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் நாளொன்றுக்கு அதிகப்படி 5 மணி நேரம் நூல் நூற்றால் போதும். இப்போது ஒவ்வொரு இந்தியருக்கும் தேவையான ஆடை சராசரி 15 கஜம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இன்னும் திறமையாக நூல் நூற்றால் நூற்கும் நேரத்தை வெகுவாகக் குறைத்து விடலாம். இப்படியாக, மிகச் சிரமமில்லாமலும் குறைந்த செலவிலும் நாடு முழுதும் கதரைப் பரப்பலா மென்பதே என் நம்பிக்கை. இக் காரியம் நிறைவேற வேண்டுமானால் இந்த நவயுகத்தில் எங்குமே கண்டிராத வகையில் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க முன்வரவேண்டும். ஒவ்வொரு காங்கிரஸ்காரர்களும் தம்மாலியன்ற வரையில் புத்திசாலித்தனமாக நூல் நூற்று தம்மைச் சுற்றியுள்ளவர்களிடையே கதர் விற்பனைக்கு ஏற்பாடு செய்வார்களென்றே நான் எதிர்பார்க்கிறேன். நாட்டைச் சுதந்திரத்துக்குத் தயார் படுத்துவதில் தம்முடைய பங்கைத் தாம் நிறைவேற்றுவதான நம்பிக்கையுடன் ஒவ்வொருவரும் இக் காரியத்தைச் செய்யவேண்டும்.'' மகாத்மாவின் இவ் வேண்டுகோளை காங்கிரஸ்காரர்கள் மட்டுமேயல்லாது, தேச நன்மையை விரும்பும் ஒவ்வொருவரும் நிறைவேற்றிவைக்க முன் வருவார்களென்று நாம் நம்புகிறோம். ஐரோப்பா தேசங்களில் யுத்த வயதுவந்த ஆடவர்களுக்கெல்லாம் குறிப்பிட்ட சில காலம்வரை கட்டாய இராணுவப் பயிற்சி யளிக்கப்படுவதுபோல், அஹிம்சை முறையிலேயே நாட்டைப் பாதுகாத்து அதன் வாழ்வைத் திட்டப்பட்டப் படுத்தவேண்டுமென்ற கொள்கையுள்ள நம் நாட்டில் மக்களைப் பலன்தரத்தக்க ஒரு தேசிய சேவையில் கட்டாயமாக ஈடுபடுத்தவேண்டும். ஆகவே, தேசிய சேவைக்கே உயிராகவுள்ள கதர் திட்டத்தை இந்தியாவில் யுத்த வயதுவந்த ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் மேற்கொள்ளும்படி செய்ய வேண்டும். இவ்வித தேசிய கட்டாயப் பயிற்சியைத்தான் மகாத்மா விரும்புகிறார். ஒவ்வொரு வீடும் தனக்கு வேண்டிய தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய நிலைமையில் இருக்கவேண்டிய தவசியம். அப்போதுதான் நம் தேசத்துக்கு விடுதலை கிடைக்கும்.

போலந்தும் பின்லந்தும்

(பி. என். வைத்தியநாத சுவாமி பி. எஸ். ஸி.,)

★

போலந்து

ஸைதியன்ஸ் (Scythians) என்றொரு ஜாதி. இவர்களைப் பற்றி மிகப் பழைய சரித்திரம் பேசுகிறது. இதை யொத்த சில வான் (Slavon) என்றொரு வகுப்பினர் ஒரு காலத்தில் மேற்கு கிழக்கு ஐரோப்பாவில் பரவி இருந்தனர். இதனுள் போலானி (Polani) என்றொரு பகுதி. போல்ஸ்கா (Polska) அல்லது சமவெளி பிரதேசத்தில் இவர்கள் வசித்ததால் இப் பெயர் வந்தது. மிகப் பலமுடையவர்களாய் இருந்தனர். இதன் காரணமாக மற்றப் பகுதியினர்க்கும், கடைசியில் எல்லோருக்குமே போல்ஸ் என்ற பெயர் வந்ததாம்.

பத்தாம் நூற்றாண்டு. ஜெர்மன் பாதிரிகள் போலந்துக்கு வந்தனர். ஜனங்களைக் கிருஸ்துவ மதத்திற்கு மாற்றினர். ஐந்து நூற்றாண்டுகள் கழிந்தன. போல்ஸ் நாகரிகம் சிறப்பாக முன்னுக்கு வந்தது. படிப்பில் முக்கிய ஸ்தானம் பெற்றனர். கிராகவ் (Cracow) என்றொரு கலாசாலை. மத்திய ஐரோப்பாவிலேயே முதல் இடம் வகித்தது. சூரிய மண்டலத்தைப் பற்றின ஆராய்ச்சிகள் செய்தவர் நிக்கலஸ் கூப்பர் (Nickelas Cooper) இவர் இந்த சமயத்தில் வசித்தவர்.

போலீஷ் ஜாதி இரண்டு வகுப்புடையதாகும். ஒன்று பிரபுக்கள்; மற்றொன்று அடிமைகளையும் சாதாரண மக்களையும் கொண்டதாகும். பொதுவாக போலீஷ்காரர்கள் தாழ்ந்த நிலைமையிலிருந்தனர். போலீஷ் சரித்திர மென்று சொல்கிறார்கள். அது உண்மையில் பிரபுக்களின் வாழ்க்கையைக் குறிப்பதாகும். விவசாயிகள் பாமரராய் விலங்குகளாய் வாழ்ந்தனர். ஆனால் வார்ஸா (Warsaw) பிரோம்பர்க்கு (Bromberg) முதலிய முக்கிய நகரங்களிலுள்ள அடிமைகள் நல்ல நிலைமையிலிருந்தனர்.

அது சமயம் போலந்து ஒரு குடியரசு நாடாக விருந்தது— பிரபுக்கள் கூடிய சட்ட சபையால் ஆளப்பட்டது. சுற்றிலும் மூன்று வல்லரசுகள், பிரஷ்ஷியா (Prussia) ரஷியா (Russia) ஆஸ்டிரோ-ஹங்கேரி (Austro-Hungary) என்பவைகளாம். இவைகளின் நடுவே போலந்து ஒருவிதமான குடியரசை நிலை நாட்டி வந்தது. அரசனே குடியரசின் தலைவனுவான். அவன் இறந்த பின் மற்றொருவன் தேர்ந்தெடுக்கப்படுவான். தலைவனுக்குள்ள அதிகாரம் மிகவும் சொற்பமே. சண்டைக்குப் போகவோ சமாதானம் செய்து கொள்ளவோ புதுவரி போடவோ தலைவனுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. எந்த சட்டசபை அங்கத்தினனும் எதிர்த்து வாதாடலாம். ஆனால் அங்கத்தினர்களுக்குள் ஒற்றுமை கிடையாது. எப்பொழுதும் பொறாமையே. இவைகளை யெல்லாம் கவனிக்கும்போது மத்திய அரசாங்கம் ஒழுங்காக நடைபெறவில்லை என்று கூட சொல்ல வேண்டும்.

புது மாறுதலுக்குப் பிறகு முதல் தலைவராக வந்தவர் என்றி ஆப் வால்வாய்ஸ் (Henry of Valvois) பிரான்சின் சார்லஸ் IX என்பவரின் சகோதரர். இவர் பதவியிலிருந்த காலம் மிகக் குறுகியதே. சகோதரன் இறந்தார். போலந்தை விட்டு பிரான்சுக்கு என்றி போய் விட்டார். காரணம் அரசன் என்ற அளவில் அங்கு அதிக அதிகாரம் கிடைக்குமென்பதே. இது நடந்தது 1575 வருஷத்தில். போலிஷ் தலைமை ஸ்தானம் காலியாக விருந்தது. கடைசியாக திறமைசாலியான ஸ்டீபன் பாத்தோரி (Stephen-Bathori) என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

போலந்துதேசத்தின் விவசாயி

ஸ்டீபன் ரஷியாவோடு நீண்ட போர் தொடுத்தார். இதன் வெற்றியில் தான் இவர் பெருமை அடங்கியுளது. ரஷியாவின் பெரும் நகரங்களைச் சூறையாடினர். கிழக்கு எல்லையில் டார்டார் என்றொரு ஜாதியினர். இவர்களையும் எதிர்த்து ஜெயித்தார். அவர்களின் நாடு போலந்தோடு சேர்க்கப்பட்டது.

வீரன் ஸ்டீபன் பாத்தோரி இறந்தார். பின் இரண்டு நூற்றாண்டுகள் போலந்தின் சரித்திரம் குழப்பமுடையதாகவே காணப்படுகிறது. இந்த சமயத்தில் தலை சிறந்து விளங்கினவர் ஜான் சோபீஸ்கி (John Sobieski.)

ஜானுக்குப் பதினாறு வயது. தமையனின் பெயர் மார்க். இருவரும் படிப்பின்பொருட்டு பாரீசுக்கு சென்றனர். ஓய்வு நாட்கள் வந்தன. இருவரும் துருக்கியில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தனர். தங்கள் தேசமான போலந்தில் கலகமேற்பட்டு விட்டதாகக் கேள்விப் பட்டனர். திரும்பினர் வீடு. கலந்தனர் கலகத்தில். தமையன் மார்க் கொல்லப்பட்டார். ஜான் கலகத்தை யடக்கி பெரும் பெயர் பெற்றான்.

துருக்கியால் எல்லார்க்கும் ஆபத்தென்று தெரிந்தது. அவர்களும்

போல்சைக் கண்டு பயந்தனர். முக்கிய காரணம் ஜான் அவர்களைத் துரத்தியடித்ததே. இந்த சமயத்தில் அரசன் இறந்தான். எல்லோரும் ஏக மனதாய் ஜான் சோபீஸ்கியைத் தலைவனாகும்படி வேண்டினர். அதற்கு இசைந்தான். ஜான் III என்ற பெயரோடு பட்டமேறினான். நாட்டில் சமாதானம் நிலவியது. மக்கள் சந்தோஷத்தோடு வாழ்ந்தனர்.

ஆனால் அரசன் ஜானுக்குச் சுகமில்லை. அவன் மனைவி பிரஞ்சு தேசத்தைச் சார்ந்தவள். நல்ல குணமில்லை. இதனால் பல தொந்திரவுகள் வந்தன. இது சமயம் துருக்கியோடு போர் செய்ய வேண்டி வந்தது. மன்னன் மனசாந்தியடைய யுத்தத்தில் இறங்கினான். முன் போலவே வெற்றியடைந்தான். வீர முரசு சப்திக்கு நகரத்தினுள் பிரவேசித்தான். ஆனால் தனது பிரபுக்களுள் சச்சரவிருப்பதைக் கண்டான். போலந்துக்கு நற்காலமில்லை என்றான். இராஜ்ய பாரத்தை விட்டு விலகினான். தனிமையான இடத்திற்குப் போய் படிப்பிலும் கடவுள் சிந்தனையிலும் காலம் கடத்தி இறந்தான்.

போலந்தைப் பிடிக்க பக்கத்து நாடுகள் காந்துக் கொண்டிருந்தன, அவைகளுள் முக்கியமானது ரஷியா. பெரும் போர் மூண்டது. போலீஷ்காரர்கள் துணிந்து யுத்தம் செய்தனர். கணக்கற்ற வீரர்கள் மடிந்தனர். கடைசியாக போலந்து வீழ்ந்தது. இதன் நாடுகளை ரஷியா, பிரஷ்ஷியா, ஆஸ்டிரியா இம் மூன்றும் பங்கு போட்டுக் கொண்டன.

1795—1815 இவ் வருஷங்களின் இடையே அநேக போலீஷ்காரர்கள் பிரான்ஸுடன் சேர்ந்தனர். நெப்போலியன் தலைமையில் பிரான்சுக்கு உதவி செய்தனர். இதனால் தங்கள் நாடு விடுதலை யடையு மென்று நம்பினார்கள். நெப்போலியனும் சிறிது உதவி செய்தார். பிரஷ்ஷியாவினிடமிருந்தும் ஆஸ்டிரியாவினிடமிருந்தும் போலந்தின் பெரும் பாகங்கள் பிடுங்கப்பட்டன. விடுதலை கிடைத்தது. போலீஷ் மக்கள் ஊக்கம் பெற்றனர். நாடு முன்னேற்றம் அடையுமென்று நம்பினார்கள். ஆனால் உள்நாட்டு தகராறு வந்தது. தேசம் ரஷியாவின் கைவசமாயிற்று. நூற்றுக்கணக்கான போலீஷ் வீரர்கள் அடிமை வேலை செய்தனர். ரஷியா சுரங்கங்களில் போலீஷ்காரர்கள் கூலிவேலை செய்தனர். போலந்தின் கண் காட்சி சாலைக ளெல்லாம் செண்ட் பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) கொண்டு போகப்பட்டன. ஆக போலீஷ் மக்கள் சுதந்திர உணர்ச்சியையே மறந்து போகும்படியான மார்க்கங்கள் கையாளப் பட்டன.

இப்படி யெல்லா மிருந்தும் போலந்தின் வீரம் அடியோடு அழிந்து போகவில்லை. தலை தூக்கியே நின்றது. போலந்தின் சுதந்திரம் பிரட்டிரிக் தி கிரேட்டின் (Frederick the Great) கண்களை உறுத்தியது. ரஷியாவின் கேதரின் II (Catherine II) டையும் ஆஸ்டிரியாவின் மரியா தெரசா (Maria Theresa) வையும் தூண்டினர். 1772-ம் ஆண்டு யுத்தம் நடந்தது. போலந்தை மூவரும் பங்கு போட்டுக் கொண்டனர். அதிலிருந்து போலந்தின் சுதந்திரம் நிச்சயமாக ஸ்தாபனம் செய்யப்படவில்லை. பக்கத்திலுள்ள வல்லரசுகள் ஒன்று விட்டு மற்றொன்று அடிமையாக்கிக் கொண்டே இருந்தன. ஆனால் பொது ஜனங்களின் சுதந்திர தாகம் மறைந்து போகவில்லை. அடிக்கடி கிளர்ச்சிக்கு வழி தேடிக் கொண்டே

வந்தனர். கடைசியாக கடந்த மகா யுத்தம் முடிந்தது. 1918—ல் போலீஷ் குடியரசு ஸ்தாபிக்கப் பட்டது.

இவ்விதமாக பலவித சோதனைகளுக்கும் போலந்து உள்ளாக்கப் பட்டது. ஆனால் மக்கள் வீரம் நிறைந்தவர்கள். சுதந்திரத்தை உயிர் போல் கருதுகின்றவர்கள். இதன் முடிவாக சுயராஜ்யத்தை மறுபடியும் மறுபடியும் ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள்.



போலந்து தேசக் குதிரைப் படை உலகிலுள்ள குதிரைப் படைகளில் சிறந்த வகுப்பைச் சேர்ந்ததென்று கூறப்படுகிறது.

இப்போது மீண்டும் போலந்துக்கு சோதனை காலம் வந்து விட்டது. எவ்வாறு கடைத்தேறுகிற தென்பதைப் பார்ப்போம்.

பின்லாந்து

சில வருஷங்கட்கு முன்—பின்லாந்து உலகை அதிசயிக்கும்படி செய்து அமெரிக்காவுக்கு தான் பட்ட கடனைத் தீர்த்தது. இவ் விஷயத்தில் மோசமாக நடந்து கொண்ட வல்லரசுகளும் திடுக்கிட்டன. இன்று மறுபடியும் பின்லாந்து நம் கவனத்தைக் கவர்கிறது. காரணம் அதற்கு ரஷியாவால் ஏற்பட்டிருக்கும் ஆபத்தே.

பின்லாந்துக்கு கிழக்கே ரஷியா. இரண்டிற்கும் எல்லையாக உள்ளது நீண்ட பூமியே. மேற்கே இருப்பது சுயுடன் (Sweden) இரண்டையும் பிரித்து நிற்பது போத்தினியா (Gulf of Bothnia) என்ற சிறு கடல். ஆனால் வடமேற்கில் பின்லாந்தும் சுயுடனும் பூமியால் சேர்ந்திருக்கின்றன.

பின்லாந்து பெரிய தேசம் தான். விஸ்தீரணம் 150,000 சதுர மைல். இங்கிலாந்தைப் போல் மூன்று பங்கு கொண்டது. ஆனால் ஜனத்தொகை 3 லட்சந்தான். இதன் முக்கிய வருவாய் மர வியாபாரத்தால்; 62¼ லட்சம் ஏக்கரா காடுகளை யுடையது. ஐரோப்பாவிலேயே ரஷியாவைத் தவிர வேறு எங்கும் இவ்வளவு பெரிய காடு கிடையாதாம். ஹெல்சின்கி (Helsinki) என்பது தலைநகரம். ஆனால் அநேகர் அதை ஹெல்சிங்பார்ஸ் (Helsingfors) என்றே சொல்கிறார்கள். தலை நகரம் அழகுடையதுதான். மக்களின் முன்னேற்றத்தில் உள்ள ஊக்கத்தை அது விளக்குகிறதாம். பரந்த வீதிகள்; ஸ்கேன்டிநேவியன் முறையில் அமைக்கப்பட்ட கட்டிடங்கள்; வண்டிப் போக்கு வரத்துக்கள் அதிகம்; எங்கும் ஜனக்கூட்டம்.

பின்லாந்து ஜனங்களும் எஸ்டோனியன்ஸ்சும் (Estonians) ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் தானும் கி. மு. 3000 வருஷங்கட்கு முன்; யுரால்சுக்கும் (Urals) வால்காவுக்கும் (Volga) இடையேயுள்ள பூமி; இதிலிருந்து புறப்பட்டவர்களாம் இவர்கள். ஒரு கூட்டத்தார் அதிக தைரியசாலியாக விருந்தனர். சிறு கடலைக் கடந்தனர். கிழக்கு பின்லாந்தில் வந்து தங்கினர். சுயூவோ (Suo) என்றால் அவர்கள் பாஷையில் தண்ணீர் நிறைந்த இடமாம். தாங்கள் தங்கிய பூமியை சுயூமி (Suomi) என்று அழைத்தார்கள். இன்றும் பின்லாந்து ஜனங்கள் தங்கள் பூமியை இப்பெயரால் தான் சொல்கிறார்களாம்.

பதினேழாவது நூற்றாண்டின் பிற்பகுதி; ரஷியா எழுந்தது; பின்லாந்தை சூயுடன்காரர்களிடமிருந்து கைப்பற்றியது. சார் பின்லாந்தின் பெரிய அதிபதி (Grand Duke) ஆனான்.

கடந்த ஐம்பது வருஷகாலம்; பின்லாந்து ஜனங்கள் கண் விழித்தனர்; சுயராஜ்யம் பெற விரும்பினர். 1917—ஆண்டு; செம் புரட்சி (Red Revolution) ஏற்பட்டது. பின்லாந்தில் பெரும் உள்நாட்டு கலகம்—ஒரு பகுதியினர் ரஷியாவாலும் மற்றொரு பகுதியினர் ஜெர்மனியாலும் தூண்டப்பட்டனர். விடுதலைப் போர் என்று வீரத்துடன் யுத்தம் செய்தனர். கடைசியில் வேண்டிய விடுதலையும் கிடைத்தது. பின்லாந்து சுய ஆட்சி பெற்ற நாடானது.

சுய ஆட்சி பெற்றபின்; அதாவது கடந்த சுமார் இருபது வருஷங்களாக பின்லாந்து இருந்த நிலைமையைக் கவனிப்போம்.

அரசாங்கம் சிறிது குழப்பமாகவே இருந்து வந்தது. அதிலும் சில சமயங்களில் பார்க்க வேண்டும். பெரும் உள்நாட்டு கலகம் ஏற்பட்டு விடும் போல் தோன்றும். 1928 ஆண்டு வரையில்; பொது உடமைக்காரர்கள் அதிக தொந்திரவு செய்து வந்தனர். ஆனால், அவ் வருஷத்துடன் அடியோடு கலைக்கப்பட்டனர். 1932—ஆண்டு வரையில் பாசிஸம் தலை தூக்கி நின்றது. பலத்த உள்நாட்டு சச்சரவு ஏற்படும்போல் தெரிந்தது. ஆனால் நற்காலமாக கடைசியில் எல்லாம் அடங்கி விட்டன. கடந்த சில வருஷங்களாக பின்லாந்து நல்ல நிலைமையில் தான் இருக்கிறது. இன்று கியோஸ்திகால்லியோ (Kyostikallio) என்பவர் அதன் தலைவர். சமதர்ம

காதலர் களிகூற்று (உர்தூ கவிநயம்)

1

"புலமை இனிமை" என்பர். எம்மொழியிலும் வசனத்தைவிட கவிகளுக்குப் பெருமை யதிகம். புலவன், தன் மனக்கண் முன் தோன்றும் காட்சியை கவிகள்மூலம் சித்திரித்து விடுகிறான். அக் கவிகளைப் பாடி ரசிக்கும்போது, அதில் கூறப்படும் சம்பவம் நேரில் நிகழ் வதைப்போ லிருக்கும்.

பெரும்பாலும் புலவர்கள், தம் கவித்துவத்தை ஒரு நாயகனும் நாயகி யும் பிரிய நேர்ந்து நினைந்துருகும் காட்சியை சித்திரிப்பதில் வெளிப்படுத்தி காட்டுவர். அங்ஙனம் ஒரு உர்தூகவி சித்திரிக்கும் காட்சி பின்வருமாறு:—

நாயகனைப் பிரிந்த நாயகி தன்னை சிங்காரித்துக் கொள்ள மாட்டாள். அங்ஙனமிருக்க நாயகி, ஒருநாள் நன்னீராடி, தலைவாரி, பூச்சூடி பொட்டிட்டுக் குதூகலங் கொண்டாள். இப் புதுமைதனைக் கண்ட தோழி வினவு கிறாள்:—

"நதீஅனகின் பன்கனே அவ்ர் பச்பச் பர்ஸேபஹார்
மை பூச்சோ(ன்)தோ ஸகி, தூலேஹிபர்கியோ சிங்கார"

(உன் நாயகன் நதிகள் பல கடந்து, வனங்கள் பல தாண்டி, மலைக் குன்றுகள் பலவற்றைக் கடந்து, தூரத்தில் வதிகின்றாரே, அடி ஸகி, பிரி வில் இந்தச் சிங்காரமெல்லாம் எதற்கென்று உன்னைக் கேட்கிறேன்.)

அதற்கு நாயகி விடையளிப்பது:—

"ஆஜ் சந்திரமான் தோஜ்ஹை ஷஉகீ சத்வத்சு(ன்) அவ்ர்,
ஹமரி அவ்ர் தூர்க்கபால்கீ நஜர்பரே எக்டோர்"

(இன்று 29-ம் நாள். அஸ்தமித்ததும் இளஞ் சந்திரன் தோன்றுவான். எல்லோரும் உப்பரிகைகள்மீது ஏறி, சந்திரமானைக் காண்பார்கள். அங்கு என் நாயகரும் காண்பார்; இங்கு யானும் காண்பேன். அப்போது எங்கள் இருவர் பார்வையும் சந்திரக் கண்ணாடியில் பட்டு பிரதிபிம்பிக்குமல்லவா?)

குடியரசுக் கட்சி (The Social Democrates) அரசாங்கத்தை நல்ல ஆதரவுடன் நடத்துகிறது.

இன்று உலகிற்கே குறிப்பாக ஐரோப்பாவிற்கு ஒரு பெரும் சோதனை காலம். அந் நிலைமை பியன்லாந்திற்கும் ஏற்பட்டு இருக்கிறது.

வல்லரசுகள் போர் செய்கின்றன. பிறர் பொருட்டு என்று பறை சாற்றினும் தற்காப்பிற்குத் தான். பின்லாந்து எதிலும் தலையிட வில்லை என்கிறது. ஆனால் ரஷியா இதை சும்மா விடவில்லை. அதனுடன் பலமாகப் போராடி வருகிறது. எதிர் காலம் என்ன ஆகுமோ !

2

நாயகனும் நாயகியும் ஊடல் கொள்கின்றனர். நாயகி தன் உள்ளக் கிடக்கைக்கு உபமானங் கூறுகிறாள்:—

''ஜின் அக்யன்மே தூபஸே அவர் கோவ்ந ஸமாய்,
பரீஸராய் தேக்கே பதக்ந ஆயேகோய்''

(எந்தக் கண்ணில் தங்கள் உருவம் இடம் பெற்றுக்கொண்டதோ அங்கு மற்றொருவனின் உருவம் இடம் பெறுமோ? சத்திரம் நிறைந்து கிடப்பதைக் காணும் வழிப்பிரயாணி அவ்விடத்தை யணுகுவனோ!)

3

நாயகனும் நாயகியும் விட்டுப்பிரிய வேண்டும். பிரிவாற்றாமைக் கஞ்சும் நாயகி, நாயகனின் கரத்தை பற்றி நின்றாள். நாயகன், தன் கரத்தை அவள் பாலினின்றும் விடுவித்துக்கொண்டு, செல்லுகின்றான். நாயகி அவனை நோக்கிக் கூறுகிறாள்:

''ஹாத் சுடாயே ஜாத்ஹோ நிர்பல் ஜான்கே மோஹே
ஹிருதய ஸேஜப் ஜாவோகே ஸபல்பிதோங்கி தோஹே''

(என்னைத் தாங்கள் நிர்ப்பலமானவள் என்றெண்ணிக் கொண்டல்லவா, கரத்தை விடுவித்துக் கொண்டோடுகின்றீர்கள்; என் ஹிருதயத்திலிருந்து தாங்கள் வெளிப்பட்டுச் சென்று விடுங்கள். பார்க்கலாம்; அப்போதல்லவோ, தாங்கள் பலவான்!)

வாழ்த்துச் செய்தி

நறுமணம் கமழும் தீந்தமிழ் அமுதம் சுரக்க, உயரிய கருத்துடன் எளிய நடையுடன் வீண்வாத மற்று உண்மையைப் பகரும் பல்லோர் தம் விஷயதான கட்டுரையுடன் தாய்நாட்டுப் பெரியார்களின் பொன் மொழியும் அவர்தம் நல்வாழ்வும் சித்திரித்துக்காட்டும் ஓவியக்காரன்போல் பிறநாட்டு நல்லறிஞர் உயரெழுத்து தமிழ் மொழியில் மிளிரும் மொழிபெயர்ப்புடன் முக்கால மாறுதலில் வாலிப சமுதாயத்தின் கடமை விளக்கத்துடன் ஒய்யாரமாய் தமிழ்த்தாய் மடியில் கொஞ்சி விளையாடி அன்னைக்கு தனிப்பெரும் பெருமையைத் தந்ததோடு வருங்கால சேவையை ஆர்வமுடன் எதிர்நோக்கும் ''ஆனந்தன்'' கொடுக்கக் குறையாத ''போதினி'' சுதந்திரக் கனல்மூண்டு வாலிப வீறுகொண்டு கால் நூற்றாண்டின் வெற்றியாம் ''வெள்ளி விழா'' வைக் கொண்டாடப் புகும் பொது நலத் தொண்டன் வரும் ஆண்டுகளிலும் நற்கனியாம் சுதந்திர வீரக் கனியை வாலிப வீரமணிகளுக்கு ஈந்தருள வீர சுதந்திர அன்னை அருள் பாலிப்பாளாக!

ரா. ஷண்முகம், தேவூர்.

தேசீயக் கல்வி

—:0:—

(டர்பன்-திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.)

நம்மவரிற் பலர், "தேசீயக் கல்வி" யென்பதற்குத் தங்கள் மனம் போனவாறு பத மாத்திரையில் பொருள்படுத்திக் கொண்டு கூத்தாடுகின்றனர். ஆலோசிக்காமல் அவ்விதஞ் செய்வது பெரிய பிசகாகும். "தேசீயக் கல்வி" என்பதை ஒருசிலர் தேசபாஷாக் கல்வி என்றும், வேறு சிலர் தாய்ப்பாஷை வாயிலாய்க் கற்றுக் கொடுக்கப்படுவது என்றும் மற்றுஞ் சிலர் இந்தியா முழுவதிலுக்கும் பொதுப் பாஷையாகக் கூடியதென்று சிலர் கருதும் "இந்தி"பாஷாக் கல்வியே யென்றும் பற்பல விதமாகத் தங்கள் யுக்திக்குகந்தாற்போல பொருள் படுத்தி விடுகின்றனர். இவையனைத்தும் "தேசீயக் கல்வி"யாகுமா வென்று சிறிது ஆராய்வோம்:

நேயர்களே! இவ்வாறு பொருள் படுத்துவதெல்லாம், பாஷாக்கல்வி என்ற ஒன்றனுள்தான் அடங்குவதாகும். சுதேச பாஷாக் கல்விதான் தேசீயக் கல்வி என்றபொழுதும் விசேஷமாக யாதொரு வியாக்யானங்களுமின்றி தானே பாஷாக் கல்வியென்று இனிது விளங்குகிறது. தாய்ப்பாஷை வாயிலாகக் கற்றுக் கொடுக்கப்படுவதுதான் தேசீயக் கல்வி என்று சொல்லும் பொழுதுங்கூட ஏதோ சிறிது மயக்கமிருப்பதுபோலத் தோற்றினும் சிறிதூன்றி யோசிக்கும்பொழுது அதுவும் பாஷாக் கல்வியினுள்ளேயே அடங்கிவிடுவது நிதர்சனமாகும். தற்போதுள்ள கல்வி இலாகாக்களில் கற்றுக் கொடுக்கப்படும் முறை முழுவதும் பாஷாக் கல்விதானென்பது அறிஞர் பலர் ஒப்பிய விஷயமாகும். இம்முறையே தாய்ப்பாஷையின் மூலமாகக் கற்றுக் கொடுக்கப் படுவதென்னின் பாஷாக்கல்வியே யன்றி வேறல்ல.

பாஷாக்கல்வி யென்பது ஒரு பாஷையின்கண் தேர்ச்சி பெற்று பண்டிதனாக ஆக்கிவிடுங் கல்வியேயாகும். ஒரு பாஷையில் பூரண பாண்டித்தியம் பெற்று பண்டிதனாய் விடுவதில் நாட்டிற்கு பெரும்பயன் கொடுப்பது இல்லையாகலின் அது எவருக்கும் அவ்வளவு அவசியமென்று சொல்லுவதற்கில்லை. ஒரு பாஷையை அதாவது வழக்கத்தில் பெரும்பாலுமுள்ள ஒரு பாஷையைச் சரியாய் எழுதவும் படிக்கவும் பேசவும் மட்டும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் தான். ஆனால் தற்போதைய வழக்கிலுள்ளபடி பாஷா நிபுணனாகக் கற்றுக் கொடுக்கப் படுங் கல்வியால் நாட்டின் செல்வம் விருத்தியாவதற்கேதுவில்லை. பாஷாக்கல்விக்கென்று வீணில் காலமெல்லாம் அவமே கழிக்கப் படுவதால் தான் நம் இந்தியா இத்துணை ஏழ்மை நிலையிலிருந்துகொண்டிருக்கிறது. நாளையதினம், நியாயஸ்தலங்களெல்லாம் மூடப்பட்டு பஞ்சாயத்து முறை ஏற்பட்டு அப் பஞ்சாயத்து

களில் பட்டதாரிகளான வக்கீல்கள் பாரிஸ்டர்கள் ஆஜராகக் கூடாதென்ற சட்டம் பிறக்குமானால் அவர்கள் பாடெல்லாம் என்னவாகுமென்று நினைக்கிறீர்கள்? வெகு திண்டாட்டமே யாகுமன்றோ? ஆகையால் பாஷாக்கல்வி ஒரு நாட்டின் செல்வ நிலைக்குச் சிறிதும் பயன்படாதென்று வெள்ளிடைமலையாய்த் தெரிகிறது.

மேலும் யோசியுங்கள்; பாஷாக்கல்வியைத் தற்போது நமது இந்தியத் தாய் நாடுகிறாளா? நாட்டின் பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதற்கான துறைகளின் முறைகளையே யன்றோ தெரிந்துகொள்ள வெகு ஆவலாக விருக்கிறது! நாட்டின் பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதற்கான துறைகளாகிய விவசாயம் வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றில் நம் முன்னோர் வெகு தேர்ச்சிபெற்று தேசத்தின் செல்வத்தைச் சிறிதும் குன்றாதவாறு காத்துவந்தனர். இதுவே அவர்கள் முதல் வேலையாக விருந்து வந்தது. இதற்குப் பிறகே அவகாசமுள்ள நேரங்களிலெல்லாம் காலத்தை அவமே கழிக்காது ஏனைய பயன்படும் விஷயங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்தி அவைகளிலும் முதன்மை பெற்றிருந்தனர்.

நமது பூர்வீக இந்தியாவை உயரிய சைத்ரீகர்கள் உத்தமத் தொழில் நிபுணர்கள் அரசியற் திறமையாளர்கள் வணிக வல்லுனர் முதலியோர் அலங்கரித்து வந்தனர். நாட்டின் பொருளாதார நிலைமைக்கு அடித்தானமாக அமைந்து கிடக்கும் சுதேச விவசாயம், சுதேச வர்த்தகம், சுதேசக் கைத்தொழில் இவைகளைக் கற்றுக்கொள்ளும் கல்வியே தற்சமயம் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக மிக அவசியமாக வேண்டப்படுகிற தாகலின், அதுவே தேசீயக் கல்வி யெனப்படும். தொழிற் கல்விதான் நாட்டின் பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்யக்கூடியதாக விருக்கிறதால் பாஷாக்கல்வி அத்தனை அவசியமில்லை யென்று கூறினோம். சிறிது கவனியுங்கள்! மேனாட்டின் போதனாமுறைக்கும் நம் நாட்டின் போதனாமுறைக்கும் எட்டமுடியாத அத்தனை வித்தியாச மிருக்கிறது. அங்கு பாஷாக்கல்வி பிரதானமாகக் கருதப்படாது. பாஷாக்கல்வி ஆரம்பிக்கும் பொழுதே தொழிற் கல்வியுங் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இதனால் ஒருவன் தான் பயின்ற தொழிலின் தயவால் பொருள் சம்பாதித்து சுயேச்சையாய்க் காலங் கழிக்க வலுப் பெறுகின்றான். பாஷாக் கல்வியே பிரதானமாகக் கற்றுக் கொடுக்கப்படும். நம் இந்தியா நாட்டில் எவனும் சுயேச்சையாய் வருமானஞ் செய்து ஜீவிக்க முடியாதவனாய்ப் பிறரையே எதற்கும் எதிர்பார்த்து ஏங்குகின்றான். கல்வி யிலாகாக்களில் போதனா முறைகள் பாஷாக் கல்வியை விட்டு தொழிற்கல்வி கற்றுக் கொடுக்கும்படி திருத்தி அமைக்கப்படும்போதுதான் இந்தியா உலகத்தின் புதிய வரிசைக் கிரமத்தில் முதன்மை பெறும்.

நம் நாட்டின் பொருளாதார நிலைமைகளைச் சீர்திருத்தி விருத்திசெய்ய தொழிற்கல்வி கற்றுக் கொடுக்கப் பல பாடசாலைகள் ஆங்காங்கு ஸ்தாபிக்க முயற்சிக்க வேண்டும். தொழிற் கல்விதான் தேசீயக்கல்வி யென்பது பல அறிஞர் துணிபு. இந்த தேசீயக்கல்விக்காக முயற்சிக்க வேண்டியது ஒவ்வொரு இந்தியர்களின் கடமையாகும்.

'பூ'வும், 'பூவை'யும்

(அரு. ஆறுமுகம்.)

★

பூக்களில் மிக்க உயர்வாம் ரோஜா;
அழகுடை பூக்க ளெதற்கும் அரசது;
மணமுடை மலர்க ளெதற்கும் மன்னன்:
மக்கள் பிறப்பில் மிக்க சிறப்பு,
பக்குவ மான பருவ மங்கையே;
இயற்கை யழகால் இலங்கும் நங்கை;
மணம் பெருக்கும் மகா ராணியே.
ரோஜா அழகை "ராஜா!" என்று,
போற்றி விரும்புவர் புவியில் பலரும்:
அந்த விதமே அணங்கைப் பற்றியும்.
மணத்துக் காக மலரை மதித்து
நாட்டங் காட்டுவர் நம்மில் அநேகர்:
மணத்திற் காக மணமுறு மங்கையைப்
பற்றிக் கொள்ளச் சுற்றுவர் எங்கும்.
மணமும் அழகும் இணங்கி ஒன்றாய்
களிதரு மங்கையோ, ஒளிபுறு மலரோ
வேட்டப் படுவது ஒருசில ரால்தான்.
அழகும் மணமும் இல்லையேல் பயனென் ?
இரண்டும் சான்ற இரோஜாப் "பூ"வை
மிருகத் தனமாய்க் கொய்பவ ருக்கு
ரோஜா முட்கள் கூரால் குத்தும்:
இரண்டும் ஆன்று இலங்கும் "பூவை",
பலவந்த மாய்தனைப் பற்ற வருவோரை,
வெற்பினும் வலிய கற்புக் கருவியால்
கொன்றே தீர்த்து வென்று விடுவாள்.
பூவும், பூவையும் பொலிவுடன் உலகில்
வாசனை மணத்தால் வழங்கி வருக.
ஆண்டவனை நாம் வேண்டி வாழ்வோம்.

வீடுமன் இல்லாத சேனை

(எம். சாம்பசிவம்.)

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் போர் மூண்டு விட்டது. யுத்த களத்தில் தயாராக நின்ற இரண்டு பக்கத்துச் சேனைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. 'ஓ' என்ற பெரிய சப்தம், வானைப் பிளந்து கொண்டு சென்றது. அண்ட கடாகங்க ளெல்லாம் கொழங்கி யுதிர்ந்தன. கை போனவர்களும், கால் போனவர்களும், தலை போனவர்களுமாக அடியற்ற மரம்போல் யுத்த வீரர்கள் சாய்ந்தார்கள். யானைகளுங் குதிரைகளும் இறந்தன. இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது, இருப்புக் கருவிகளின் 'படார் படார்' என்ற சப்தமும், ஒளி வீசும் மின்னலும் யாரையும் பிரமிக்கச் செய்தன. இயற்கை தேவி, கோர வடிவத்தோடு தலை விரித்தாடினாள், அந்த யுத்த அரங்கத்தில்.

இப்படி ஒருநாளல்ல. ஒன்பது நாள்கள் முடிந்தன. பத்தாம் நாள் பிறந்தவுடனே மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. வீடுமனும் திட்டத் துய்மனும் மிகுந்த வீரத்தோடு அணிவகுத்து சேனாதிபதிகளாகத் திகழ்ந்தார்கள்; அவரவருடைய சேனையின் மத்தியில்.

இரண்டு சேனைகளும் கை கலந்தன; பத்தாம் நாளும். பேரிரைச்சலோடு போர் அபாரமாக நடந்தது. வீழ்ந்த வீரர்களை இரத்த வெள்ளம் அடித்துக் கொண்டு செல்கிறது. காலை நேரமும் மத்தியான நேரமும் முடிந்தது. ஆனால், யுத்தம் முடிந்து விட வில்லை. மூலைக்கு மூலை தாக்கின; படைகள். வீடுமன், ஓர் பக்கத்தில் சாய்ந்தான்.

அவன் கௌரவரது சேனாதிபதியல்லவா? அதனால் கௌரவரது— மூலைக் கொன்றாகப் பிய்த்துக்கொண்டோடின சேனைகள், 'வீடுமனை'ச் சூழ்ந்து கொண்டழுதன. கிருஷ்ணன், அர்ச்சுனன் உள்ளிட்ட பாண்டவர் சேனையும் அழாமல்—கண்ணீர் உகுக்காமல் இல்லவே இல்லை. அந்தப் பொழுதும், அழுகையிலேயே முடிந்தது.

பதினோராம் நாள் உதய காலை, இருளை வெருட்டிக் கொண்டே தோன்றியது. பாசறைகள் தோறும் சங்கநாதம் முழங்கின. போர் முரசங்கள் முழங்கின. வீரர்கள், ஆரவாரத்தோடு யுத்த களத்தை அடைந்து அணி வகுத்து நின்றார்கள். இன்றைக்குத் துரோணர், கௌரவருடைய சேனாதிபதியாகத் திகழ்ந்தார்.

பாண்டவர்கள் சேனையைத் திட்டத் துய்மன் அணிவகுத்து யுத்தத்திற்குத் தயாரானான். அந்த அணிவகுப்பில் வீரமும் உற்சாகமும் கலந்திருந்தன. ஆனால், துரோணர் வகுத்து நின்ற கௌரவரது படையின்

அணிவகுப்பு, மிகவுஞ் சோக முடையதாகத் தோன்றியது. உற்சாகமும் வீரமும் அங்கே தலைகாட்ட வில்லை. காரணம் வீடுமனில்லாததேயாகும். அதே காரணத்தால் உயிரில்லா சடம்போல் தோன்றியது; கௌரவாது சேனை.

இரவில் நட்சத்திரங்கள் திகழ்கின்றன ; பரந்த வானத்தில்—மெல்லிய தென்றல் இனிமையாக வீசுகிறது. இவைகளால் பயனுண்டா ; ஒரு சந்திரன், அந்த விசும்பில் இல்லாவிட்டால் ? சந்திரனில்லாத இரவும்,—விசும்பும் மக்களுக்கு மகிழ்ச்சிதர முடியுமா ? அது போலவே கௌரவாது படையாகிய வானத்தில், நட்சத்திரங்களாகிய வீரர்கள் இருந்தும், வீடுமனாகிய சந்திரனில்லையல்லவா ? இருந்தால் தானே வெற்றியாகிய நன்மை அடைய முடியும் ?

அழகான மலர் ஒன்றிருக்கிறது. அதில் நிறைந்த இதழ்கள், இருக்கின்றன. இருந்தாலும்.—அதற்குரிய மண மிருந்தால் தானே அது சிறந்த மலராகக் கருதப்படும் ? அதும்பால, படையாகிய மலரிருக்கிறது. வீரர்களாகிய இதழ்களு மிருக்கின்றன. வீடுமனாகிய மணந்தானில்லை; அன்றைய அணிவகுப்பில். அதனால் கௌரவாது படை உற்சாக மற்றிருந்தது.

சிறந்த நாடு இருக்கிறது. வளப்பமுடைய ஊர்களும் நகரங்களும் இருக்கின்றன. அரசர்களும் அரண்மனைகளும், கோயில்களும் மலைகளும் மற்றும் எவ்வளவோ நன்மைகளெல்லா மிருக்கின்றன. இருந்தென்ன பயன் ? பெரிய பெரிய ஆறுகளிருந்தால் தானே அந்த நாட்டிற்கே, ஒரு அழகு—மதிப்பு ? அது போல, படையாகிய நாட்டில், வீரர்களாகிய ஊர்கள், நகரங்களெல்லாம் இருக்கின்றன. இருந்தென்ன பயன் ? வீடுமனாகிய 'ஆறு' இல்லை யல்லவா? இருந்தால் தானே அப் படைக்கு ஓர் உடர்வு—பெருமை ?

யாழ் ஒன்றிருக்கிறது. மிகவுஞ் செவ்விதாகத் தோன்றுகிறது. தோன்றி, என்ன பயன் ? இசையல்லவா அதற்கு முக்கியம் ? அந்த இசைக்குரிய கம்பிகளில்லா விட்டால் அந்த யாழால்—பயனுண்டா? இல்லை. அது போல, படையாகிய யாழுக்கு நால்வகைச் சேனையாகிய அழகிருந்தும் வீடுமனாகிய இசை நரம்பில்லை யல்லவா ? அதனால் அப் படை சோபையற்றிருந்தது.

பெரிய வீடு இருக்கிறது. அதில் மக்களும் நிரம்பி யிருக்கின்றனர். செல்வ மிருந்தால் தானே வாழ்க்கை நடத்த முடியும் ? அது போல, கௌரவர் படை வகுப்பாகிய வீட்டில் வீரர்களாகிய மக்களிருந்தும் வீடுமனாகிய செல்வ மில்லை யல்லவா ? அதனால் பொலிவாகிய வாழ்க்கை யெங்கிருந்துவரும் ?

ஒருவனுக்கு மனமிருக்கிறது. அதில் நல்ல நினைவுகள்—உயர்ந்த நோக்கங்கள் இருந்தால் தானே அது புனித முடையதாகும் ? அது போல் சேனையாகிய மனத்தில் வீடுமனாகிய நல்லெண்ணம் இல்லை. அதனால் பெருமிதமாகிய புனிதம் ஏற்படவில்லை.

'யாககுண்ட' மிருக்கிறது. யாகம் வளர்க்கப் பார்ப்பனர்களும் இருக்கிறார்கள். இருந்தென்ன பயன்; வேத விதிப்படி செய்யாவிட்டால்? அது போல் சேனையாகிய யாககுண்ட மிருக்கிறது. வீரர்களாகிய யாகம் வளர்ப்பவரும் இருக்கிறார்கள். வீடுமனாகிய வேத விதியில்லையே. அதனால், மாற்றார் அஞ்சுந் தன்மையாகிய பயனில்லை.

ஆகவே, வீடுமனில்லாத சேனை எவ்வளவு குறைவாகத்—தாழ்வாகக் கருதப்படுகிறது. இதனால் வீடுமனது போர்த்திறத்தையும் சேனாபதித் தன்மையும் என்னென்று கூறுவது? 'வீடுமன் வீழ்ச்சியால் கௌரவாது பலமும் போய் விட்டது. அப் படையின் பொலிவும் போய் விட்டது. அவர்களது தோல்விக்கும் வீடுமனது வீழ்ச்சியே காரணம்' என்ற கருத்தில் வில்லிபுத்தூரார் தாம் பாடிய "பாரத"த்தில் சித்திரித்துக் காட்டுவதை,

"மதியிலா விசும்புஞ் செவ்வி மனமிலா மலருந் தெண்ணீர்
நதியிலா நாடுஞ் செம்பொன் னரம்பிலா நாதயாழும்
நிதியிலா வாழ்வுந் தக்க நினைவிலா நெஞ்சும் வேத
விதியிலா மகமும் போன்ற வீடும னிலாத சேனை"

என்ற செய்யுளால் அறியலாம்.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

ஆனந்தபோதினி

வெள்ளி விழா நினைவு மலர்

வெகு விரைவில் வெளிவரும்.

★

அறிஞர் கட்டுரைகள், அழகிய சித்திரங்கள்,
உயரிய கவிதைகள், உள்ளமுருக்குங் கதைகள்,
கண்ணைக் கவரும் பல வர்ணப் படங்கள்
இத்தனையுங் கொண்டது.

200 பக்கங்கள். விலை அணா எட்டு.

இன்றே உங்கள் பிரதிகளுக்கு உள்ளூர் ஏஜண்டிடம் சொல்லி வையுங்கள். அல்லது ஆபீஸுக்கு எழுதுங்கள்.

மானேஜர், **ஆனந்தபோதினி ஆபீஸ்,**
சௌகார்பேட்டை, சென்னை.

கொடிபடர்ந்த கொம்பு

[பூவை—அ. க. நவநீதகிருஷ்ணன்.]

★

வாகைக் குளத்தின் வடபுறம் கருணையாறு கடுவேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கிறது. அக் கருணையாற்றின் இரு கரைகளிலும் வானத்தையளாவி வளர்ந்திருக்கும் மருத மரங்கள் கணக்கிட முடியாதபடிக் கவினுற்று விளங்குகின்றன. நீரை யொட்டிய கரையோரங்களில் கண்ணிற்குக் குளிர்ச்சியான பச்சைப் பசுங் கோரைகள் ஒரு ஆள் உயரத்திற்குமேல் அடர்த்தியாக வளர்ந்திருக்கின்றன.

கருணையாறு கிழக்கு நோக்கி ஓடுகின்றது. தெற்குக் கரையிலிருப்பதுதான் வாகைக்குளம். வடகரையிலிருப்பது வஞ்சியூர். கருணையாற்றைக் கடந்துதான் வஞ்சியூருக்குச் செல்லவேண்டும். கருணையாற்றில் நீர் ஓடுவது எங்கும் இல்லாத இனிய விநோதம். என்ன விநோதம் என்று கேட்பீர்களோ? காலையிற் சூரியன் உதயமாய்விட்டால் அடியிற் கிடக்கும் மணல் நீர்மேல் மிதந்துகொண்டிருக்கும். விடிந்துவிட்டால் அந்தத் தண்ணீரைப் பன்றிகூட மோந்து பார்க்காது. அதற்கு முன்னால் என்றால் குளிக்கவும் செய்யலாம், குடிக்கவும் செய்யலாம்.

இந்த ஆற்றில் வழக்கமாய் ஆட்கள் இறங்கிச் செல்லும் வழியல்லாத வழிகளில் யாரும் இறங்கினால் அவர்கள் கதி அதோகதிதான். என்ன அதோகதி! எங்கு பார்த்தாலும் சொரிமணல். ஆள் இறங்கினால் மிக இலேசாய் அகண்ட பாதாளத்தை அடைந்து விடலாம்.

கருணையாற்றின் வடகரையில் உள்ள வஞ்சியூரிலிருந்து ஒரு அழகு மிக்க ஆடவனும் ஒரு அழகுமிக்க மங்கையும் தவறாது ஒவ்வொருநாளும் காய்கறி விற்பதற்காகத் தலையில் காய்கறிக் கூடையுடன் வாகைக் குளத்துக்கு வருவார்கள். இவர்கள் விடிவதற்கு முன்னேயே வஞ்சியூரிலிருந்து வாகைக் குளத்துக்கு வந்துவிடுவார்கள். மாலையில் மணி ஐந்துக்கெல்லாம் கொண்டுவந்த காய்கறி யனைத்தையும் விற்றுவிட்டு வஞ்சியூருக்குத் திரும்பி விடுவார்கள். மங்கைக்குப் பத்து வயதிருக்கலாம், ஆடவனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கலாம். அதுமுதற் கொண்டே இவ்விருவரும் காய்கறி விற்க வாகைக் குளத்துக்கு வரத் தொடங்கி விட்டார்கள்.

இருவரும் என்ன நட்பு! என்ன ஒற்றுமை! என்ன முகமலர்ச்சி! கவலையென்பது கடுகளவும் அவர்கள் உள்ளத்தில் எழுவதில்லையே! நடையாற் கால்வலி மேல்வலி ஒன்றும் கிடையாது. அப்பப்பா! என்ன கதை! ஒருவர்க்கொருவர் மாறி மாறிச் சொல்லிக் கொள்கிறார்கள். கண்டதும் கேட்டதுமா! பழையதும் புதியதுமா! ஆம், ஆம், அவைகள்தாம். அவள் கண்டதை அவனிடம். அவன் கேட்டதை அவளிடம். செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என்பதை இவர்கள்தான் அனுபவிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பேச்சில் கால்வலி மேல்வலி எங்கே உண்டாகப்போகிறது! காண்பார்க்கு, காதலியும், காதலனுமா! தங்கையும் அண்ணனுமா! என்ற ஐயந்தான். அவர்கள் நடையென்ன! உடையென்ன! நாகரீகம் என்பது அவர்களிடந்தான் குடிகொண் டிருக்குமோ!

மங்கைக்குப் பதினைந்து வயதிருக்கலாம். ஆடவனுக்குப் பதினேழு வயதிருக்கலாம். இருவர் உள்ளத்திலும் ஒரு அரும்பு தோன்றிற்று. அந்த அரும்பு மலர வருடம் ஒன்றாய்விட்டது. அந்த ஒருவருடம் இன்றுதான் கழிந்தது. அந்த அரும்பு மலர்ந்துவிட்டது. அந்த என்ன அரும்பு! முல்லையரும்பா? மல்லிகை யரும்பா? அல்லது பிச்சியரும்பா? இல்லையில்லை. காதல் அரும்பு. இந்தக் காதல் அரும்புதான் இன்று மலர்ந்தது. எங்கே மலர்ந்தது தெரியுமா? கருணையாற்றின் கரையோரத்திலுள்ள பசுங்கோரை களுக் கிடையில்தான்.

"வஞ்சி! அதோ பார்த்தாயா! அந்தக் குருவிகள் கீச் கீச்சென்று எவ்வளவு ஆசதிரத்துடன் சத்தம் போடுகின்றன! அந்தக் குருவிகளுக்கு எவ்வளவு பொறுமை! அம்மம்மா! நாம் இருவரும் இவ்வளவு இன்பமாக இருக்கும்போது அவைகளும் இன்பமாக இருக்கக் கருதுகிறதைப் பார்த்தாயா! நம்மைப்போல இன்பம் எய்துவதற்காக அல்லவா தம்முடைய பேடைகளை அவ்வளவு விரைவாகக் கூப்பிடுகின்றன. அதோ! மேலே பார். இந்த மருதமரப் பொந்துகளில் இரண்டிரண்டாக எத்தனை கிளிகள் கூச்சலிட்டு நுழைகின்றன! அந்தக் கிளிகளும் நம்மைப் பார்த்துவிட்டு நாம் கோரைக்குள் மறைந்திருந்து இன்பம் எய்தல்போலத் தாங்களும் மரப்பொந்துகளுக்குள் இருந்து இன்ப மெய்துவதற்காக வல்லவா அவ்வளவு மகிழ்ச்சியோடு கூச்சலிட்டுப் புறப்படுகின்றன. அதோ! மேற்கே பார்! அந்த ஆதவனுக்கு மலையில் வீழ்ந்து மறைய மனம் வரவேயில்லை. நம் இருவரின் நேசத்தைக் கண்டுகொண்டிருக்க எவ்வளவு ஆசை."

"என்ன பூங்கொம்பா! என்னவெல்லாமோ சொல்கிறாயே! எனக்கு ஒன்றும் புரியவில்லை. நாம் இரண்டுபேரும் தினமும் இப்படி............ என்ன!" என்று சொல்லிக்கொண்டே தலை குனிந்தாள் வஞ்சி.

இந்த சமயத்தில் வஞ்சியின் கொண்டையில் அழகிய ரோஜா மலர் ஒன்றைச் செருகிவிட்டான் பூங்கொம்பன். இதை வஞ்சி, கொஞ்சங்கூடக் கவனிக்கவில்லை. சிறிது நேரத்தில் இருவரும் கோரைக்குள் இருந்து வெளி வந்தார்கள்.

இருவர் முகத்திலும் என்றுமில்லாத ஒளி! மலர்ச்சி! மகிழ்ச்சி! ஆ! எல்லாம ஒருங்கே விளங்குகின்றன. வழக்கம்போல் வஞ்சியூரில் தங்கள் வீட்டை இருட்டும் நேரத்தில் அடைந்தார்கள்.

ஒருநாளும் தலையிற் பூ வைக்காத வஞ்சி இன்று புதிதாகப் பூச்சூடியிருக்கிறாள். அவளாகச் சூடிக்கொள்ளவில்லை. சூடியது பூங்கொம்பன். அவன் சூட்டியது வஞ்சிக்குத்தான் தெரியாதே.

வீட்டிற்குள் வந்தாள் வஞ்சி. அவள் தாயார், "ஏண்டி! வஞ்சி! என்றைக்கு மில்லாத வாசனை இங்கே வீசுதே, என்ன?"

அந்த வாசனை வீட்டுக்குள் வந்ததும் தாயார் சொல்லத்தான் அவளுக்குத் தெரிகிறது. கள்ளையுண்ட களிமகன் போல இன்ப மெய்திப் பெரு

மயக்கத்தோடு வருகின்றாள். அவளுக்கு எந்த வாசனை தெரியப்போகிறது! ஒன்றும் புரியாததானே! அவளுக்கு இன்னும் வாசனை வீசுகிறதா? இல்லையா? என்பதுபற்றி, தான் உணர்ந்து சொல்ல முடியவில்லை. ஏதோ தாய் சொல்லுகிறாள், அந்த அளவில் தான் தெரிகிறது.

என்ன வாசனை? என்ன வாசனை? என்று அம்மையும் மகளும் வீடெல்லாந்தான் தேடுகிறார்கள். வஞ்சியின் கொண்டைக்குள் இருக்கும் குட்டு எங்கே வெளிப்படப் போகிறது!

"சரி, வெந்நீர் வைத்திருக்கிறேன். குளித்து விட்டுச் சாப்பிடு" என்றாள் வஞ்சியின் தாய்.

வஞ்சி பின்வாசலுக்குச் சென்றாள். தாய், வெந்நீர்ப் பானையைத் தூக்கிக் கொண்டுவந்து வாசற்படியில் வைத்தாள். வஞ்சி தலையில் வெந்நீரை ஊற்றுவதற்காகக் கொண்டையை அவிழ்த்தாள். அதனுள்ளிருந்து அழகிய ரோஜாமலர் ஒன்று பொத்தென்று கீழே விழுந்தது: பார்த்துக் கொண்டாள் தாய். அந்த மலரைக் கையில் எடுத்தாள். மோந்து பார்த்தாள். வாசனை அப்பூவின் வாசனைதான்.

"என் வஞ்சி! என்னிடம் பொய் சொன்னாய்? ஒக்கலிலே பிள்ளையை வைத்துக்கொண்டு ஊரெல்லாம் தேடினமாதிரி, கொண்டையிலே பூவை வைத்துக்கொண்டு வீடெல்லாம் தேடிப் பாசாங்கு செய்தாயே? காய்கறி விற்ற காசில் ஒரு ரோஜாப்பூ வாங்கினேன் என்று சொன்னால் குற்றமேற்பட்டு விடுமோ?" என்று சொல்லி விற்ற காசைப் போட்டுக் கொண்டுவரும் பையைப்போய் எடுத்துப் பார்த்தாள். தான் காலையில் போகும்போது நிறுத்துக் கொடுத்த காய்கறிக்குச் சரியான விலைப்பணம் இருந்தது. ஆமாம்! இந்தப் பூ காலணா இருக்குமே! இவள் விற்ற காசெல்லாந்தான் கொண்டுவந்து விட்டாளே. அந்தப் பூ வாங்குவதற்கு வேறு காசு ஏது? என்று சொல்லிக்கொண்டே வஞ்சிக்கு வேண்டிய சோறு கறி முதலியவற்றை எடுத்து வைக்கச் சென்றாள்.

பின் வாசலிற் குளிக்க நின்றுகொண்டிருந்த வஞ்சிக்குக் குளிக்க ஓடவில்லை. பூங்கொம்பன்தான் கொண்டைக்குள் பூவை வைத்திருக்கவேண்டும் என்று நிச்சயமாய்த் தெரிந்துகொண்டாள். இப்பவே போய்க் காசுப் பையிலிருந்து காலணாவை எடுத்து ஒளித்துவைத்து விடுவோமா? என்று எண்ணினாள். நாம் இப்போது வீட்டிற்குள் சென்றால் ஏதும் தாய் சந்தேகித்து விடுவாளோ என்று வேறு பயம். இவ்வாறு இருபால் கவருற்று இடையூசலாடுகின்றது வஞ்சியின் மனம்.

ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு குளித்து முடித்தாள். வீட்டிற்குள் வந்தாள். கொண்டுவந்து வைத்த காசுப்பையை வைத்த இடத்தில் போய்ப் பார்த்தாள். காணவில்லை. தாய்தான் எடுத்துக் கொண்டாள் போலிருக்கிறது என்று எண்ணினாள். குட்டு வெளிப்பட்டு விடுமோ என்று அஞ்சினாள். தாய், சாப்பாடு எடுத்து வைத்திருந்தாள். அடுக்களையில் போய்ச் சாப்பாட்டின்முன் உட்கார்ந்தாள். அவளுக்குச் சாப்பாடு செல்லவா போகிறது. நினைப்பெல்லாம் பூங்கொம்பன் மேல் தான் சென்று கொண்டிருக்கிறது. அங்கு உட்கார்ந்துகொண்டே பூங்கொம்பன் பெயரைச் செபிக்க ஆரம்பித்துவிட்டாள்.

கொஞ்சநேரத்தில் தாய் அடுக்களைக்குள் வந்தாள். "ஏன் வஞ்சி! சாப்பிடாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? நான் ஏதும் கோபித்துக்கொள்வேன் என்று நினைத்து வருந்துகிறாயோ? வருந்தாதே, சாப்பிடு" என்று சொல்லி நின்று கொண்டிருந்தாள்.

தாய்க்கு வஞ்சியின் முகவேறுபாடு தெரிந்துவிட்டது. ஏதோ ஒரு ஆடவனை எண்ணித்தான் உருகுகிறாள் என்று எண்ணிவிட்டாள். உடனே, "வஞ்சி! நீ நாளைமுதல் காய்கறி விற்கப் போகவேண்டாம். நான் போய்க் கொள்கிறேன்" என்று சொல்லி வெளிச்சென்றாள்.

வஞ்சியின் தகப்பன் இரவில் வீட்டுக்கு வந்தான். சீக்கிரம் மகளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்க்கச் சொன்னாள். தகப்பனுக்கு, மகள் வஞ்சியைப் பெரிய பணக்காரனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டுமென்று ஆசை. பூங் கொம்பனோ வறுமையில் பெருங் கொம்பன்தான். காய்கறி விற்றுக்கிடைக்கும் காசை வைத்துக்கொண்டு தாயுடன் காலங்கழித்து வருபவன். தகப்பன் கிடையாது. இவனுக்குத்தானா வஞ்சியைக் கலியாணம் செய்து கொடுப்பான் அவள் தகப்பன்!

பூங்கொம்பனோ, வஞ்சியைத் தவிர வேறு பெண்ணை, கரத்தினால் மட்டுமல்ல, மனத்தினாலும் தொடுவதில்லையென்று இன்று மாலையிலேயே முடிவு கட்டிவிட்டான். வஞ்சியும் அப்படி அவன் எண்ணும்படி நடந்து கொண்டாள்.

ஆ! இவர்கள் உள்ளத்தில் எழுந்த காதல் அரும்பு மலர்வதற்கு எத்தனை காலமாயிற்று! இன்றுதான் இன்றுமாலைதான் இப்போதான் மலர்ந்தது அவ்வரும்பு. ஐயோ! உடனேயா கரிந்து விடவேண்டும்!

மறுநாள் முதல் வஞ்சி, காய்கறி விற்கச் செல்வதில்லை. அவள் தாய் தான் செல்கிறாள். வழக்கம் போல் பூங்கொம்பனும் காய்கறிவிற்க வாகைக் குளத்துக்கு வருகிறான். காய்கறி விற்க வஞ்சி யில்லாமல் மனம் செல்ல மாட்டேன் என்று தான் சொல்கிறது பூங்கொம்பனுக்கு. காய்கறி விற்கா விட்டால் பூங்கொம்பனுக்கும் அவன் தாய்க்கும் காலங் கழிவது எப்படி! விற்றுத்தான் ஆகவேண்டும். தினமும் தனியாய்ச் சென்று விற்று வரலானான். வஞ்சியின் தாயும் விற்க வருவாள்.

பூங்கொம்பனிடம் காய்கறி வாங்குபவர்களெல்லாம் "ஏண்டா! பூங் கொம்பா! உன்னோடுவரும் பெண்ணை எங்கே? இப்போ வரவே காணோமே!" என்று தினமும் கேட்டு வந்தார்கள். அவன் அதற்கெல்லாம் வருத்தத்தோடு ஏதும் பதிற் சொல்லுவான்.

வஞ்சியின் தாயிடம் காய்கறி வாங்குபவர்களெல்லாம் வஞ்சியைப் பற்றி, 'பூங்கொம்பனோடு ஒரு பெண் காய்கறி கொண்டு வருமே! அதை ஏன் இப்போ காணவேயில்லை' என்று கேட்கலாயினர். இதிலிருந்து வஞ்சியின் தாய்க்கு, அவள் பூங்கொம்பனை எண்ணி எண்ணித்தான் உருகுகிறாள் என்பது தெரிந்துவிட்டது.

'சரிதான் உருப்பட்டுப் போய்விடும். சாப்பாட்டுக்கு வழியில்லாத பயலுக்குக் கட்டிக்கொடுத்தால் வட்டிக்கு வட்டி கொடுத்துப் பணம் வாங்க வேண்டியதுதான். ரொம்ப நல்லாயிருக்கிறது' என்று மனத்துள் சொல்லிக்கொண்டே சீக்கிரம் ஒரு பணக்காரனைப் பார்த்து வஞ்சியைக் கட்டிக்

லக்ஷ்மிக்கும் சரஸ்வதிக்கும் போர்

("நவயுவன்".)

நாம் கல்வி கற்பதன் நோக்கமென்ன ?

என்ன ! என்ன ! ஏதோ முணு முணுக்கிறீர்களே ! நம் அறிவை விசாலப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு நாம் அனைவரும் பாடசாலைகளில் கல்வி பயில்கிறோம் என்று கூறுகிறீர்களோ ? வாசகர்கள் அபிப்பிராயத்தை நான் ஆமோதிக்க வேண்டுமாக்கும் ! சரி தான் ; நான் உங்கள் அபிப்பிராயத்தை ஆமோதிக்க அதன் பலனாக நான் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்குச் சிபார்சு செய்யலா மென்ற யோசனையோ ?

*　　*　　*　　*

அன்று நடுப்பகலில் நல்ல வெயிலில் காய்ந்த பின்பு மாலை நேரத்தின் ஆரம்பத்திலே மேகத்திரள் யானைத்திரள் போன்று கூட்டமாக வந்து நடு வானத்தில் கருந்திரையை விரித்தன. சிறிது நேரத்திற்குப் பின்பு சிறு தூற்றல் போட்டு நின்று விடவே, நான் என் நண்பனாகிய தென்றலைத் தேடி ஏரிக்கரைக்குச் சென்றேன். அவன் என்னை எதிர் கொண்டழைத்தவனைப் போல் என்னை அன்புடன் தழுவிக் கொண்டான். என்ன விந்தையிது ? அவனுடைய தேகம் வெது வெதுப்பா யிருந்தது.

"நண்பா ; குளிர்ச்சியின் உருவாகிய உன் உடம்பு இன்று வெது வெதுப்பா யிருக்கக் காரணமென்ன ?" என்றேன்.

"வேறொன்று மில்லை : நீ வருவதற்குச் சற்று முன்பு என் மனம் பழங் காலப் புலவர்களைப் பற்றிய சிந்தனையில் லயித்துப் போயிருந்தது. அக் காலப் புலவனொருவனுக்கு இதே இடத்தில் நேர்ந்த கதியைப் பற்றி நினைத்த பொழுது என் மனம் துன்பக் கடலில் நீந்த, அதன் விளைவாக இவ் வெது வெதுப்பு என் தேகத்திலுண்டாகி யிருக்க வேண்டுமென நம்புகிறேன்."

கொடுக்க வழி தேடினான். அவன் இஷ்டப்படியே கலியாணம் நடந்தேறியது.

மலரால் நடந்த மணத்தைப் பார்த்தீர்களா ! காதல் ஒருவனைக் கைப்பிடிக்கும் சுதந்திரந்தான இன்னும் பெண்கள் பெறவில்லையே. பெறாத போது எங்ஙனம் இவ் வஞ்சிக்கொடிக்கு இனிய கொள் பூங்கொம்பன் கிடைப்பான் !

"ஹாம்; இந்த மாலை நேரத்திலே போயும் போயும் புலவர்களைப் பற்றியா சிந்தித்துக் கொண்டிருந்தாய்? சரிதான்; அந்தத் தரித்திரர்களைப் பற்றி நீ நினைத்ததனுற்ருன் உனக்கு இப்பொழுது தன்மைத் தரித்திரம் ஏற்பட்டுவிட்டது போலும்."

"நண்பா! அவர்கள் தரித்திரர்களாய் வாழ்ந்து வந்ததற்கும் காரணமுண்டு. அதை நீ அறிந்திருந்தால் இவ்வாறு பேசமாட்டாய்."

"ம்ம்; நீ புத்திசாலிக் கொக்கு என்று எனக்குத் தெரியாமற் போய்விட்டது. உன் புத்திசாலித் தனத்தைத் தான் கொஞ்சம் காட்டேன்; பார்ப்போம்" என்று நான் ஏளனமாகக் கூறினேன்.

"ஒரு விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ளாமலே அதைப் பற்றிக் கேலியாகப் பேசுவதை விட, அதை அறிந்து அதில் கேலிக் கிடமிருந்தால் பின்பு அதைப்பற்றி ஏராளமாகப் பேசலாம்; அதில் தவறொன்றுமில்லை. அதனல் நான் விஷயத்தை முதலில் சொல்லுகிறேன், கவனித்துக் கேள்" என்ருன் நண்பன்.

என் செவிகளைப் பதமாகத் தீட்டி வைத்துக்கொண்டு அவன் கதை சொல்லத் தொடங்கு முன்பே 'உம்; அப்புறம்' என்றேன். அவனும் தன் கதையை ஆரம்பித்தான்.

"நண்பா! அநேக நூற்றுண்டுகளுக்கு முன்பு நான் ஒருநாள் இவ் வேரியின் மேல் உலாவிக் கொண்டிருந்தேன். இது மாலை நேரம்; அப்பொழுது பஞ்சத்தாலடிபட்ட வயோதிகப் புலவனொருவன் நடக்கவும் சக்தியற்றுத் தள்ளாடிக்கொண்டே வந்து இவ்வால மரத்தின் கீழ் படுத்தான். அவன் அன்னத்தின் முகத்தில் விழித்து எத்தனை நாட்களாயினவோ யானறியேன். படுத்தவுடன் அவன் மூர்ச்சையாகி விட்டான்.

* * * *

ஆதவன் மறைந்து ஆம்பல் மலரும் தருணம். புலவன் ஏரிக்கரையின் மீது புன்னகை பூத்த முகத்தோடு மெய்மறந்து நின்று கொண்டிருந்தான் ஒரு சுந்தர வாலிபனைப் போல.

நான் அவன் மேலாடையைப் பற்றி இழுத்தேன். மலர்களின் நறுமணமனைத்தையும் திரட்டி என்னுள் அடக்கிக் கொண்டு குதூகலத்துடன் சென்று அவனைத் தழுவிக் கொண்டேன். கடைசியாக நான் அவன் மீது ஏரி நீரையும் வாரி இறைத்தேன். அவன் என்னுடைய சேஷ்டைகளைச் சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை. ஆம்; அவன் ஏரியின் மத்தியிலிருந்த ஒரு செந்தாமரை மலரின் அழகில்.........இல்லை; அதன் மீது அமர்ந்திருந்த ஒரு நங்கையின் தெய்வீக வனப்பில் தன் சிந்தையைப் பறிகொடுத்து நின்ருன்.

சிலம்பொலியாகிய 'கலீர், கலீர்' என்ற ஓசை என்னிடையே அலற அத் தெய்வமகள் அவனை அணுகினுள். தன் கரங்களைப் நீட்டிப் புலவன் அவளை வாரி யெடுத்துத் தன் மார்போடணைத்துக் கொண்டான்.

புலவன் கழுத்திலணியப்பட்ட ஒரு ரோஜா மாலையைப் போல் அவளுடைய வலக்கரம் அவனுடைய கழுத்தில் கிடந்தது. அவன் அவளைத் தன் மடிமீது அமர்த்திக்கொண்டு உவகைக் கடலின் உச்ச நிலையை நோக்கி நீந்திக்கொண்டு சென்றான்.

"இவ் வின்பம் என்றும் நிரந்தரமானதா யிருக்க வேண்டுமே!" என்றாள் அவள்.

"தேவி! நீ எதை நினைத்துக்கொண்டு அவ்வாறு கூறுகிறாய்?"

"ஆடவர்களுள்ளத்தை நம்பக்கூடாது. உங்கள் ஹிருதயத்தில் நான் குடிபுக விரும்புகிறேன். நீங்கள் வெறுத்துத் தள்ளினாலும் நான் உங்களை விட்டுப் பிரிய முடியாதபடி உங்கள் உடலோடு நான் ஐக்கியமாக விரும்புகிறேன்; அனுமதி யளிப்பீர்களா?" என்று மோகனப் புன்னகையுடன் கேட்டாள்.

இதைக்கேட்ட புலவன் திடுக்கிட்டான். "தேவி அது எவ்வாறு முடியும்? என் இதயத்தில் முன்பே ஒருத்தி குடி புகுந்து விட்டாளே!"

"அதை நான் அறிவேன். தங்களுடைய அனுமதிமட்டும் கிடைத்தால் போதும். அவளை நான் விரும்பியவாறெல்லாம் ஆட்டிவைக்க என்னால் முடியும். நான் உங்களுடைய உள்ளக் கோவிலில் குடிபுகுந்த பின்பு நானே அத் கோவிலுக்குத் தலைவியாக விருப்பேன். அதன் பின்பு அவளுடைய கடமை எனக்குப் பணி செய்து கிடப்பதேயாகும். மேலும் நீங்கள் என்னை யடைந்த பின்பு அவளிடமிருந்து எவ்வகை இன்பத்தையும் எதிர்பார்க்க முடியாது. நானே அவளைக் குரூபியாக்கி விடுவேன். அவளுடைய பெருமையைக் குறைக்க நான் முற்படுவேன். அதற்கும் தாங்கள் சம்மதிக்க வேண்டும். ஹூம்; முதல் மனைவியிடத்தில் ஆண்கள் செலுத்தும் அன்பை நான் அறியாதவளா என்ன!"

தேவி! அது முடியாத காரியம். என் இருதயத்தில் அவள் மட்டுமே வாழ வேண்டும். அப் பாக்கியம் உனக்கு ஒருபோதும கிடையாது. மேலும் வீட்டிற்குத் தலைவி அவளே. அவளுக்கடங்கி அவள் சொற்படி கேட்டு நடந்தால் நம் மிருவருக்கும் க்ஷேமமுண்டு."

"புலவரே! நான் உம்மை வலிய வந்தடைகிறேன். நீ என்னுடைய பெருமையை அறியாது ஏதேதோ உளறுகிறீர். நான் என்னுடைய வைரியான அவளுக்கு அடிமையாக வேண்டுமாக்கும். அவ் உபதேசத்தைப் பெறத்தான நான் உம்மை நாடி வந்தேனா? முடிவாய்க் கூறுகிறேன். இவ் வுலகில் நானளிக்கும் இன்பமே பெரிது; அப்படிப்பட்ட இன்பத்தைக் கொடுக்க அவளால் ஒருக்காலும் முடியாது" என்றாள் அவள். மோகனப் புன்னகை அவளிட மிருந்து விடை பெற்றுக் கொண்டு சென்று வெகு நேரமாகி விட்டது.

"மூடர்கள் உன்னை விரும்பிப் போற்றுவார்கள். நீ அவர்களையுலகுவில் அடக்கி ஆளலாம். ஆனால் 'ஆயகலைகளறுபத்து நான்கினையும் ஏயவுணர்விக்கும் என்னம்மை— தூய உருப்பளிங்கு போல்வாள்'—வெண்டாமரை

மலர்பூவை இருதய கமலத்தில் வாழும்படியான பாக்கியத்தைப் பெறற புலவர்கள் நீயளிக்கும் இன்மை பெரிதென மதித்து ஒருபோதும் மதிமோசம் போகார். நீ அவர்களை அடைய வேண்டி விரும்பிச் சென்றாலும், அவர்களுடைய இருதயத்தில் உனக்கு இரண்டாவது ஸ்தானந்தான் கிடைக்கும். அது திண்ணம்" என்றான் புலவன். இவ் வார்த்தைகள் அவள் உள்ளத்தில் கூரிய அம்புகளைப் பாய்ந்தனபோலும். அவள் உடுத்திருந்த செந்நிறப்பட்டும் அவள் உடலும் சிறிதும் நிறத்தில் வித்தியாசப் படவில்லை.

"புலவா! நீ என்னை அவமதித்தாயல்லவா? அதன் பலனைப் புலவர்களனைவருமே அனுபவிக்க வேண்டும். என்னுடைய பரிபூரண ஆசியைப் புலவர்கள் பெறுவது அபூர்வம். அப்படிப் பெற்றாலும் நான் அவர்களிடம் நிலைத்து நிற்கமாட்டேன். தங்கள் வாழ்க்கையில் ஒரு தடவையாவது வறுமைப்பேயின் கொடிய அட்டகாசத்தாற் புலவர்கள் பாதிக்கப்படவேண்டும்" என்று அவள் சபித்தாள்.

இதைக்கேட்டபின்பும் புலவன் மனந்தளரவில்லை. "ஹூம்; திருமகளாகிய உனக்குத்தான் பிறரைச் சபிக்குந் திறமையுண்டென்று நீ கருத வேண்டாம்" என்று சினந்து கூறி அவன் தன் வாயைத் திறந்தான். அவன் நாக்கிலிருந்து ஒரு வெண்டாமரைமலர் மேலெழும்ப அதன்மீதிருந்து கலைவாணி பின்வருமாறு சபித்தாள்.

"புலவர்களிடத்தில் மட்டுமல்ல; மானிடராகிய எவரிடத்தும் நீ நிலைத்து நிற்கப் போவதில்லை. காட்டாற்றில் சிக்கிய துரும்புபோல் நீ அலைவாய். அதனால் அறிவாளிகள் உனக்குப் 'பரத்தை' என்ற பட்டத்தைச் சூட்டுவார்கள்."

நண்பன் தென்றல்—இதோடு கதை முடிவுற்றது என்றான். "மூர்ச்சையாகி விழுந்த புலவன் கனவு கண்டபின்பு எழுந்தானா இல்லையா? அவனைத் 'திரிசங்கு சுவர்க்கத்தில்' கொண்டுவந்து வைத்து விட்டாயே?" என்றேன் எரிச்சலுடன்.

"நண்பா! மானிடர்களனைவரும் உறக்கத்தில் கனவு காண்பதென்னவோ வாஸ்தவந்தான். ஆனால் அவர்களுடைய கனவில் திருமகள், கலைமகள் இவர்கள் போன்ற தெய்வப்பிறவிகள் என்றாவது தோன்றியதாக நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"இல்லை."

"புலவன் தெய்வமகளிர் தோன்றிய அசாதாரணமான கனவைக் கண்டான். அதன் பின்பு அவன் பிழைப்பதேது?"

மேல்மலைப் பக்கத்திலிருந்து திடுதிடென்று ஒரு பேரிடி கிளம்பி ஆரவாரத்துடன் என் தலைக்கு மேலே சென்றது. "அதோ பேரிகை அடிக்கத் தொடங்கி விட்டார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் மழைவந்து விடும். அதற்கு முன்பு நானும் என் இனத்தாரும் ஒன்று சேர்ந்து கைகோத்து இவ் ஏரிக்கரையிலே பேய்க்கூத்தாடப் போகிறோம். நீ விரைந்து வீடு செல்" என்றான் தென்றல்.

'உம்' என்று தலையசைத்தேன். ஆனால் அவ்விடத்தை விட்டு நான் ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை. என் மனம் சிந்தனை வயப்பட்டது. முதலில் கம்பரைப்பற்றி நினைத்தேன். அந்தோ! சோணாடு கடந்து சேர மன்னனை அடைவதற்குள், அவர் உணவு கிடைக்கப்பெறாமல் பசியால் வருந்திய விதத்தை அவருக்குக் கஞ்சி வார்த்த உழவனல்லவோ அறிவான். புகழேந்தி! அவரும் சிலநாள் சிறையில் கிடந்து பசியால் வருந்தியவர்தானே. ஔவையார்! அவர் கூழுக்குப் பாடுபவராச்சே. தேசியக்கவி பாரதி! அவர் வறுமையால் உயிர் நீத்தார் என்பதைத் தமிழ்நாடு மறுக்கத் துணியுமா?

கோடி சூரியப் பிரகாசத்தையுடைய ஒரு மின்னல் மேகங்களைக் கீறிக் கொண்டு மேல்நோக்கிச் சென்றது. அப்பொழுதுதான் என் சுய நினைவிற்கு வந்த நான் மழைக்குப் பயந்து வீடுநோக்கி விரைந்து நடந்தேன். ஆனால் பரதேசியொருவன் அவ்விடியையும் மின்னலையும் லக்ஷியம் செய்யாது தூரத்திலிருந்த ஒரு பாழடைந்த மண்டபத்திலிருந்து கதம்பராகத்தில் கீழ் வருமாறு பாடிக்கொண்டிருந்தான்.

சிறியரே மகிக்குமிந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுளோர் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயில்தரு செவிடராவர்
குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவரன்றே.

"பொது ஜனம்" (பிரதி வியாழன்தோறும் வெளிவரும்.)

போது ஜனங்களுக்காக உழைப்பது.

நமது "போது ஜனம்" என்னும் இப் பத்திரிகை சிறந்த முறையில் அரையணா விலையில் டபிள் கிரௌன் 1×4 சைசில் 16 பக்கங்களுடன் வெளியாகின்றது. பொது ஜனங்களின் குறைகளை அகற்றவும், அவர்களின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபடுவதே இப்பத்திரிகையின் பிரதம நோக்கமாகும். தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய அறிவைப் பெருக்கும் வகையில் நல்ல சேவை செய்யும். படங்களுடனும், எல்லா விசேஷ அம்சங்களுடனும் பிரதி வியாழன் தோறும் வெளிவரும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. முழு விவரத்திற்கு ஆபீசுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

வருஷ சந்தா ரூபா 2—4—0
பர்மாவுக்கு ரூ. 3—0—0. வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

மானேஜர், "போதுஜனம்" ஆபீஸ்,
நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்.

மாதர் மறுமணம்

(M. கனகசபை.)

★

இஞ்ஞான்று நம் இந்தியாவில், அதுவும் நம் தமிழ்நாட்டில், அதனிலும் சிறப்பாக இந்துக்களிடையே தலைவனை இழந்த இள மகளிர் யாண்டும் நிறைந்திருத்தலைப் பார்க்கக் காணலாம். அம்மம்ம! அவர்கள் படுந் துன்பங்களுக்கோ ரளவில்லை. அவர்களைப் புழுக்களிலும் கீழாக மதிக்கின்றனர். அவர்கள் எதிர்ப்படின் தங்களுக்கு ஓர் தீ நிமித்தமாகக் கருதுகின்றனர். இவைகளுக்கெல்லாம் காரணம் யாதென ஆராயப் புகுவோமேயாயின் ஆண்களாகிய நாமே அவர்களது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாய் ஏற்படும்.

பால்மணம் மாறாப் பச்சிளம்பருவத்தில்; மணமென்னும், மணத்தினை இன்னதென்றறியா இளமையில் அவர்களுக்கு வாழ்க்கையாகிய தளை பூட்டப்படுகிறது. பாவம்! அவர்கள் தங்கள் இளம்பிராயம் காரணமாக, தலைவன் தலைவியென்ற எண்ணம் தோன்றாமல் இயற்கையாக ஆடல் புரியின் அதனை நாம் கண்டு அவர்கள்மேல் சீற்றங்கொள்கிறோம். இதனால் அவர்களிடையே அன்பு பெருகவும் அதன் காரணமாகக் காதல் வளருவதற்கும் இடமில்லாமல் போகின்றது.

சின்னஞ்சிறு பருவத்தில் மன்றல் கொண்ட மக்கள் இளமையில் ஏற்படும் நோய் முதலியவற்றால் வருந்தி, தங்கள் மணவாழ்வினால் அடையப் போகும் நன்மைகளை அடையும் முன்னரே எமன் வாய்ப்படுகின்றனர். அந்தோ! பின்னர் அவர்கள் பால்ய மணத்தினால் பயன் யாது? காலகதியால் கணவன்மார் உயிருடன் இருந்து மனைவி இறப்பின் அக் கணவன் மறுமணம் புரிந்து கொள்கின்றான். ஆனால் கணவனை இழந்த காரிகை நல்லார்க்கு மறுமணம் ஏது? அவள் இன்பம் இழந்து, நல்லாடையற்று, அணி போக்கி, மஞ்சளிழந்து, பூ விழந்து கூந்தல் களையப்பட்டு வீட்டிற்கே ஓர் தீக் குறியாக கருதப்பட்டு ஓர் மூலையில் தள்ளப்படுகின்றாள். பிறகு அவள் நாளும் கண்ணீரும், கம்பலையுமாக அழுதழுது அழுங்குகின்றாள். சில விடங்களில் அம்மட நல்லாள் தன் கணவனை இழந்தோம் என்ற எண்ணமே தோன்றா மிக்க இளம்பருவமும் உண்டு. அக் காலை அந் நங்கை தனக்குச் செய்யும் கோலங்களைக்கொண்டு அவர்கள் எதன்பொருட்டுச் செய்யப்படுகின்றன என்பதையே அறியாது தன் கூந்தலை இழக்க ஒருப்படாது கலாம் விளைப்பதூஉம் உண்டு. அந் நிலையில் அவள் வீட்டிலுள்ள கிழங்கள், 'என்னடி மலையாட்டமா கணவனை ஒழுச்சிட்டே, மயிரைக் கொடுப்பதற்கு வருந்துகின்றாய்' என்று வாய் கூசாமல் ஏசி, அப் பூங்கொடியை வருத்துதலும் கண்கூடு. இப்படி யல்லாமல் தன்னை மயிர்களையச் சொல்லும்போது

தான்; தான் ஒருவனை மணந்ததாகவும், அம் மணமகன் இக்கால் இறந்துவிட்டதாகவும் அறியும் பூங்கொடிகளும் இல்லாமலில்லை.

இவ்வாறு அறிவிலா மாந்தர் செய்யும் அட்டூழியங்களுக்கு ஆட்பட்டுழலும் நம் ஏழைக் கைம்பெண்களின் கண்ணீரோ நாளும் ஆறுபோல் பெருக்கெடுத்தோடும்போது, பெண்டினை இழந்த ஆடவன் பூப்பெய்திய புதுப்பெண்களின் இன்பமாகிய புத்தாற்றில் புதுப்புனலாட விழைகின்றான். என்னே அவனின் அறியாமை. ஆண்கள் தங்கள் மனைவியினை இழப்பின் மறுமணம் புரியலாமாம். ஆனால் பேதை மடந்தையர்கள் தங்கள் தலைவனை யிழப்பின் தங்கள் இன்பத்தினையே இழந்து மறுமணம் புரிதல் கூடாதாம். என்னே கொடுமை! ஆண்டவனால் ஒரு தன்மைத்தாகப் படைக்கப்பெற்ற ஆண், பெண் என்ற இருபாலருள் ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் புரிதல் தகுமா?

நிற்க நாட்டினில் கைம்பெண்கள் மிகுதிப்படுதற்குக் காரணம் என்ன? மேலே கூறியபடி அறியாப் பருவத்திலேயே மணம் முடிப்பதும், பெண்ணுக்குப் பத்துவயதும் ஆணுக்கு அறுபது வயதும் இருப்பினும் பணவாசையால் மணம் முடிப்பதும், காதல் மணங்களை ஆதரியாது தடுப்பதும் அதற்கு முதற்றர காரணங்களாம்.

ஆதலால் நாட்டில் இளங் கைம்பெண்களே இல்லையாகச் செய்ய விழைவார் முதலாவதாக இளம் பருவத்தில் மணம் முடித்துக் களிக்கும் வழக்கத்தை அடியோடு ஒழித்தல்வேண்டும். இப்பொழுது நடைமுதலில் இருக்கும் 'சாரதா சட்டம்' ஒருவாறு இதனைத் தடுப்பதாயிருப்பினும், இன்னும் புதுக்கோட்டை, காரை, புதுச்சேரி முதலிய அங்கில நாடல்லாத இடங்களுக்குப்போய் மன்றல் கொண்டு மகிழ்தல் நின்றபாடில்லை. ஆகையான் இதனை முழுவதும் இல்லையாக்க அரசியலாரின் முயற்சி வேண்டப்படுவதொன்றாம்.

இரண்டாவதாகப் பணவாசையால் நடக்கும் பண்பற்ற மணங்கள் பலப்பலவாம். ஒருவனுக்குப் பணம் இருப்பின் அவன் வயது அறுபது தானாகிலென்? அங்கமெலாம் குழைந்தழுகு தொழுநோயாளா யிருப்பினும் என்? அட்டியின்றிப் பெண் கொடுக்க முன்வருவார் எவ்வளவுபேர்? இந்த மனப்பான்மை என்று நம் நாட்டைவிட்டு ஒழிகிறதோ அன்றே நம் நாடு முன்னணியில் நிற்கும். அன்றேதான் நாமும் ஒரு இந்தியன் எனத் தலைதூக்கி நிற்க இயலும்.

மூன்றாவதாகக் காதல் மணங்களை ஆதரிப்பது இற்றை ஞான்று வேண்டப்படுவதொன்றாம். "அவன் உயர்ந்த குலம்," "இவன் தாழ்ந்த குலம்" ஆகையால் "நாம் அவன் வீட்டில் பெண் கொடுத்தலும், கொள்ளுதலும் கூடாது" என்று-நினைக்கும் எண்ணம் அடியோடு அழிதல் வேண்டும். ஆண்டவன் கண்முன் நாம் அனைவரும் ஒன்றே. இவ்வெண்ணம் நமக்கு எப்போது தோன்றுகின்றதோ அப்போதுதான் நாம் முன்னேற வழியுண்டு. அதனைவிட்டு சாதிப்பூசை சமயச்சண்டை முதலான ஒன்றுக்கும்பெறாத காரி

யங்களில் தலையிட்டு உழலுவோமேயாகில் நம்நாடு இன்று இருக்கும் நிலையில் கூட நில்லாது இன்னும் கீழ் நிலைக்குப் போய்க்கொண்டுதா னிருக்கும்.

மேலே கூறியவற்றை ஒவ்வொரு மக்களும் தத்தம் மனத்துட் கொண்டு அதற்குத் தக நடக்கப்புகின் இனி நாட்டில் இளங் கைம்பெண்களே இல்லாதபடி செய்துவிடலாம். அதற்கு முன் இப்போது இருக்கும் கணவனற்ற காரிகைகளுக்கும் ஓர் உய்வளித்தலன்றோ ஏற்புடைத்தாகும்? அதற்கு ஆவனபுரிதல் அவசியமன்றோ?

நாட்டில் பற்பல இடத்தின் கண்ணும் கைம்பெண்களை காத்தற்கு இலலங்கள் கட்டப்படுதல் வேண்டும். அதன் கண் திக்கற்ற ஏழை விதவைகளையும், மறுமணம் புரிய இசையும் மாதர்களையும் சேர்த்து, அவர்களுக்கு ஏதாவது நாட்டிற்குப் பயன் தரக்கூடிய தொழிலொன்று கற்பித்து மணமும் முடித்து வைக்கவேண்டும். இதனைத் தம் பணியாக ஒரு சில இல்லங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன வென்பது உண்மையே. ஆனால் அவைகளின் பணி அவ்வளவு பெரும் பான்மையாக இல்லாதது வருந்தத் தக்கதே. இவ்வில்லங்களிலும் சாதி, சமய வேறுபாடு காட்டப்படுதல் கூடாதாம். ஆகையால் இம்மாதிரி இல்லங்கள் ஒவ்வொரு சிறு ஊரின் கண்ணும் கட்டப்படுதல் வேண்டும். பெண்ணிழந்த ஒவ்வொரு ஆடவனும் தான் மணம் புரிவதாயிருப்பின் கைம்பெண்ணையே மணப்பதாக உறுதி கொண்டால் இன்னும் சிறிது காலத்தில் நம் நாட்டின்கண் ஆதரிப்பாரற்ற விதவைகளே யிரார்.

ஆதலால் வீர இளைஞர்களே வீறுகொண் டெழுமின்! விதவை மணத்தினை வேண்டி நின்மின்! அவர்களை ஆதரிக்க நீங்கள் உங்கள் வீட்டாருக்கும் அஞ்சுதல் வேண்டா!

ஓங்குக மறுமணம்! வாழ்க நம் விதவைகள் இன்பம்பெற்று! வாகழ் நம் தாய்நாடு!

ஒழிக இளமணம்! ஓங்குக காதல் மணம்! என வீதிதோறும் வீறுடன் கூறி ஆக்கம் தேடுமின்! ஏ! இந்துவே எழுந்திரு! உன் சமூகம் ஆழ்ந்து கிடக்கின்றது. அதனை முன்னேற்ற விழித்திரு. பெண்கள் முன்னேற்றங் கருதிப் பசித்திரு.

225534

உடைந்த இருதயம்

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

பெண்ணையாற்றங் கரையில் அமைந்திருக்கும் அத்தியூர், இயற்கை வளங்கள் பலவும் பொருந்தியதொரு அழகிய சிறு கிராமம். செழித்துத் தழைத்து வளர்ந்துள்ள மரங்கள் நிறைந்த அழகிய சோலைகள், அவ் வூரின் இயற்கையழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டுவனவாக விளங்கின. அவ் வூர் வாசிகளுள் பெரும்பான்மையோர், யாதவ ஜாதியினர். கருப்பண்ணக் கோனார், அவர்களுள் ஒருவர். எண்பத்து நான்கு தேவதைகளையும் தமக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் தெய்விக மகிமை பொருந்திய நான்கு பசுக்களே அவருடைய ஆஸ்தி. அவருடைய மனைவி பொன்னி, ஒரு அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்து வளர்த்து, அக் குழந்தையின் எட்டாவது வயதில் அதைத் தனது ஞாபகார்த்தமாக அவரிடம் ஒப்புவித்து விட்டு மண்ணுலகத்தை விட்டு மறைந்து போய் விட்டாள். தனது வாழ்க்கைத் துணைவி தன்னை விட்டுப் பிரிந்து போய் விட்ட பின்பு, இந்த மாயா—ப்ரபஞ்சத்திலே கோனாருக்கு வேறு எதிலுமே ஆசை தோன்றவில்லை. அவள் தனது ஞாபகார்த்தமாக விட்டுச் சென்ற அருமைப் புதல்வி ருக்மணிக்காகவும் தனது அரும் பெருஞ் செல்வங்களாகிய பசுக்களுக்காகவுமே அவர் உயிர் வாழ்ந்தார். ஆதலால, வீட்டுக் கவலை எதுவுமே தெரியாதபடி அவ்வளவு செல்வமாக அவர் தமது மகளை வளர்த்து வந்தார். அவர் அவளுக்கு ஒரு பாட்டியைப் போலிருந்து, அவளுக்குப் பிரியமான கதைகளைச் சொல்லுவார்; ஒரு தாத்தாவின் ஸ்தானத்திலிருந்து புத்திமதிகள் கூறுவார்; தாயை இழந்த அவளுக்குத் தானே தாயின் நிலையிலிருந்து, மிகுந்த பரிவுடன் அன்னம் பரிமாறி மகிழ்வார். 'அடுப்பங்கரை உத்தியோக'த்தைக் கூட அவளிடம் ஒப்புவிக்க மனமின்றி, தானே மேற்கொண்டு நடத்திவந்தார் அவர்.

மானிட வாழ்க்கையில் நேரும் துன்பங்கள் எப்படிப்பட்டவை யென்பதை உணராமலே வளர்ந்து வந்த ருக்மணி, நீலவானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கும் வானம்பாடியைப் போல், தனது வாழ்க்கையைக் குதூகலமாகவே நடத்தி வந்தாள். பொழுது முழுவதும் கூரைக் குடிசைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பதை விரும்பாத அவள், தன் வீட்டிலுள்ள பசுக்களுக்காகத் தினந்தோறும் வெளியில் சென்று புல் பறித்துத் திரட்டிக் கட்டி யெடுத்துவரும் வழக்கத்தை மேற்கொண்டாள். அவள் அவ் வேலை செய்வது கருப்பண்ணக் கோனாருக்கு விருப்பமில்லை யெனினும், இரண்டொரு முறை தடுத்துப் பார்த்தும் கேளாததால், அவர் அவளை அவளது விருப்பப்படியே நடக்க விட்டு விட்டார்.

சிறிது காலத்திற்குப் பின், புல் பறிக்கச் சென்ற இடத்தில், அவளுக்கு ஒரு தோழன் கிடைத்தான். அத்தியூர் நாட்டாண்மைக்காரர் ராமசாமிக் கோனாரின் அருமை மகன் தான் அவன். அவன் தனது குலவழக்கப்படி தினந்தோறும் தன் வீட்டிலிருந்த மாடுகளை மேய்த்துவரப் பக்கத்திலிருந்த பசும்புல் வெளிகளுக்கு ஓட்டிக்கொண்டு செல்வதுண்டு. முதன் முதலில் ருக்மணி அவனைச் சந்திக்க நேர்ந்தபோதே, அவனிடம் அவளுக்கு ஒரு 'அலாதிப் பிரேமை' தோன்றி விட்டது. சில தினங்களுக்குள் அவனது அழகிய வடிவம், அவளது இருதயத்தில் ஊன்றிப் பதிந்து போய்விட்டது. பசுக்களை யதேச்சையாக மேயவிட்டு விட்டு, 'கண்ணன்' என்னும் அச் சிறுவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, மடியிலிருக்கும் புல்லாங் குழலை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு தன்னை மறந்து வாசிக்கத் தொடங்கி விடுவான். அவனெதிரிலே, பசும்புல் தரையில் அமர்ந்துகொண்டு அவனது அழகைத் தனது இரு கண்களாலும் பருகிக் கொண்டிருக்கும் ருக்மணியின் செவிகளிலே, அந்த வேணுகானம் செந்தேனருவியைப் போல் பாய்ந்து அவளது உடலின் ஒவ்வொரு மயிர்க்காலையும் புளகிக்கச் செய்து விடும். வயலோரங்களில் செக்கச் செவேலென்று பூத்து இளங்காற்றில் குலுங்கிக் கொண்டிருக்கும் பட்டிப் பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து ஒரு மாலையாகக் கட்டி முடித்துக் கண்ணன் கழுத்தில் போட்டு விட்டு, அவனை நோக்கி அவள் புன்முறுவல் பூத்து நிற்பாள். அப்போது, அந்த ஒரு புன் சிரிப்பினால், கண்ணன் முகத்தில் தோன்றும் கம்பீர—கர்வத்தைச் சொல்லி முடியாது. ருக்மணி புல்லுக்கட்டைத் தன் தலையில் தூக்கி வைத்துக் கொள்வது கண்ணனுக்குப் பிடிக்காது. அச் சுமையை அவள் தலையினின்றும் எடுத்து, தானே தன் தலையில் வைத்துக் கொள்வான் கண்ணன். மற்றவர்கள் யாராவது பார்த்து விட்டால் தன்னைத் திட்டுவார்களே என்ற பயத்தினாலும், கணவனிடம் பெட்டி முதலிய சுமைகளை ஒப்புவித்து பின்னால் நடந்து வர விட்டு விட்டு அவன் முன்னால் ஒய்யாரமாகக் கை வீசி நடந்து செல்லும் நவ நாகரிக மங்கைகளை அவள் பார்த்ததில்லை யாதலாலும், புல்லுக்கட்டைத் தானே தான் தூக்கிக்கொள்ள வேண்டுமென்று அவள் அவனுடன் அடிக்கடி சண்டைபோட நேர்ந்து விடுவதுமுண்டு.

இரண்டு வருடங்கள் விரைந்து கழிந்து விட்டன. ராமசாமிக் கோனாரின் தமையனார் கோவிந்தக்கோனார், சென்னையில் ஒரு உத்தியோகத்தில் இருந்தார். கோடை விடுமுறையின்போது, அவர் தனது தம்பி வசிக்கும் அத்தியூருக்கு வந்திருந்தார். ஊருக்கே நாட்டாண்மைக்காரனாக இருக்கும் தனது தம்பியின் மகன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தது, அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. கண்ணனை மாடு மேய்க்க விட்டு விட்டது தனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை யென்றும், அவனைத் தன்னுடன் சென்னைக்கு அனுபிவைத்தால் அவனை இங்கிலீஷ் படிக்க வைத்து கௌரவமான ஒரு பெரிய உத்தியோகத்திலும் அமர்த்தி விடுவதாகவும் சொல்லி, பலவித ஆசை வார்த்தைகளால் அவர் தனது தம்பியைத் தன் விருப்பத்திற்கு எளிதில் இணங்கும்படி செய்து கொண்டு விட்டார். அவ் விருவரும் சேர்ந்து, கண்ணனுக்கும் பற்பல ஆசை வார்த்தைகள் கூறி, அவனது

மனத்தில் 'பட்டண மோக'த்தைப் பெருக்கி, அவனைத் தங்கள் விருப்பத்திற்குச் சம்மதிக்கும்படி செய்து கொண்டு விட்டார்கள்.

கோவிந்தக் கோனார் சென்னைக்குப் புறப்படுவதற்கு முந்திய தினம். பெண்ணையாற்றங் கரையிலுள்ள மாந்தோப்பிலே, பசும்புல் தரையிலே, ருக்மணி தனியே உட்கார்ந்திருந்தாள். அவளது மனக் கடலிலே, எத்தனை எத்தனையோ எண்ண அலைகள் ஒன்றின்பின் ஒன்றாக எழுந்து மறைந்து கொண்டிருந்தன. நெடுங்காலமாக அவளைத் தீண்ட அஞ்சி விலகியிருந்த கவலைப்பேய், அவளை நெருங்கத் தொடங்கிவிட்டது. சிறிது நேரத்திற்குப் பின் தனது கண்களைப் பொத்திய இரு கைகளையும் மெள்ள எடுத்த அவள், தனது கண்ணனைக் கண்டு புன்னகை பூத்தாள். பின், அவர்களிடையில் பின்வரும் சம்பாஷணை தொடங்கியது :—

"ருக்கு! உனக்கு ஒரு சந்தோசச் சேதி சொல்லப்போறேன். நாளைக்கி நான் பட்டணம் போவப் போறேன்".

"உனக்கு உங்க பெரியப்பா இருக்காரு; எனக்கு யாரு இருக்காங்க ? ஏழெட்டு நாள்ளே திரும்பி வந்துடுவேல்லியோ ?".

"அடி அசடே! நான் வேடிக்கை பாத்துட்டுவா பட்டணம் போவலடீ! இங்கிலீசு படிச்சி பாசு பண்ரத்துக்கோசரம் போறேனுக்கும். எல்லாப் படிப்பும் படிச்சி முடிக்கறத்துக்கு பத்துப் பன்னெண்டு வருசம் ஆவுமாம். அப்புறம் எதாச்சும் உத்தியோகம் பார்த்துக்கிட்டு அங்கேயே தங்கிவிட வேண்டியதுதான்."

"அப்படீன்னா, என் கதி என்னாவாது ? இதுக்குத்தானா, என் கிட்டே ரொம்ப ரொம்ப ஆசையாயிருக்காப்பலே இவ்வளவு காலமா வேஷம் போட்டு வந்தே ?"

அடி, பைத்தியமே! பட்டணம் போயிட்டா, நான் உன்னை மறந்துடுவேன்னா நெனச்சிக்கிட்டே ? வருசத்திலே ரெண்டு தடவையாவது இங்கே வாராதிருந்துடுவேனா ? இங்கிலீசு படிச்சி பட்டம் வாங்கி உத்தியோகம் பார்த்தா, கௌரவத்துக்கும் கௌரவம்; பணத்துக்கும் பணம். நீ வேணும்னா பாரு, இன்னம் பத்துப் பன்னெண்டு வருசத்துக்குள்ளே எல்லாப் படிப்பும் பாசு பண்ணிப்புட்டு, இந்த ஊர்ப் பசங்களெல்லாம் பொருமைப் படும்படியா பெரிய உத்தியோகமும் சம்பாதிச்சிக்கிட்டு, தங்கத்தாலும் வைரத்தாலும் ஏராளமா நகை பண்ணி வச்சிக்கிட்டு, உன்னை 'ஜாம், ஜாம்'னு கண்ணாலம் பண்ணிக்கிறேன் பார்த்துக்கோ !"

"பன்னெண்டு வருசம்! அம்மாடீ! ஒரு மாமாங்கம்! நூத்தம்பது மாசம்! சேர்ந்தாப்போலே மூணு நாளைக்கி உன்னைப் பார்க்காட்டிப்போனா, என் மனசு எவ்வளவோ தவியாய்த் தவிச்சிப் போவுது! இருந்தாலும், உன் மனசு எவ்வளவு கடுமையாய்ப் போயிடுத்து! பன்னெண்டு வருசமும் நீ பட்டணத்திலியே தங்கியிருக்கப் போறியா ? அதுவரையிலே, நித்த நித்தம் உன்னை நெனச்சி நெனச்சி, நான் இங்கே அழுதுகிட்டிருக்கணுமாக்கும்! நீ மாத்திரம் என் கிட்டியே இருந்துட்டா, இந்த லோகத்திலே எனக்கு வேறே எதுவுமே வேணாம்; பணம்—நகை—கௌரவம் எல்லாம் என்கால்

தூசு மாதிரி. இந்த லோகத்திலே, உன்னைத் தவிர, வேறே எதிலியுமே எனக்கு ஆசை இல்லே. இங்கே என்னைத் தவிக்க விட்டுட்டு, நீ மாத்திரம் பட்டணம போய் என்னத்தை வாரிக் கட்டிக்கப்போறே? கட்டாயமா நீ பட்டணம் போய்த்தான் தீரணும்னு, என்னையுந்தான் கூட்டிக்கிட்டுப் போயிடேன்."

"நீயும் கூட வந்துட்டால், நான் படிச்சிப் பாசு பண்ணப்பலேதான். நீ பக்கத்திலியே இருந்தா, என் மனம் படிப்பிலே ஓடுமாங்கிறதை நீயே நெனச்சிப் பாரேன். இதோ, இந்தப் புல்லாங்குழலை உனக்குக் கொடுத்துட்டுப் போறேன். நான் படிப்பை முடிச்சிக்கிட்டு வந்து உன்னைக் கண்ணாலம் பண்ணிக்கிற வரைக்கும், என்னைப் பாக்கறுப்புலே இத்தைப் பாத்துக்கிட்டிரு. இந்த மாந்தோப்பிலே இத்தை நான் ஊதச்சே, நீ எத்தனையோ நாள் பக்கத்திலியே இருந்து கவனிச்சிக் கேட்டிருக்கியேல்லியோ? நான் எப்படி எப்படி ஊதினேங்கிறதை நெனச்சி நெனச்சிப் பார்த்துக்கிட்டு, ஊதிப் பழகிட்டிரு. நம்ம கண்ணாலம் நடக்கறத்துக்குள்ளே, நீ இத்தை ஊதறத்திலே என்னை செயிச்சிப்புடணும்; தெரியுமோல்லியோ? பன்னெண்டு வருசமும் பன்னெண்டு நாளா நெனச்சிக்கோ. என் கட்டை பட்டணத்திலே இருந்தாலும், என் உசிருமட்டும் உன் கிட்டியேதான் இருக்கும்."

ஃ ஃ ஃ ஃ

கண்ணன் சென்னை சென்ற மூன்றாவது வருஷத்தில், ருக்மணி ருதுவடைந்து விட்டாள். அதற்குமுன் கண்ணன் சென்னையிலிருந்து ஊருக்கு வந்தபோதெல்லாம், ருக்மணியின் வீட்டுக்கு வந்து அவளையும் அவளது தந்தையையும் பார்த்துப் பேசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தான்; ருக்மணி ருதுவாய்விட்ட பின்பு ஊருக்கு வந்துகொண்டிருந்தபோது, அவன் அவள் வீட்டுப் பக்கமே போகவில்லை. அவன் மனதில் தோன்றிய நவநாகரிக மோகத்தின் பயனாக, அவன் ருக்மணியிடம் கொண்டிருந்த அன்பும் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையத் தொடங்கிவிட்டது. ருக்மணியோ கண்ணனின் மனமாற்றத்தைச் சிறிதும் அறியாள். தான் ருதுவடைந்து விட்ட ஒரு காரணத்தாலேயே கண்ணன் தன்னைப் பார்க்க வரவில்லையென்றும், எது எப்படியிருந்தாலும், அவன் படிப்பை முடித்துக்கொண்டு உத்தியோகமும் சம்பாதித்துக்கொண்டு விட்டபின், தாமதமின்றித் தன்னிடம் வந்து தன்னை மணந்துகொண்டு விடுவானென்றுமே அவள் நினைத்துக் கொண்டிருந்தாள்.

ருக்மணி பருவமடைந்து விட்டபின், வீட்டை விட்டு வெளியிற் செல்ல அவளது தந்தையும் அவளை அனுமதிக்கவில்லை. அவளது வீட்டிலிருந்த பசுக்களும், அவளது காதலன் கொடுத்துப் போயிருந்த புல்லாங்குழலுமே அவளது தோழிகளாயின. புல்லாங்குழலை அவள் தனது வாயில் வைத்தபோதெல்லாம், அவளது மனக்கண் முன்பு அவளது கண்ணனின் ஆசைமுகம் தோன்றிக் காட்சி அளிக்கும். துரோணரை நினைத்து நினைத்து அவரது சிலையின்முன் நின்று பழகி வில்வித்தையில் தேர்ச்சிபெற்ற ஏகலைவனைப் போலவே, பெண்ணையாற்றங் கரையில்—மாந்தோப்பில் — தனது

காதலன் குழலூதிய பழய நாட்களை நினைத்து நினைத்து—ஊதி ஊதிப் பழகி—ருக்மணியும் வேணுகான வித்தையில் பெரிய பண்டிதையாய் விட்டாள். சிற்சில தினங்களிலே, அவள் தனது குடிசையின் பின்புறத்திலுள்ள மாட்டுக் கொட்டகையிலே, தனது தோழிகளான பசுக்களின் எதிரிலே அமர்ந்து கொண்டு, தனது ஆசைக் காதலனின் பிரிவாற்றாமல், புன்னாகவராளி—முகாரி—காம்போதி முதலிய உள்ளத்தை உருக்கும் சோகரஸம் மிகுந்த ராகங்களை நெஞ்சு கரைந்து உருகித் தன்னை மறந்து குழலில் வாசித்துக் கொண்டிருப்பாள். அவ் வேளையிலே, அவளது விழிகளிலிருந்து பெருகி வழியும் கண்ணீர்த்தாரைகள், கன்னங்களின் வழியே வழிந்து குழலின் துளைகளுக்குள் புகுந்து கொண்டுவிடும். அவ்வாறு கலங்கும் அவளது நெஞ்சுக்கு ஆறுதல் கூற, அப் பசுத்தோழிகளுக்கு வாயேது? கருணையே உருவான அவற்றிற்கு வாயை அளிக்காத பகவான், மனத்தையேனும் அளித்திருக்கிறாரல்லவா? அதன் பயனாக, அப் பசுக்கள் தங்களது தலைவியின் துக்கத்தில் தாங்களும் பங்கெடுத்துக் கொள்வனவேபோல், எதிரில் கிடக்கும் பசும்புல்லை ஒதுக்கித் தள்ளிவிட்டு 'உண்ணாவிரதம்' மேற்கொண்டு கண்ணீர்விட்டுக் கலங்கி நிற்கும். அத்தகைய சோகக்காட்சியை, கருப்பண்ணக் கோனாரும் சிலமுறை காண நேர்ந்து பெரிதும் மனம் கலங்கி நின்றார். எனினும், ருக்மணியின் மனநோய்க்கு அவரிடம் மருந்து ஏது? தன் அருமைப்புதல்வியின் மனம் கண்ணக்கோனான் ஒருவனையே நாடி நிற்பதை உணர்ந்த அவர், அவளது மனநோயை மாற்ற வழி தெரியாமல் இரவும் பகலும் பெரிதும் கலங்கிக்கொண்டிருந்தார்.

பன்னிரண்டு வருடங்களும் பறந்து சென்றுவிட்டன. கண்ணக்கோனார், B. A. பரீட்சையில் தேறி, வெளி உடை—உள் மனம்—நடை—பேச்சு—குணம்—முதலிய அனைத்திலும் முற்றிலும் மாறி, அத்தியூருக்குத் திரும்பிவந்து. தனது பெரியப்பாவின் பலமான சிபார்சினால் அவரது நண்பராயிருந்த திருக்கோவலூர்த் தாசில்தார் சுந்தர முதலியாரவர்களின் கருணையையும் ஒரு பிர்க்காவின் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தையும் பெற்றுக் கொண்டுவிட்டார். மூன்று மாதகாலம் அவ் உத்தியோகத்தில் இருந்து கிராமங்கள் தோறும் 'திக்விஜயம்' செய்து கொண்டிருந்த பின், அவர் ஒரு வார லீவ் எடுத்துக்கொண்டு தனது சொந்த ஊராகிய அத்தியூருக்குத் திரும்பி வந்திருந்தார்.

ஒருநாள் மாலை, பல வருடங்களுக்கு முன்பு தனது காதலனுடன் கொஞ்சிக் குலவிக்கொண்டிருந்த இடமாகிய மாந்தோப்புக்குச் சென்று வர வேண்டுமென்ற ஆவலினால் தூண்டப்பட்டு துணிவு மிகுந்த நெஞ்சுடன், தனது காதலனின் அன்புப்பரிசாகிய புல்லாங்குழலை மார்பில் மறைத்து வைத்துக்கொண்டு மாந்தோப்புக்குப் போய்ச் சேர்ந்து புல்தரையில் அமர்ந்தாள் ருக்மணி. கண்ணன் அருகிலிருந்தபோது பச்சை வெல்வெட்டினால் தைத்த பட்டு மெத்தையைப்போல் மெத்தென்றிருந்த பசும் புல் தரை, இப்போது அவளுக்குக் கூரிய முட்கள் நிறைந்த சப்பாத்திகளைப் பரப்பி வைத்திருந்ததுபோல் தோன்றியது. முன்பு அழகிய ரோஜாப்பூக்களை விடச் சிறந்து தோன்றிய பட்டிப்பூக்களே, அன்று அவளுக்கு வெள்ளெருக்கம் பூக்களைப்போல் வெறுப்பை விளைவித்தன. நீலக்

கருங்குயில் ஒன்று மாங்கிளை யொன்றில் அமர்ந்துகொண்டு, 'குக்கூ' 'குக்கூ' என்று கூவிக்கொண்டிருந்தது. கண்ணன் அருகிலிருந்தபோது தேனருவியைப்போல் அவளது செவிகளில் பாய்ந்து அவளது நெஞ்சைப் பரவசப்படுத்திய அதே குரல், இப்போது அவளது செவிகளில் ஆந்தையின் அலறலைப்போல் பாய்ந்தது. மற்றொரு மாங்கிளையிலே ஜோடியாகக் கூடியமர்ந்து கொஞ்சிக் குலவிக்கொண்டிருந்த பச்சைமேனிப் பவளவாய்க் கிள்ளைகளைக்கண்ட அவள், அவை தன்னைப் பரிகசிப்பதாகவே எண்ணிக் கடுஞ்சினம் கொண்டு ஒரு கல்லை எடுத்து அவற்றின்மேல் வீசி எறிந்தாள்.

அதேநாள் மாலையிலே, காற்று வாங்குவதற்காக வெளியில் புறப்பட்டு பெண்ணையாற்றங்கரையிலேயே நடந்துவந்த மிஸ்டர். கண்ணக் கோனார், மாந்தோப்பில் ஒரு பெண் தனியே நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து சற்று தூரத்திலேயே அமர்ந்துகொண்டார். உருவ வளர்ச்சியினாலும் உடை மாறுதலினாலும் முதலில் அவரை இன்னாரென்று உணர முடியாமல் திகைத்துநின்ற ருக்மணி, அவரது முகத்தைச் சிறிதுநேரம் கூர்ந்து நோக்கியபின் அவரே தனது காதலராகிய கண்ணனென்பதை உணர்ந்துகொண்டு விட்டாள். பின், அவரருகில் சென்று அமர்ந்த அவள், கடந்த பன்னிரண்டு வருட காலமாக தனது இருதயத்திற்குள் அடக்கி வைத்துக்கொண்டிருந்த காதல் முழுவதும் வெளிப்பட்டு வேகமாகப் பாயும்படி ஆவல் மதகைத் திறந்து விட்டுவிட்டு, அவரது முகத்தை நோக்கினாள். அந்த ஒரு பார்வையிலே, அவளது கருங்கண்கள், அவளது இருதயத்தினின்றும் பொங்கி யெழுந்த ஆச்சரியம்—குதூகலம்—ஆசை—சோகம்—கோபம் முதலிய பலவேறு உணர்ச்சிகளையும் ஒரே சமயத்தில் வெளிப்படுத்த முயன்றன. கோனாரும் அவளைப் பார்த்தார்; ஆனால், அந்தப் பார்வையிலோ, எத்தகைய உணர்ச்சியுமேயின்றி வெறும் சூன்யமாயிருந்தது.

"அடையாளமே கண்டுபிடிக்க முடியலியே! பன்னெண்டு வருசத்துக்குள்ளே எவ்வளவு உருவு மாறிப்போயிட்டீங்க! எல்லாப் பரிச்சையும் பாசுபண்ணியாச்சி யோல்லியோ?"—என்று பரிவும் அன்பும் ஆர்வமும் பொங்கித் ததும்பும் குரலில் வினவினாள் ருக்மணி. அக் கேள்விகள், கோனாரின் செவிகளில் பாய்ந்து, அவரது மூளையில் சென்று தாக்கின. அவர் அவளைச் சற்றுநேரம் கவனித்துப் பார்த்தபின், அவரது மனத்திரையிலே, பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு அதே இடத்தில் நடந்த சம்பவங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றலாயின. அவள் தனது விளையாட்டுப் பருவத்தில் தன்னுடன் விளையாடிக் கொண்டிருந்த ருக்மணியே என்பதை, அவரது மனம் உணர்ந்துகொண்டு விட்டது. அவரது மனத்திலே, பழங் காதலுக்கும் புதிய நாகரிக வாழ்வு மோகத்திற்கு மிடையில் ஒரு கடும்போர் மூண்டது. எவ்வளவு முயன்றாலும், எதிர்காலத்தில் தான் மேற்கொள்ளவிருக்கும் நவீன நாகரிகவாழ்வு முறைக்குத் தகுந்த நாகரிகக்காதலியாக அவளைத் திருத்திக்கொள்ள முடியாதென்று அவரது மனம் தீர்மானித்துக்கொண்டு விட்டது. முடிவில், பழங்காதல் தோற்றது; நவநாகரிக மோகம் வென்றது. பின்னர், அவளை நோக்கி, "கருப்பண்ணன் மவளா நீ? எந்தக் காலத்திலியோ விளையாடிக்கிட்டிருந்தபோது, சும்மா வேடிக்கையா சொன்னதை இன்னுமா நீ நெனப்பு

வச்சிக்கிட்டிருக்கே? அடி பைத்தியமே! நான் இப்போ பழைய கண்ணனில்லே; ரெவின்யூ இன்ஸ்பெக்டர்-கண்ணக் கோனர்-B. A-வாக்கும்! பட்டிக் காட்டிலே, கூரைக் குடிசையிலே அடஞ்சி கிடக்கிற உனக்கு, வீணைசை எதுக்காக? 'செக்கடிக்கும் தம்பூருக்கும் ஒத்தவருமா?' நான் உன்னைத் தொட்டு தாலி கட்டுவேன்னு இது வரையிலே மனப்பால் குடிச்சிக்கிட்டிருந்தீனல், இனிமேலாவது அந்த ஆசையை மறந்துவிடு. இனிமேலே, உனக்கும் நமக்கும் எந்த விதத்திலும் பொருத்தமிருக்காது. உனக்கேத்த நல்ல பட்டிக்காட்டு முரட்டு ஆசாமியாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ!''—என்ற வார்த்தைகளைப் படபடவென்று கொட்டிவிட்டு, அவளது பதிலை எதிர்பார்க்காமலே எழுந்து போய்விட்டார் மிஸ்டர்-கண்ணக் கோனரவர்கள்.

அவர் ஏவிய அந்த சொல்லம்புகள், ருக்மணியின் செவிகளின் வழியே நுழைந்து, அவளது மனத்திற்குள் பெரும் புரட்சியை உண்டாக்கிவிட்டன. எந்த ஒரு நம்பிக்கை கடந்த பன்னிரண்டு வருட காலமாக அவளது உயிரை உடலினின்றும் பிரிந்துவிடாதபடி தடுத்துப் பிடித்து அடக்கிக் காத்துவந்ததோ, எந்த ஒரு நம்பிக்கை அவளது துக்கங்கள் எல்லாவற்றிற்கும் ஆறுதல் அளித்து அவளது மனத்திலே எண்ணிறந்த இன்பக் கனவுகளைத் தோற்றுவித்து வந்ததோ, அந்த ஒரே ஒரு நம்பிக்கையாகிய காதற் சுடர்விளக்கை, கண்ணக் கோனரின் கடுஞ்சொற் காற்று ஒரே ஒரு நிமிஷத்தில் அணைத்துவிட்டது. அவளது மனம் இருண்டுவிட்டது; அதே சமயத்திலே, அவளது கண்களுக்கு அவளெதிரிலிருந்த செடிகள்-மரங்கள்-புல்தரை-ஆறு-வயல்கள்-வானம்-பூமி முதலியவை எல்லாம் ஒரே இருட் பெரும் படலமாகத் தோன்றின. அவளது உயிர் வாழ்வுக்கு ஆதாரமாயிருந்த காதல் அமிர்தத்தைத் தாங்கியிருந்த அவளது இருதய கலசம், படீரென்று உடைந்துவிட்டது. என்னென்னவோ ஆசைக் கனவுகளைத் தோற்றுவித்து அவளுக்கு ஆறுதலளித்துக்கொண்டிருந்த அவளது மனம், எதிர்பாராது நேர்ந்த பெரும் புரட்சியினுல் உருக் குலைந்து பொடிப் பொடியாகச் சிதறிப் போய்விட்டது. அவ்வதிர்ச்சியைத் தாங்க முடியாத அவள், மூர்ச்சையடைந்து தரையில் விழுந்துவிட்டாள்.

நெடுநேரங் கழித்தபின் விழித்தெழுந்த அவளது வாய், அவளை அறியாமலே பின் வருமாறு பிதற்றத் தொடங்கியது:—

''கோணை எழுத்துப் படிப்பு! இஞ்சிபெட்டர் உத்தியோகம்! சட்டைக்காரன் உடுப்பு! எல்லாம் தலை கீழா மாறிப் போச்சி! என் கண்ணன் குடியிருந்த நெஞ்சிலே, இனிமே வேறே யாரையாவது நானு தேடிப் பிடிச்சி வச்சிக்கணுமோ? கண்ணனுக்கோசரம் வளர்த்துவந்த இந்தக் கட்டையை, இனிமே வேறே எந்த பயலாவது நெருங்கி வந்து தொட்டுடுவானே? என் கண்ணன் போயிட்டான்; போயிட்டா என்ன? என் புள்ளாங்குழல்-இல்லே, இல்லே—அவன் கொடுத்த செல்லப் புள்ளாங்குழல் எங்கே போயிட்டுது?''—என்று பலவாறு பிதற்றித் தரையில் விழுந்து கிடந்த புல்லாங்குழலை எடுத்துத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டே தள்ளாடித் தள்ளாடி நடந்தாள் ருக்மணி. அழுது வீங்கிக் கலங்கி இருண்டிருந்த அவளுடைய கண்கள், பாதையைக் கவனிக்கவே

யில்லை. 'தொபுகடீல்!'—என்று கேட்டது ஒரு பெருஞ் சப்தம்! ஐயோ! பாதையோரத்திலிருந்த ஒரு பாழுங் கிணறு, அவளது அழகிய உடலைப் பலி கொண்டுவிட்டது! ஆனாலோ, அந்தக் கிணறு, இம்மாயாப் பிரபஞ்சத்தில் அவளுக்கு அதுவரையில் கிடைக்காமலிருந்த அமைதியையும் ஆறுதலையும் ஆனந்தத்தையும் ஒருங்கே அளித்துவிட்டது! அந்த கிணற்றிலிருந்த தண்ணீர், அவளது உடலை மட்டுமன்றி, உடைந்து சிதறிப் போய்விட்ட அவளது இருதயத்தின் துண்டுகளையும் நனைத்து அவற்றையுங்கூட குளிர்வித்துவிட்டது போலும்! இல்லையேல், அங்கோரத்திலே, அவளது முகத்திலே, அத்தகைய அற்புத மந்தகாசம் எப்படித் தோன்றியிருக்க முடியும்? எத்தனை எத்தனையோ இன்பக் கனவுகளைத் தோற்றுவித்து, உலகின் உண்மைத் தன்மை எத்தகையதென்பதைப் பற்றிச் சிறிதும் சிந்தித்துப் பார்க்க விடாமல், எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய எண்ணிறந்த இன்பக் கனவுகளின் பெரு மோகத்திலேயே பெரிதும் மயங்கிக் கிடக்கச் செய்து அவளைத் தனக்குள்ளேயே அடக்கிச் சிறைப்படுத்தி வைத்துக்கொண்டிருந்த இருதயக் கூடு, திடீரென்று உடைந்து போய்விட்டது; அமைதியையும் ஆனந்தத்தையும் ருசி பார்க்கத் துடித்துக்கொண்டிருந்த அவளது இன்னுயிர்ப் பறவை, உடைந்துபோன இருதயத்தை உதறி எறிந்துவிட்டு எங்கேயோ விரைந்து பறந்து போய்விட்டது.

கட்டுரையாளர் கவனிக்க.

கட்டுரையாளர் தாங்கள் எழுதும் கதை கட்டுரைகளைப் புக்போஸ்டில் அனுப்பும்போது, ஸ்டாம்பைக் கவரின்மீது சரியாக ஒட்டி அனுப்பவேண்டும். தபால் அதிகாரிகள் கட்டுரைகளைப் பரிசோதிப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்படி கவரை ஒட்டவேண்டும். விகடனுக்கு வியாசம் அனுப்பும் நேயர்களில் பலர் கவரில் பாதியும் கட்டுரை யெழுதியுள்ள காகிதத்தின்மீது பாதியுமாக ஸ்டாம்பை யொட்டி அனுப்புகிறார்கள். மற்றுஞ் சிலர் கவரை மூடியும், அதன்மீது கயிற்றைக் கட்டியும் அனுப்புகிறார்கள். இது தற்போதைய தபாற் சட்டத்திற்கே விரோதமான தாகையால், மேற்குறித்த விதமாகவுள்ள கவர்களுக்கு இரட்டிப்பாகத் தபாற் கட்டணம் வாங்கிவிடுகிறார்கள். இதனால் நமக்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகிறது. இதையெல்லாம் கவனித்து, கட்டுரையாளர் நடந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

சில அனுபவ விநோதங்கள்

(எரும்பூர்-குருசாமி ஐயர்.)

★

1. "சார், மாயவரத்திற்கு எப்போ டிரயின்?" என்ற ஒரே
கேள்வியை நமக்குள்ள சந்தேக புத்தியாலும், அவசரத்
தாலும், ஒவ்வொருவராக கேட்கிறோம். ஆனால் ஒருவர்: "7-4க்கு
இருக்கு போலிருக்கே" என்று சந்தேகமாகவும், மற்றொருவர்:–'6-43க்கு
சார், போங்கோ டயமாச்சு," என்று அவசரமாகவும், இன்னொருவர்:—
"இப்போ உங்களுக்கு டிரயின் கிடையாது சார்," என்று நிச்சயமாகவும்,
வேறொருவர்:—"சார்-நீங்க பேஷா பஸ்ஸிலே போகலாமே! ஓரணா சகா
யம்" என்று சிக்கனமாகவும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்
லவே மனம் சஞ்சலமடைகிறது. மேலும் டிரயினில் உட்கார்ந்துங்கூட
சந்தேக புத்தியானது அருகிலுள்ளவரை, "என் சார், நீங்கள் எந்த ஊருக்கு
போகிறீர்கள், இந்த வண்டி எங்கு போகிறது?" என்றும் கேட்கச் செய்
கிறது. மேலும் நாம் போகவேண்டிய ஊர் வரும்வரை மனது சமாதா
னமே அடைவதில்லை. சிலர், வண்டியிலுள்ள ஒவ்வொருவராகக் கேட்டுத்
தொந்தரவு கொடுத்து, தன் சந்தேகத்தைத் தெளியவைத்துக் கொள்ளு
வார்கள். மற்றும் சிலர், பிறரைக் கேட்பது கௌரவக் குறைவென பேசா
திருந்து பின்னர் அதிகப்படியான கட்டணம் (தண்டனை) செலுத்துவதும்
உண்டு.

இவ்வாறாக ரயில் பிரயாணம் நிம்மதியற்ற பிரயாணமாக முடிவதன்
காரணமென்னவென்றால், "என்னடா, ரயிலுக்கு போறவன் மாதிரி பறக்
கிறே?" என்பது சம்பிரதாயப் பேச்சாய் போய்விட்டதே யொழிய வாஸ்த
வத்தில் ரயிலுக்கு குறித்த காலத்தில் செல்லுவதில்லை. இதற்குப் பதிலாக,
ஒன்று காலங் கடந்து செல்லல், அல்லது ரொம்பவும் முன்னதாகவே போய்
விடுதல். முன்னதாக வந்துவிட்டாலும், இன்னும் எவ்வளவோ நேரம்
இருக்கிறதென்று அலக்ஷியமாய் இருந்தோ, அல்லது அப்போதுதான் எதை
யாவது வைத்து மறந்த ஞாபகம் வந்து, மறுபடியும் வீட்டுக்குப் போய்வர
நேர்ந்தோ அல்லது, கடைகளில் ஏதேனும் வாங்க மறந்து ஞாபகம் வரவும்
அதற்காக, சீக்கிரம் போய் வந்துவிடலாமெனப் போக ரயில் வந்தோ, பிர
யாணம் தடைபட்டு விடுவதுண்டு. மேலும், டிக்கெட் வாங்கவேண்டிய
பணம் கடைக்குச் சென்றவனிடம்தா னிருக்கும். கடைசியில் அவன்
வராதுபோகவே, ஒருவனால் எல்லோரும் தங்கிவிடும்படியான அவசியம்
ஏற்பட்டுவிடும். இதன்றி நோட்டுகளை வைத்துக்கொண்டு சில்லரை
கிடைக்காமல் டிக்கெட் வாங்க முடியாமற் போவது மிகவும் பரிதாபம். இப்
படியாக ரயில் பிரயாணம் நமக்குக் கஷ்டமாய் தோன்றுவதற்குக் கார
ணம், நாம் முன்னெச்சரிக்கையாக இல்லாமையும், ரயில்வே கம்பெனியார்
பிரயாணிகளுக்கு செய்துள்ள வசதிகளை உபயோகித்துக்கொள்ளத் தெரி

யாமையுமே என்றுதான் சொல்லவேண்டும். இதன்றி அதிகமான மூட்டைகளுடனும், குழந்தைகளுடனும், பிரயாணம் செய்ய நேர்ந்துவிட்டால், ரயில் மாறும் இடங்களிலும்—கடைசியாகவும், மூட்டைகளைப் பறி கொடுக்காமல் கொண்டுவந்து சேர்ப்பதும், குழந்தைகள் மூலைக்கொன்றாக ஓடுவதை, ஒன்று கூட்டி ரயிலில் அடைப்பதும் மிகவும் கஷ்டமான காரியங்களாகும்.

2. பெற்றோர்கள் நிலம் விற்று, கடன் பட்டு, வயிறு ஒடுக்கி தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கிறார்கள் பையனும் நன்கு படிக்கிறான். பட்டதாரி யாகிறான். சீக்கிரத்தில் விவாகமும் நடைபெறுகிறது. உத்யோக வேட்டைக்குப் புறப்படுகிறான். "உங்கள் திருப்திக்கு நடக்கிறேன். தங்கள் கீழ்படிதலுள்ள ஊழியன்.........". என மனுக்களை சமர்ப்பிக்கிறான். இவ்வளவும் தன் ஒருவனுக்காக வல்ல. தன் இளம் வாழ்க்கைத் துணைவி, வயதடைந்த பெற்றோர்கள் இவர்களுக்காகத்தான். வேலை கிடைக்கிறது. மாதம் 30 நாளும் எஜமானன் திருப்திக்கு மனம் கோணாமல் உழைத்து சம்பாதித்த ஊதியத்தை, தன்னை இந்த நிலைமைக்குக் கொணர்ந்த தன் பெற்றோர்களிடம் கொடுத்து குடும்பத்தை நடத்த விரும்புகிறான். ஆனால் சஹதர்மிணியின் சொல்லம்புகள் குறுக்கிடுகின்றன. ஒரு பக்கம், இந்த வீட்டில் எந்த விதமான உரிமைகள் (அதிகாரங்கள்) எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? எதற்காக உனக்கு வாழ்க்கைப் பட்டேனென கேட்கும் சத்தம். மற்றொரு பக்கம்-உன்னைப் பெற்றெடுத்து பாலூட்டி, சீராட்டி, படிக்க வைத்ததற்கு எங்களுக்கு என்ன அதிகாரங்கள் இந்த வீட்டில் இருக்கின்றன? என்று கேட்கும் கேள்வி. மற்றொரு புறம் கஞ்சி வார்க்கும் தெய்வத்தின் அதிகாரம். இப்படியாக ஒருவன் கஷ்டப்படுகிறான். இவ்வளவும் வாழ்க்கைத் துணைவியின் அநுசரணை யின்மையால் நிகழ்வன. புருஷன்-தான் தனக்கு கஞ்சி வார்க்கும் எஜமானனுக்குப் பயப்பட்டு நடக்கிறான். சரிவர வேலைகளைச் செய்கிறான். அவனது திருப்தியையே பிரதானமாக எதிர்பார்க்கிறான். அவன் அபராதம் போட்டுவிடுவானோ என்று பயப்படுகிறான். ஆனால் அவனால் போஷிக்கப்படும் மனைவி அவனுக்குப் பயப்படுவதில்லை. கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் ஊதியம் முதல் தேதியில் வாழ்க்கைத் துணைவியால் பறி முதலாக்கப்படுகிறது. பின்னர் அவன் தனக்கு வேண்டிய செலவுகளுக்கு யாசகம் பெறவேண்டி யிருக்கிறது. ஒரு புருஷன் தன் எஜமானனுக்குப் பயப்படுவதெல்லாம், உழைப்பதெல்லாம், பெரும்பாலும் தன் குடும்ப பாரத்தை உத்தேசித்துத்தான். ஆனால் அந்த உழைப்பிற்கும், கஷ்டத்திற்கும், வீட்டில் பரிகாரம் (உபசரிப்பு) ஏற்பட்டால் குணமாயிருக்கும். அது விட்டு வீட்டில், குடும்பத்துடன் ஒத்துழையா நாரீமணிகள் இருந்தால், அந்த வீடு பிறாது பரிகாசத்திற்கு ஆளாகக் கேட்பானேன்? மேலும் சினிமாக்களில் காட்டப்படும் கற்பனைக் கதைகளால் ஸதிரீகள் புருஷர்களை அலக்ஷியப்படுத்த ஆரம்பித்துவிடுவார்கள் போலிருக்கிறது. இவை புருஷன் தன் மனைவிக்கு உழைத்துக் கொட்டுவதற்கு நன்றியாகாது. மேலும், இவை, பாரத நாட்டின் கௌரவத்திற்கும் பண்டைய ஸ்திரீ ரத்னங்களின் பெருமைக்கும் பங்கமாகும்.

(3) 'கோபம் சண்டாளம்' என்பார்கள். 'ஆறுவது சினம்' என்ற பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்கள்கூட ப்பாடம் சொல்லிக் கொடுப்ப

தற்குள் எத்தனையோ தடவை தன் விஸ்வ ரூபத்தைப் பிள்ளைகளின்மீது காட்டிவிடுகிறார். சிலருக்கு வீட்டில் கோபம் வந்தால் அதை வெளியில் காண நேரும் ஒவ்வொருவர்மீதும் பிரயோகிப்பார். சிலர், ஆபீஸில் தன் வேலைகளைச் சரிவர செய்ய முடியாமல் கஷ்டப்பட்டால் பாவம் குழந்தைக ளிடமும் மனைவியிடமும் கடுகடுப்பாகப் பேசுவார்கள். சிலர் பண்டங்களின் மீது காட்டுவார்கள். மற்றும் சிலர் தன் தலையி லடித்துக்கொள்வார்கள். இப்படியாக கோபம் வந்தால் அதை ஒன்று யனமாா பிறர்மீது பிரயோகிக் கிறோம். அல்லது பண்டங்களின் மீதாவது பிரயோகிக்கிறோம். இல்லாவிட் டால் சாப்பாட்டின்மீதாவது காட்டுவதன் மூலம் பட்டினி கிடக்கிறோம். பொதுவாக் கோபம் என்பது சரீரத்திலுள்ள ஓர் வியாதியின் சேஷ்டை என்று சொல்லலாம். மேலும் வியாதிஸ்தர்களுக்குத்தான் கோபம் அதிகம். கோபம் உண்டாவதால் நிலையான புத்தியை இழக்கிறோம். அதன் காரண மாக பல தீச் செயல்களுக்கு ஆளாகிறோம். கடைசியில் தான் தன் குற்றத் துக்கு வருந்துகிறோம். எனவே, கோபம் சண்டாளம் என்பதை ஞாபகத் தில் வைத்து நடத்தலே நன்மை யளிக்கும்.

(4) மனிதன் ஒவ்வொருவனையும் கடவுள் நிதானமாகவே தான் வைத்திருக்கிறார். அப்படி யிருக்கும்போதே, ஒருவனை ஒருவன் வைத் தேனு பார் என்று அற்ப விஷயங்களுக்காக ஹைகோர்ட் வரையில் ஆயிரம் ஆயிரமாக செலவு செய்கிறான். கடைசியில் ராஜியாகுமாறு கோர்ட்டார் நிர்ப்பந்திக்கின்றனர். ராஜியாகி வெளியேறுகின்றனர். இந்த புத்தி ஆதியி லேயே இருக்கக்கூடாதா? என்று நினைத்து வருந்துகின்றனர். தான் வீணாக செலவு செய்ததால் கஷ்டப்படுகின்றனர். இப்படியாக ஒருவனுக்கு கஷ்டத்தின் பயனாக கிடைக்கும் புத்தியைப்போல் பிறர் சொல்வதால் ஏற் படாது. கோர்ட்டில் நடக்கும் வழக்குகள் பெரும்பாலும் அற்ப விஷயங் களுக்காகவம், வைராக்கியத்திற்காகவும், பிறர் தூண்டுதலினாலும், வஞ்சனை யான எண்ணங்களாலும்தான் நடக்கின்றன. எனவே கோர்ட்டிற்கு செல் லும் வழக்குகள் குறைவுபட்டாலன்றி கிராமங்களில் செல்வ நிலை செழிக்க மார்க்கமில்லை. கிராமவாசிகளின் பெரும்பாலான செலவுகளில் கோர்ட்டுக் குத் தொலைப்பதும் ஒன்றாகும். இதனால் பல குடும்பங்கள் கடன் பட்டு கஷ்டப்படும் நிலைமையையும் அடைகின்றன.

(5) ரகசியம் என்று சொல்லப்படும் விஷயங்கள்தான் அதி சீக்கிரத் தில் பரவுகின்றன. மேலும் ஒரு விஷயமானது ஒருவரிடமிருந்து மற்றொரு வருக்கு அறிவிக்கப்படும்போது அதன் உண்மை சற்று வேறு ரூபமடை கிறது. இதுபோலவே அதைப் பரவச் செய்யும் ஒவ்வொருவரும் அதற்கு ஒவ்வொரு ரூபம் கொடுக்கின்றனர். கடைசியாக அது (உண்மையை அறிந்தவன்) சம்பந்தப்பட்ட மனுஷ்யன் காதிற்கு எட்டும்போது, அவன் தன் ரகசியம் அடைந்த மாறுதலைக் கேட்டு வெட்கப்படும்படி உலகம் செய்துவிடுகிறது. ஆகவே ஒவ்வொருவனும் சத்தியத்திற்கும், உண்மைக் கும் பயந்து நடந்தால் பிறருக்குப் பயப்பட வேண்டுவதில்லை. உலகமே அவனைப்பற்றிப் பேசப் பயப்படும். அப்போது அவனுக்கு ரகசியம் என்று ஒன்றுமிருக்கவேண்டிய அவசியமும் மேற்படாது.

கம்பரும் தமிழும்

——(0)——

(ஜி. கே. ராமசாமி.)

"கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்
கம்பன் பிறந்த தமிழ் நாடு"

என்று நம் கவி சுப்ரமண்ய பாரதியார் பாடிய பாட்டை நாம் செவியுறும் போதெல்லாம் கம்பரைப் பற்றிய எண்ணங்களும், அவர் வாழ்ந்த வீர வாழ்வும் நம் மனத்துள் எழுந்து நமக்கோர் உற்சாகத்தையும், இன்பத்தையும் தருவதை நாம் நன்கறிவோம் அதேசமயம், சற்று பெருமையும் அடைகிறோம். நம் தமிழ்நாட்டில்—நம் காவிரி நாட்டில்—அல்லவா தமிழ்ப் பெரும் புலவர்களில் மிகவும் சிறந்தவரென்று கூறப்படும் கம்பர் தோன்றினர்! கம்பரைப் பெற்ற தமிழ்நாடே சிறப்புடைத்து!

இனி நாம் கம்பரின் பிறப்பு வளர்ப்புக்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். சோழ நாட்டின் கண் திகழும், சிறந்த ஸ்தலங்களில் ஒன்றாகிய திருவழுந்தூரில், உவச்சர் குலத்தில், ஆதித்தர் என்பவருக்கு, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியவர் நம் கம்ப நாட்டாழ்வார். இவர், தன் காலத்தில் சடையப்ப வள்ளல் என்பவரால் பெரிதும் ஆதரிக்கப் பட்டு வந்தார். சடையப்ப வள்ளல் என்பவர் திருவெண்ணெய் நல்லூரில் ஒரு பெரிய செல்வந்தர். அவருக்குக் கல்வியில் பேரார்வம் உண்டு. கம்பரின் கல்வித் திறத்தையும், அவருடைய பாக்களின் நயத்தையும் கண்டு பெரிதுவந்து கம்பரை ஆதரித்தார் என்று சொல்லப்படுகிறது.

நம் கம்பர் தோன்றிய காலத்தைப் பற்றி அநேக அபிப்பிராய பேதங்களிருந்து வருகின்றன. சிலர்,

"எண்ணிய சகாத்தம் எண்ணூற்
றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை."

என்னும் பாட்டைக் கொண்டு கம்ப நாடர் வாழ்ந்து வந்தது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டே என்கின்றனர். மற்றும் சிலர்,

"ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு மூவலூர்ச்

சீரார் (கு) ணுதித்தன் சேயமையப் பாடினன்
காரார்கா குத்தன் கதை"

என்னும் வெண்பாவை ஆதாரமாகக் கொண்டு கம்பர் ராமாயணத்தை யியற்றிய காலம் கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டு என்று கூறுகின்றனர். பதினொன்றாவது நூற்றாண்டில் தோன்றினார் கம்பர் என்றுரைப் போரு முளர். அவர் பிறந்த காலம் எதுவாயிருந்தாலும் நாம் அவருக்கு தமிழன் என்ற முறையில் மிகவும் கடமைப் பட்டிருக்கின்றோம் என்பதை ஒரு காலும் மறத்தல் கூடாது.

கம்பர் தமிழுக்குச் செய்த தொண்டுகள் கணக்கிலடங்கா. அவருடைய கல்வியின் பெருமையையும், அவருக்குத் தமிழிலிருந்த பேரபிமானத்தையும், அவருடைய கவித் திறமையையும் விளக்க நமக்கு அநேக பழமொழிகள் இருக்கின்றன.

'கல்வியில் பெரியவன் கம்பன்,' 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்,' 'கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே,' 'கவிச் சக்கரவர்த்தி,' என்பன அப்பழமொழிகளில் சிலவாகும்.

கம்பருக்கு தேசியப்பற்று அதிக மிருந்தது என்பதை விளக்கா நிற்கின்றது; அவர் இராமாயணத்தில், குகப் படலத்தில் வருகின்ற

"பூவிரி பொலங்கழல் பொருவில் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடு."

என்ற வெண்பா. தேசியப்பற்று மிருந்திருந்ததைவிட அவருக்கு மொழிப் பற்று அதிக மிருந்தது என்று திகழ்வனவா யிருக்கின்றன. அவர் இராமாயணத்தில் சிற்சில இடங்களில் தமிழ்மொழியை மிகவும் சிறப்பித்துக் கூறி யிருக்கிறார்.

'நன்றி மறவேல்' என்ற மூதுரைக் கிணங்க நாம் எப்பொழுதும் ஒருவர் நமக்குச் செய்தநன்றியை மறத்தல் கூடாதென்பது வெளிப்படை. செய்நன்றி மறந்தவனிடத்து மானிடத்தன்மை கிஞ்சித்தேனுமில்லை யென்பது துறுதி. நன்றாகக் கற்றறிந்த பெரியோர் ஒருவர் தமக்குச் செய்த உதவியை எழு பிறப்புக்களிலும் மறவார் என்று பொருள்பட நம் பொய்யில் புலவரும்,

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு."

என்றும் பாடிப் போந்தாரன்றோ? இதே கருத்தைத்தான் கம்பர் செய்கையின் மூலம் உலகுக்கு விளக்கி யிருக்கிறார். அவரைப் பெரிதும் ஆதரித்து வந்த சடையப்ப முதலியாரையும், மற்றும் அவரைச் சார்ந்த பெரிய வள்ளல்கள் சிலரையும் கம்பர் தன்னுடைய நூலில் பத்து இடங்களில் புகழ்ந்திருக்கிறார். மேலும் இவர் கள்ளுண்டலை அறவே வெறுத்திருக்கிறார்.

"வஞ்சமும் களவும் பொய்யு மயக்கமு மரபில் கோட்டும்
தஞ்சமென்றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும்
கஞ்சமெல் லணங்குந் தீருங் கள்ளினு லருந்தி னுரை
நஞ்சமும் கொல்வ தல்லா னரகினை நல்கா தன்றே."

என்ற செய்யுளிலிருந்து பெறப்படுகிறது.

கம்பருடைய நூலிலிருந்து நமக்கு ஒரு முக்கியமான விஷயம் ஓர் அளவு தெரிகிறது. அவர் காலத்தில் பெண்களின் நிலை எவ்வாறிருந்தது என்பதே அந்த விஷயமாகும். கம்பருடைய காலந்தொட்டே நம்முடைய முன்னோர் பெண் கல்வியையும், பெண்களுடைய சுதந்திரத்தையும் வற்புறுத்தி யிருக்கின்றனர் என்பது, கீழ்வரும் மிகவும் போற்றத் தக்கதான வெண்பாவிலிருந்து தெரிகிறது:—

"பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே."

வடநாட்டில் உள்ள சிறந்த காவியங்கள் நம் தென்னாட்டிலில்லை யென்ற குறையைத் தீர்த்து தமிழர்களைப் பெருமைப்பட வைக்கும் பொருட்டு, வால்மீகி இராமாயணத்தை, தமிழில் மொழிபெயர்த்து மிக அழகாக எழுதிய நம் கம்பரை நாம் எப்போதும் போற்றிப் புகழ்வோமாக.

"சிந்தனைப் பூங்காவில் தான் கற்பனை மலர்கள் பூக்கின்றன. அவ்வப்போது நிகழும் நிகழ்ச்சித் தென்றலால் சொற் சித்திர அழகு மணம் கமழ்கிறது. அந்த காலத்தில் தான் சொற் சுவைத் தேன் கற்பனைப் பூக்களில் நிரம்பிக் கலா ரசிக வண்டுகளை மயக்கி வசப்படுத்த முடிகிறது. கலா ரசிக வண்டுகள் சொற் சுவைத் தேனை உண்ணும்போது சிற்சில சொற்பிழை மகரந்தத் தூள்கள் உதிர்ந்து விடுவது வழக்கம்."

* * * *

"மனிதன் கிணறு, அவனுடைய புத்தி கிணற்று நீர்- புத்தியை நல் வழியில் உபயோகிக்க, உபயோகிக்க வளர்ச்சியுற்று, மனிதன் மேலான பதவியில் வாழ்கிறன். கிணற்று நீரை எடுக்க, எடுக்க, ஊற்றுப் பெருக்கெடுத்து சுத்த நீராகிறது. நீரை எடுக்காவிடில் கிணறு பாழாகும்; மனிதனும் அவ்விதமே."

பாட்டியின் பழமொழி

(கார்த்திகேயன்.)

★

"தலைவலியுந் திருகுவலியும் தனக்கு வந்தாத்தான் தெரியும்" என்று எங்கள் பாட்டி அடிக்கடி கூறுவதுண்டு. அதற்குப் பொருள் இன்னது என்று எனக்கு விளங்கவேயில்லை:—

இரண்டு மாதங்கள் இருக்கலாம் இந்தக் கோர சம்பவம் நடந்த.— பக்கத்து வீட்டிற்கடுத்த வீட்டில் நண்பன் ஆபத்சகாயம் வசித்து வந்தான். அவன் பிள்ளை ராமுவுக்குக் கலியாணம் என்ற ஒன்றை ஏதோ காமாஞ்சோமான்னு நடத்தி அவளும் புக்ககம்வந்து இரண்டொரு மாதமாயிற்று.

ஒருநாள் காலையிலே நான் படுக்கையைவிட்டு எழுந்திருப்போமா வேண்டாமா என்று யோஜித்தபடி கண்களைத் திறப்பதும் மூடுவதுமாயிருந்தபோது அவள் (வீட்டுக்காரி) ஓடிவந்து "இந்தாங்க! இன்னுமா தூங்கறீங்க! சேஷி மாட்டுப்பொண் கெணத்திலே விழுந்துட்டாளாம்..." என்றவுடனே வாரிச்சுருட்டி எழுந்தேன்.

"தூக்கியாச்சா? உயிர் இருக்கா?" என்று வினவினேன்.

"உயிர் இருக்கவாவது, கொள்ளவாவது? ராத்திரியே எல்லாரும் படுத்தப்பறம் விழுந்திருப்பா போலிருக்கு! இப்போதான் காத்தாலே கெணத்துக்குத் தண்ணீர் மொள்ளப் போனபோது மாமியார் பார்த்துட்டுப்போய்க் கூக்குரல் போட்டாளாம். சீனுவும் ராமனும் ஓடிப்போய்த் தூக்கிப் போட்டார்களாம்."

"போ! பொயிட்டாளா!" என்று மறுபடியும் படுத்துக்கொண்டு போர்வையை யிழுத்து மேலே போட்டுக்கொண்டேன்.

"என்ன இது?" என்று அவள் முகவாய்க்கட்டையில் கை வைத்துக் கொண்டு பார்த்தாள்.

"போடீ போ! ஆபத்சகாயம் நமக்கு ரொம்ப வேண்டியவன்தான். இதற்காக இப்போ யார்போய் மாரடிக்கிறது? இந்நேரம் போலீசுக்குத் தகவல் எப்படியும் எட்டியிருக்கும். அவன் வேறு வந்து 'சாக்ஷி கீக்ஷி'ன்னு வந்தவன் போனவனை யெல்லாம் எழுதிண்டு போய்க் கோர்ட்டுக்கு இழுத்தடிப்பான். இந்தத் தொல்லையிலே யாரடி மாட்டிக்கொள்றது?" என்றேன்.

"நீங்க எதுக்கும் பொம்மனாட்டிமாதிரி வீட்டுக்குள்ளேதானே நுழைவேன்!"

எனக்குக் கோபம் வரத்தான் செய்தது. அதற்குள் அவள் தன் முகத்தை ஒரு திருப்பு திருப்பிக்கொண்டு சமையற்கட்டுக்குப் போய்விட்டாள்.

நானும் சனி தொலைந்தது என்று கண்களை மூடிக்கொண்டு குறட்டைவிடப் பார்த்தேன். ஆனால் இந்த இழவு சேதி வந்தபிறகு நித்திரை எங்கே வந்து தொலையறேன் என்கிறது?

ஆபத்சகாயம் நல்ல மனுஷன்தான். அவன் சம்சாரம் சேஷியைப் பற்றி ஊரார் பல தினுசாகச் சொல்லிக்கொண்டாலும் அவள் அப்படிப் பொல்லாதவள் அல்ல. மகன் வெங்கிட்டு பரமசாது. அசடு என்றாலும் தகும். மருமகள் ஊருக்கே புதுசு. இருந்தாலும் பார்வைக்கு சாந்த சொரூபியாகத்தான் காணப்பட்டாள்.

இப்படி யிருக்க இவள் ஏன் கிணற்றில் விழவேண்டும்? கால்தவறி விழுந்திருப்பாளோ என்றால், எல்லோரும் கிணற்றிற்குப் போனபிறகு இவளுக்கு கிணற்றில் என்ன வேலை? எனவே இவள் வேண்டுமென்றே கிணற்றில் விழுந்திருக்கவேண்டும். இவ்வாறு இவள் தற்கொலை செய்துகொள்ளவேண்டிய அவசியந்தானென்ன?

என் மனைவி சொன்னாள்: மாமியாரின் கொடுமை தாங்க முடியாது கிணற்றில் விழுந்து விட்டாளென்று. இரண்டு தினங்களுக்குப்பிறகு க்ஷவரம் செய்யவந்த நாவிதன் சொன்னான்—“ஏதோ பவுன் கொலுசு ஒன்றை மருமகள் தன் மாமியாருக்குத் தெரியாமல் கெட்டுப் போக்கிவிட்டாள். அதனாலேயே கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டாள்” இன்னும் இரண்டொருவர் “இப்படி ஒரு அசட்டுப்புருஷனிடம் வாழ்வதைவிட உயிரை விட்டுவிடுவது மேல் என்று அவள் விழுந்துவிட்டாள்.” என்றெல்லாம் சொல்லி வந்தனர்.

காரணம் எதுவா யிருந்தாலும் அவள் விழுந்தது உண்மை; உயிர் துறந்ததும் உண்மை. இந்த அளவோடு என் தீர்மானத்தை முடிவு கட்டிக்கொண்டு கொஞ்சம் ஆராய்ச்சித்துறையி லிறங்கலானேன்.

அவளுக்கு ஏதோ கஷ்டம் வந்தது. மனதால் பொறுக்க முடியாத கஷ்டம். அந்தக் கஷ்டத்தின் கொடுமை, அதன் வலிமை முழுதும் அவளுக்குத்தான் தெரியும். வேறு ஒருவருக்குந் தெரியாது. ஆ...மா...ம் தலைவலியும் திருகுவலியும் தனக்கு வந்தால்தான் தெரியும்!...உண்மைதான். அவள் திருகுவலி அது. அது அவளுக்குத் தெரிந்துதானே யிருக்கவேண்டும்!.........அவள் மாமியாருக்கோ, மாமனாருக்கோ தெரியாமலே போய்விட்டதல்லவா? ஏன், அவள் கணவனுக்குக்கூட தெரியாமல்தானே போய்விட்டது? ஆம் வாஸ்தவந்தான். தலைவலியும் அப்படித்தான் போலும்! பாட்டியின் பழமொழி இப்போதுதான் எனக்கு விளங்கிற்று.

ஆனால் இந்தப் பழமொழியின் பொருள் எனக்கு விளங்குவதற்கு பாவம்! இந்த ஆபத்சகாயத்தின் மாட்டுப்பொண் கிணற்றில் விழுந்து பிராணனைவிட வேண்டியிருந்ததே என்று நினைக்கிறபோது கொஞ்சம் வருத்தமாகத்தா னிருக்கிறது! ஆனால் நாமென் செய்வது? அவள் திருகுவலி அப்படி யிருந்தது போலும்!

ஸ்ஸேஸமிரா

(டி. கே. கோவிந்த ஐயர்.)

★

முன்னொரு காலத்தில் தார் தேசத்தில் மஹா பிரஸித்திபெற்ற "போஜன்" என்ற மஹாராஜா ஒருவர் இருந்தார். கல்வியில் தேர்ந்தவராயும், எல்லா வித்தைகளையும் பரிபாலிப்பவராயு மிருந்தார். அனேக வித்வான்களும், கலாநிபுணர்களும் அவர் சபைக்குப்போய் தங்கள் தங்கள் கல்வித்திறமைகளை வெளிப்படுத்தி ஸன்மானங்களைப் பெறுவதுண்டு. ஒருசமயம் சித்திரம் எழுதுவதில் மிகக் கீர்த்தியடைந்த சித்திரலேகன் என்பவன் ராஜசபைக்கு வரும்படி நேர்ந்தது. ஒரு சில அடையாளங்களைக்கொண்டே, உருவம் முழுவதையும் ரூபமாய் வரைந்து அமைக்கக்கூடிய விசேஷ சக்தி அவனிட மிருந்தது. இவனுடைய சாமர்த்தியத்தை பரிசோதிக்கக் கருதி, போஜராஜாவானவர் ஓர் சிகாபந்தத்தை (Lock of hair)க் கொடுத்து அக் கூந்தலுக்குரிய உருவம் முதலியதை சித்திரம் வரையும்படி ஆக்ஞாபித்தார். அந்த உத்தரவை யனுசரித்து சித்திரலேகனும் தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்க வேண்டுமென்ற கருத்துடன், அதிலேயே மனதைச் செலுத்தினவனாய் தன்னாலியன்ற மட்டும் வெகுநாள் வேலைசெய்து இராணியின் படத்தை எழுதி முடித்தான். அந்தச் சித்திரமானது பார்த்தவர்கள் மனதைக் கவரக்கூடிய அழகுள்ளதாயிருந்ததுடன் இராணியின் ரூபலாவண்யத்தை, தத்ரூபம் எல்லா அம்சங்களிலும் ஒத்ததா யிருந்தது. திடீரென்று பார்ப்பவர்களுக்கு இராஜாத்திதான் உயிருடன் நிற்கிறாளோ என்று தோன்றும்படி யிருந்தது. படம் வரைந்து முடிந்ததும் சித்திரக்காரன் அதை உற்றுப்பார்க்கவே, படத்திலுள்ள உருவத்தின் குறுகிய இடைப்பிரதேசத்தில் அதிசூக்ஷ்மமான ஒரு புள்ளி தென்பட்டது. அவன் அதை அழிக்க எவ்வளவு தடவை முயன்றும் பயன்படாமல், அப்புள்ளி அங்கேயே காணப்பட்டது. சித்திரக்காரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை, என்னசெய்வது என்று ஏங்கினான். தீராத்துயரம் முகத்தில் தோன்றியது. பிரமை பிடித்தவன்போல் ஆலோசனையில் ஆழ்ந்து, தேகம் வியர்க்க தூரியத்தை வர்ணத்தில் தோய்த்து, கையில் பிடித்தபடியே விசாரத்துடன் தனிமையில் உட்கார்ந்து விட்டான். அவ்

வழியே சென்ற காளிதாஸன் மஹா துக்காக்ராந்தனா யிருக்கும் சித்திரலேகனைப் பார்த்து, அனுதாபப்பட்டு மிகக் கருணையுடன் அவனை நோக்கி, "ஏனப்பா மிக விசனமுற்றிருக்கிறாய்? உனக்கு என்ன ஆபத்து நேர்ந்தது? வியாதியா? மனோவிசாரமா? சீக்கிரம் சொல்லு. உனக்கு வந்த சோகத்தை, என்னால் கூடுமானால் நிவர்த்தி செய்ய சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லவே, சித்திரக்காரனும் உடனே நிமிர்ந்துபார்த்து; துக்கம் நிவர்த்தியானவன்போல் பெரு மூச்சுவிட்டு, "ஐயா, இதோ நான் எழுதி யிருக்கும் படத்தைப் பாரும்; இந்த இடத்தில் காணப்படும் புள்ளியை அழித்துவிட வேணுமென்று நான் பலதடவை முயன்றும் அது அதே இடத்தில் புலப்படுகிறது. இதுதான் என் விசன காரணம்" என்றான். இதைக் கேட்டதும் மஹாபுருஷனான காளிதாஸன் "இதென்ன விந்தை? சித்திரவேலையில் இவ்வளவு நிபுணனானவன் மனப்பூர்வமாயும், வெகு நிதானம் பொறுமையுடன் வரைந்திருப்பதில் பிழை எப்படி ஏற்படக்கூடும்? இதில் ஏதோ ரகசியமிருக்கவேண்டும்" என்று சற்று தியானிக்குங்கால், "ஒருகால் அது ஒருமச்சமா யிருக்கலாமோ" என்கிற யோஜனை மனதில்பட மறுக்ஷணத்தில் அது "ஒரு மறுதான்" என்கிற நிச்சயமான புத்தி உண்டாய் விட்டது. உடனே சித்திரக்காரனை நோக்கி, "நீ விசாரப்பட்டு அதை அழிக்க வீண் சிரமப்படாதே. எந்த உருவத்தைச் சித்திரரூபமாய் எழுதுகிறாயோ அந்த சரீரத்திலேயே அந்த ஸ்தானத்தில் ஒரு மச்சமிருக்கக் கூடும். அதைக் காட்டக்கூடிய ஒரு புள்ளி படத்தில் தெய்வீகமாக ஏற்பட்டால் அது உன்னுடைய சாமர்த்தியக் குறைவால் நேர்ந்ததென்று ஏன் வீணாய் ஏங்குகிறாய்?" என்று காளிதாஸன் தைரியம் சொல்ல, அவனும் படத்தை வர்ணம் முதலானது கொடுத்து பூர்த்திசெய்ய ஆரம்பித்தான்.

சித்திரவேலையை முடித்துக்கொண்டு சித்திரக்காரன் அதை அரசனிடம் கொண்டுபோய் கொடுத்தவுடன் அதன் வேலைத்திறமையையும், உயிருள்ளதுபோல் தோன்றும்படி அவ்வளவு சிறப்பாய் வரைந்திருக்கும் ரூபவிசேஷத்தையும் மெச்சி, ஒவ்வொரு அங்கத்தையும் உற்றுப்பார்க்க ஆரம்பித்தான். திடீரென்று அந்த மச்சத்தைக் கண்ணுற்றான். அடங்காத ஆச்சர்யமுண்டாகி அடுத்தக்ஷணம் தீராக் கோபமாக மாறிற்று. உடனே கண்கள் சிவந்து முகங் கடுகடுத்து, மகா ஆவேசத்துடன் அரசன் சித்திரக்காரனை நோக்கி, "இது ராஜ சன்னிதானம். பொய் பேசினால் உயிரை இழக்கும்படி நேரிடும். இத்துடன் நான் கேட்பதற்குப் பதிலுரைக்க வேண்டும். இந்த மச்சமிருப்பதாக உனக்கு எப்படித் தெரிந்தது? தெய்வ உபாசனை யுண்டா? யாரேனுங் கூறினார்களா?" என்று கேட்டார். சித்திரக்காரனும் நடுநடுங்கி, அரசனைப்பார்த்து "பிரபுவே, நான் நிரபராதி. அது விஷயம் எனக்கு ஒன்றும் தெரியாது. அதன் இரகசியத்தை எனக்குச் சொன்னவர் தங்கள் ஆப்த நண்பரான காளிதாஸ மஹாகவியே" என்றான்.

அச்சமயம் இதைக் கேட்டுக்கொண்டிருந்த காளிதாஸனும் மறுக்கவில்லை. இது கேட்டு, அரசன் ஒருகணம் ஒன்றும் தோன்றாமல் சிந்தனையி லாழ்ந்தான். பதிவிரதையான தன் பத்னியிடத்தில் அவனுக்கு மிகுந்த சந்தேகம் ஜனித்தது. அரசனுக்கு காளிதாஸனிடத்தில் அவநம்பிக்கை உண்டாயிற்று. அம்மச்சம் ஒருவருக்கும் தெரியாமல் பெரும் ரகசியமா

யிருந்தமையால் அரசன், “இராணியோடு தேக சம்பந்தம் வைத்துக் கொண்டிராவிட்டால், காளிதாஸனுக்கு இது எப்படிக் தெரியக் கூடும்? நிச்சயம், நம்மிடமிருந்து பலவித உபகார மடைந்தும், காளிதாஸன் நமக்குத் துரோகம் செய்தான்” என்று தீர்மானித்து அரசன் அவன் தலையை வாங்கி விடும்படி, வெகு கோபத்துடன் உத்தரவளித்தான். ஆனால், மந்திரி, காளிதாஸன் இவ்விதத் துரோகம் செய்யக்கூடியவனல்லன் என்று நினைத்து, அவன்மேல் தயைபுரிந்து கொலையாளிகளிட மிருந்து அவனைத் தப்பி வித்து, அரசனுக்கு மாத்திரம் கொலை செய்யப்பட்டதாகவே நம்பிக்கை உண்டாகும்படி செய்துவிட்டான்.

சிலநாள் பிரகு, ராஜகுமாரன் வேட்டையாட காட்டுச்குப் போனான். ஒரு மிருகத்தைத் துரத்திக்கொண்டு, வெகுதூரம் காட்டுக்குள் போக, தன் பரிவாரங்களை விட்டுப் பிரிந்துவிட்டான். சூர்யன் அஸ்தமிக்கும் தருணம் வெகு விரைவாய் எங்கு பார்த்தாலும் அடர்ந்த இருட்டு கவர ஆரம்பித்தது. காட்டில் வழியோ தெரியவில்லை. மனோதைர்யம் குறைந்து பயமானது மேன்மே லதிகரித்தது. இந்த ஸ்திதியில் ஒரு புலியானது பாய்ந்து கொண்டு வருவதைக் கண்ணுற்றான். அவன் சவாரி செய்யும் குதிரையோ ஓர் அடிகூட மேல் நடக்கவில்லை. நாள் முழுவதும், உணவு, ஓய்வு இல்லாமல் வேட்டையாடி களைப்புற்று, தானும் ஒரு அடிகூட தாண்ட சக்தியற்றுப்போனவனுக்கு புலியைக் கண்டதும் கொஞ்சம் மிகுந்திருந்த உணர்வும் தவறிற்று. மறுபடியும் புலி மிகவும் சமீபத்தில் வந்துவிடவே ராஜகுமாரன் குதிரைமீதிருந்து தாவி, வழியிலிருந்த ஒரு மரக்கிளையை பிடித்துக் கொண்டு உயர ஏறும்போது ஒரு கரடியைப்பார்த்து திகைத்து நின்றான். “தலைவலி போகத் திருகுவலி வந்தது” போலும், ‘கலத்திலிருந்து அடுப்பில் விழுந்தாற்’போலும், புலியைத் தப்பிக் கரடி கையி லகப்பட்டுக் கொண்டேனே” என்று ராஜகுமாரன் நினைத்து, அனலில் காட்டிய மெருகுபோல் உருகித் திக்கற்றவனாய், எங்கும் நிறைந்தவரும் கருணாநிதியுமான பரமாத்மாவைத் தியானித்து ஓ என்று அலறிக்கதற யத்தனிக்கையில் கரடியானது-மிருதுவாய் அவனருகில் வந்து வெகு அன்புடன் வார்த்தைகளைச் சொல்லி, தன்னிடத்தில் அவனுக்கு நம்பிக்கை வரும்படி செய்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் அதன் மடியில் படுத்துறங்கினான். புலியானது கரடியை இனிய வார்த்தைகளால், ராஜகுமாரனைக் கைவிட்டு விடும்படி கேட்டுக்கொண்டது; “மனிதன் நம்ம ஜாதிக்கே பரம விரோதி; அவனுக்குபகாரம் செய்தால் சமயம் பார்த்திருந்து நமக்கு அபகாரம் தேடுவானே யொழிய, ஒருகாலும் நம்மிடத்தில் நிஜமான விசுவாஸம் வைக்கமாட்டான்” என்றும், இன்னும் பலவிதமாக புலி அவனைக் கீழே தள்ளிவிடும்படிக் கரடிக்குத் துர்போதனை செய்தும் அது சரண மடைந்தவனையும் தன்னிருப்பிடம் வந்தவனையும் கைவிடுதல் அதர்மமென்ற நிச்சயத்துடன் சும்மா இருந்துவிட்டது. சற்று நேரத்தில் கரடியும் அயர்ந்து நித்திரை போய்விட்டது. ராஜகுமாரன் கண் விழித்து, சரடி சந்தேகமற்று குரட்டைவிட்டுத் தூங்குவதையும், தன்னைக் கொல்லவந்த புலி மரத்தின் கீழ் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பதையும் கண்டான். புலி, ராஜகுமாரனிடத்தில் தன் நய வஞ்சகத்தைக் காட்டி ஏமாற்ற ஆரம்பித்தது. அதன் கபட.வலையி லகப்பட்ட ராஜகுமாரனும், கரடியைத் தள்ளிவிட்டால் தான் தப்பித்துக்கொள்

லாமென்கிற துராசையுடன், தர்ம சிந்தை யுடையதும், தன்னை ஆபத்துக் காலத்தில் சிநேஹபாவத்துடன் பாதுகாத்ததுமான கரடியைத் தள்ளி விட யத்தனித்தான். அவன் அப்படிச் செய்யுமுன்னமேயே கரடி விழித்துக்கொண்டு அவனுடைய பாவத்தை நன்குணர்ந்து, அவனுடைய நன்றி யறிவின்மையும், துரோக சிந்தனையையுங்கண்டு, வெகு கோபங்கொண்டு, அவன் நாக்கை இழுத்து அதில் ஸஸேமிரா என்று நாலக்ஷரங்களை எழுதவே, அவன் உடனே பேசும் சக்தியற்றவனாய், எவ்விதக் கேள்விகளுக்கும் ஸஸேமிரா என்று மட்டும் பதில் சொல்லத் தலைப்பட்டான். நன்றி யறிவின்மைக்கு இத் தண்டனையும் போதாது.

இது இப்படி நிற்க, மறுநாட்காலையில், வேட்டைக்காரர்கள் யுவராஜாவைத் தேடிக்கொண்டு அவனிருக்கு மிடம் வரவே, அவன் ஊமையாய் வாக்கற்று, பயித்தியம் பிடித்தவன்போ லிருப்பதைக் கண்டு தீராத் துயரமடைந்தார்கள். அவனுக்கு நேர்ந்த விபத்தின் வரலாற்றைக் கூற புலியாவது கரடியாவது அப்போது அவ்விடமில்லை. "ஸஸேமிரா" என்பது தான் அவன் சொல்லக்கூடியதா யிருந்தது. உடனே அவர்கள் அவனை நகரத்திற் கழைத்துப்போனார்கள். தனது குமாரனுடைய நிலையைப்பார்த்து சகியாமல், அரசன் அழுது புரண்டு துக்கசாகரத்தில் மூழ்கினான். பிரஜைகளும், அனுதபித்தார்கள். ஆனால் அவனை சோகஸாகரத்திலிருந்து கை தூக்கி, கரைசேர்த்து, ரக்ஷிக்கக்கூடியவன் அவர்களி லேற்படவில்லை. இப்படியே சிலகாலஞ் சென்றது. ராஜாவிடத்தில் பேரன்புடையவனும் புத்திசாலியுமான மந்திரி இதற்கு பரிஹாரம் தேடுவதற்காக ஆலோசிக்குங்கால், "யாராவது இதை நிவர்த்தி செய்யக்கூடுமானால், அது காளிதாஸனாகவே இருக்கவேண்டும்" என்ற எண்ணம் அவன் மனதிற்பட்டது. உடனே காளிதாஸனைத் தேடிப் பிடித்து பரிகாரம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்து முடித்துக்கொண்டு, அரசனிடம் போய், வடதேசத்திலிருந்து யாரோ மாந்திரீகம் தெரிந்த ஒரு கோஷாப்பெண் வந்திருப்பதாகவும், ராஜ குமாரனுக்கு நேர்ந்த ஆபத்தை அவள் நிவர்த்திக்கக் கூடுமென்றும் சொன்னான். உடனே ஒரு பெரிய அறையில் திரையொன்று போடப்பட்டு, பின்பக்கத்தில் அந்த வேஷதாரனும் முன்பக்கம் ராஜா ராஜகுமாரனும் மற்றவர்களும் நின்றார்கள். திரை பின்பக்கமிருந்து அந்த பெண் ராஜகுமாரனை உத்தேசித்து "எவ்விடத்தில் யாது காரணத்தால் இந்த ஆபத்து நேரிட்டது" என, வழக்கம்போல் ஸஸேமிரா என்கிற பதில் பிறந்தது. கொஞ்சகாலம் சும்மா விருந்து, காளிதாஸன், மறைபொருளான ஸஸேமிராவின் முதல் அக்ஷரமான ஸ இல் ஆரம்பிக்கும்.

"ஸத்பாவம் ப்ரதிபந்நாநாம் வஞ்சனேகா விதக்ததா
அங்கமாருஹ்ய ஸுப்தாநாம் ஹநநே கிந்நுபௌருஷம்."

என்ற சுலோகத்தைச் சொன்னான். அதன் கருத்தாவது (ஸத்பாவத்தை அடைந்தவர்களை வஞ்சிப்பதில் என்ன சாமர்த்தியமிருக்கிறது? மடியிலேறி படுத்துறங்குவோனைக் கொல்வதில் என்ன புருஷத்தன்மை?) இந்தச் சுலோகத்தைக் கேட்டதும் ராஜகுமாரனுக்குத் தான்செய்த தீச்செயல் ஞாபகம் வந்து பச்சாத்தாப முண்டாகவே, கொஞ்சம் பாபம் துலைந்து, ஸ அக்ஷ

-த்தைவிட்டு மற்ற ஸேமிரா என்னும் எழுத்துகளை மாத்திரம் சொல்ல ஆரம்பித்தான். திரை பின்னிருந்து ஸே இல் ஆரம்பிக்கும்,

"ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய கங்காஸாகரஸங்கமம்
ப்ரஹ்மஹத்யா ப்ரமுச்யேத மித்ரத்ரோஹோநமுச்யதே."

என்ற சுலோகம் சொல்லப்பட்டது. (ஸமுத்திரத்தில் சேது ஏற்பட்டிருக்கும் ஸ்தலத்தையும், கங்கைநதி சாகரத்தில் ஸங்கமமாகும் பிரதேசத்தையும் கண்டு தரிசித்தல் பிரஹ்மஹத்தி தோஷம் தீரக்கூடும். ஆனால் நட்பு துரோகம் மகாபாபம் விலகாது) இது கேட்டு ராஜகுமாரன் 'மிரா' என்றுரைத்தினன். பிறகு மீ இல் தொடங்கும்.

"மித்ரத்ரோஹி க்ருதக்னஸ்ச யஸ்துவிச்வாஸ காதக :
த்ரயஸ்தே நரகம்யாந்தி யாவச்சந்திர திவாகரம்."

என்ற சுலோகத்தை காளிதாஸன் சொல்ல, மித்ர துரோகி நன்றி மறந்தவன், விச்வாஸத்தைக் கெடுப்பவன் இம் மூன்று பேர்களும் சூர்யசந்திரனுள்ள வரையில் நரகத்தை யடைவார்கள்) மி விட்டு ராமட்டு மிகுந்தது. உடனே காளிதாஸன், அரசனை நோக்கி கடைசியாக சுலோகத்தைச் சொன்னன்.

"ராஜன், போதவ புத்ரஸ்ய யதிகல்யாண மிச்சதி
தானம் தேஹி த்விஜாதிப்யோ வர்ணாநாம் பிராஹ்மணோ குரு"

(ராஜனே ! நீர் உம்முடைய குமாரனுக்கு க்ஷேமமுண்டாக வேண்டுமென்று இச்சித்தால், அந்தணர்களுக்கு நன்மை செய்யும்) அது கேட்டு அரசன் அப்படிச் செய்யவே, அத்யற்புதம் உண்டானதுபோல், ராஜகுமாரனுடைய ஊமைத்தனம் முற்றிலும் விலகி அவன் தன்னுடைய வரலாற்றை யெல்லாம் விஸ்தாரமாய் அரசனிடம் தெரிவித்தான். அதுகேட்டு, அரசன் மாந்திரீகப் பெண்ணைப் பார்த்து "இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது" என, காளிதாஸனும், 'தர்மப்ரபுவே, ராஜாத்தியின் மச்சம் எப்படி எனக்குத் தெரிந்ததோ அப்படித்தான் இந்த விருதாந்தமும்" என்று கூறினன். உடனே அரசன் தனக்குண்டான துக்கத்தைத் தீர்த்து ரக்ஷித்தவன் காளிதாஸனே என்று கண்டுகொண்டு ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவனாய் தான் அநியாயமாய் அவனை (சந்தேகித்து) அவசரப்பட்டு கடுந்தண்டனை விதித்ததற்காக வெட்கி பச்சாத்தாபப்பட்டான். காளிதாஸனுடைய ஆழ்ந்த சூழ்ச்சியையும் ஒப்பற்ற மனோகற்பனா சக்தியையும் மேன்மேல் புகழ்ந்து பேசி முன்னைவிட அனேக மடங் கதிகமாக அவனிடத்தில் அன்பும் நட்பும் கொண்டொழுகினன்.

ஞானசிந்தாமணி

—(o)—

(காசி-ஸ்ரீ. நீலகண்ட சுவாமிகள்.)

சோகநிவர்த்தி நிரங்குசதிருப்தியென்னும் இரண்டவஸ்தையும் அபரோக்ஷ ஞானபலமாம். சுயம்பிரகாச சித்ரூபனன ஆத்மனுக்கு நித்தியாபரோக்ஷத்துவ முண்டென்கையால், அவனுள் அஞ்ஞாநாதி சத்தாவஸ்தைகூட அறியாததோவென்றால், திருஷ்டாந்தம் தசபுருஷ ரொன்றாகக்கூடி நதியைக்கடந்து போய்த் தம்மைப் பராமரிக்குஞ் சமயத்தில், அவரில் நவசங்கியாபுருஷரை யெதிரிட்டெண்ணித் திரிவா னொருபுருஷன் தன்னைத் தசமனென் றறியாததே அஞ்ஞாநமாம். பின்பு தசமனில்லை அவனிருந்தால் தோன்றுனேவென்னும் உபயப்பிராந்தியே அஞ்ஞாந காரியமான ஆவரணமாம். பின் தசமன் நதியின் மிருதனு னென்பதே விக்ஷேபம். பின் வேறொரு ஆப்த வசனத்தால் தசமனைச் சுவர்க்கம்போ லுண்டென்றறிவதே அந்தத் தசமனில்லை யென்னு முதல் ஆவரணத்துக்கு விரோதமான பரோக்ஷஞாநமாம். பின்னவசங்கியா புருஷருடனே கூட்டிக் கிரமத்திலெண்ணி நீயே தசமனென்று தெளிவிக்கத்தானே தன்னைச் சாக்ஷாத்காரமாக அறிவதே தசமன் றோன்றுனே வென்கின்ற இரண்டா மாவரணத்துக்கு விரோதமான் அபரோக்ஷ ஞாநமாம். பின் தசமன் மிருததுக்கம் விடுவதே சோகநிவர்த்தியாம் பின்னிஜஸ்திதியா யிருப்பதே நிரங்குசதிருப்தி.

வேதவாக்கியத்திரயம்

விதிவாக்கியம், நிஷேதவாக்கியம், சித்தார்த்தபோத வாக்கியமெனத் திரிவிதமுண்டு, அவற்றுள். யக்கியாதி செய்ய வேண்டுமென்பதே விதி வாக்கியமாம். சுராபாநாதி செய்யக்கூடா தென்பதே நிஷேத வாக்கியமாம். விதிநிஷேத சூனியமாய்ப் பிரம்மாத்தும ஐக்கியவஸ்து ரூபமாத்திரம் போதிப்பதே சித்தார்த்த போத வாக்கியமாம்.

மகாவாக்கியம்

அந்தச் சித்தார்த்த போதவாக்கியம், இருக்கு, எசுர் சாம, அதர்வணமென்னும் நான்கு வேதங்களிலும் கிரமத்தில், பிரதிபாதிக்கப்பட்ட (பிரக்கியான பிரம்ம,) (அகம்பிரமாஸ்மி,) (தத்துவமசி,) (அயமாத்துமா பிரம்மமென) நான்கு மகா வாக்கியமுண்டு. அவற்றுள், முக்கியமான தத்துவமசி மகாவாக்கியத்துக்கு தத்துவம் அசி யெனப் பதத்திரயமுண்டு. அவற்றிற்கு, பிரம்ம, ஆத்தும, ஐக்கமென்று கிரமத்தில் பதத்திரயார்த்த முண்டு. பின்னபதபதார்த்த வாக்கியங்களுக்குச் சாமானுதிகரண சம்பந்தம், விசேஷண விசேஷிய சம்பந்தம், லக்ஷியலக்ஷண சம்பந்தமெனக் கிரமத்தில் சம்பந்தத் திரயமுண்டு. பதபதார்த்தங்களுக்கு வாச்சியார்த்தம், லக்ஷியார்த்தமென அர்த்தத்துவயமுண்டு. அவற்றுள், பூர்வோக்த தூலாதி தநுத்திரயமுண்டு. சமஷ்டிரூபரான விராட்புருஷன் இரணியகர்ப்பன், அந்தரியாமியென்னும் ஈச்சுரர்களும், பிரம்மமுங்கூடித் தப்தாயபிண்டம்போல ஏகாகாரமாகக் காண்பதே, தத்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும் முக்கியார்த்தமென்றும் அபிதார்த்தமென்றுஞ் சொல்லப்படும். தநுத்திரய வியஷ்டி

ரூபரான விசுவ-தைஜச-பிராக்கிய சிவரூபமும். பிரத்தியேகாத்துமனுங் கூடித் தப்தாயபிண்டம்போல ஏகாகாரமாகக் காண்பதே துவம்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும், முக்கியார்த்தமென்றும், அபிதார்த்த மென்றுஞ் சொல்லப்படும்.

விராட் புருஷாதிகளை வேறுபத்தின நிருபாதிக பிரம்மமே தத்பதத்துக்கு லக்ஷியார்த்தமென்றும் சோதித சுத்ததத்பதார்த்தமென்றும், சொல்லப்படும்.

விசுவாதிகளை வேறுபடுத்தின நிருபாதிகப் பிரத்தியேகாத்துமனே துவம்பதத்துக்கு லக்ஷியார்த்தமென்றும், சோதித சுத்த துவம் பதார்த்த மென்றுஞ் சொல்லப்படும்.

அந்த லக்ஷணவாக்கியமாவது ஜகர்லக்ஷணை—அஜகர்லக்ஷணை—ஜகதஜகர்லக்ஷணை யெனத் திரிவிதமுண்டு; அவற்றிற்குக் கங்காயாங்கோஷப் பிரதி வசந்தி. குந்தாப் பிரவசந்தி சோயந் தேவதத்தகா எனக்கிரமத்திலுதாகரணத் திரயமுண்டு. அவற்றுள்.

கங்காயாங் கோஷப் பிரதி வசந்திக்கு, அர்த்தம்—கங்காசத்தம் பிரவாகரூபமான தன் முக்கியார்த்தகோஷம், இடைச்சேரிக்காசிரய மாகாமையால், அதைவிட்டு அதன் தீரத்தைப்பற்றும். இது ஜகர்லக்ஷணை.

குந்தாப்பிரவசந்திக்கு அர்த்தம்—குந்தசப்தம் தன் முக்கியார்த்தத்தை விடாமல், குந்ததாரிகளைப் பற்றும். இது அஜகர்லக்ஷணை.

சோயந்தேவதத்தகா என்றது சகாவென்னுஞ் சப்தம் பூதகாலதேச வயோவிசிஷ்டனன, தேவதத்தனைச் சொல்லும். அயமென்னுஞ் சப்தம், வர்த்தமான காலதேச வயோவிசிஷ்டனன தேவதத்தனைச் சொல்லும். இந்தவுபய விரோததர்ம முள்ள, பதார்த்தங்களுக்கு ஐக்கியங் கூடாமையால், அந்தவுபய பதார்த்தத்திலுள்ள விரோத தர்மாங்கிசம் விட்டு அவிரோத தர்மாங்கிசமான தேவதத்தனை மாத்திரமே அங்கீகரிக்கப் பின் அவனே யிவன் இவனே யவனென் றிப்படித் தாதாத்மியமாமென்று சொல்வதே ஜகதஜகர் லக்ஷணை யென்றும், அர்த்தலக்ஷணையென்றும், பாகத்தியாகலக்ஷணை யென்றும், பரியாயநாம முள்ளதாய், அசியென்னும் பதத்துக்கு, உதாகரணமாய், இது வொன்றே சொல்லுதற்கு யோக்கியமாம். அதெப்படி யென்றால், தத்தென்னும் பதம், வாச்சியார்த்தமான, சர்வக்ஞத்துவாதி குணவிசிஷ்டனன பரோக்ஷனன ஈச்வரனையே சொல்லும். துவம் என்னும் பதம் வாச்சியார்த்தமான கிஞ்சித்துவாதி ஈநகுண விசிஷ்டனன அபரோக்ஷனன சிதாபாச ஜீவனையே சொல்லும். இந்த வுபயவிரோத தர்மமுள்ள பதார்த்தங்களுக்கு, ஏகத்துவங் கூடாமையால், அசி யென்னும் பதம், அந்த வுபயபதார்த்த கத பரோக்ஷத்துவ, அபரோக்ஷத்துவாதி விரோததர்மாங்கிசம் விட்டு, அவிரோத தர்மாங்கிசமாகிய சைதந்நிய மாத்திரமான லக்ஷியார்த்தமாகிய பிரம்ம—கூடஸ்தரை யங்கீகரிக்க, அதுவேயிது இதுவேயது வென்றிப்படித் தாதாத்மியகஞ் சொல்லும். பின், அந்த வுபயலக்ஷியார்த்தங்களில், பரோக்ஷத்துவ அபரோக்ஷத்துவாதிகளை, அவித்தியா கற்பிதமென்று போதிப்பதே சபலமாய ஆத்துமா அகண்டாகாச போதமாத்திர சித்தேயென்பது வாக்கியார்த்தம்.

ஆசிரியர் குறிப்புக்கள்

ஜாதிபேத உணர்ச்சி ஒழியுமா?

பாஞ்சாலத்தின் தலை நகரமான லாகூரில் ஜட்பட் தோரக் மண்டல் என்னும் பெயரால் ஜாதிபேதத்தை ஒழிக்கும் சங்கமொன்று பல வருஷங்களாகவே இருந்து கொண்டு நல்ல வேலை செய்து வருகிறது. ஹிந்து சமூகத்தில் காணப்படும் பலவித ஜாதிப் பிரிவினைகளும். உயர்வு தாழ்வு மனப்பான்மையும் ஒழிந்து ஹிந்து சமூகத்தார் ஒற்றுமையுடனும் பலத்துடனும் விளங்க வேண்டு மென்பதே அச் சங்கத்தின் நோக்கம். அதற்காக ஜாதிப் பட்டங்களை விட்டு விடுதல், சமபந்தி போஜனம், கலப்பு விவாகம் முதலிய சீர்திருத்தங்களை அது பிரசாரம் செய்வதுடன் அவற்றை அமலுக்குக் கொண்டு வரவும் முயற்சித்து வருகிறது. பல சீர்திருத்தப் பெரியார்கள் அச் சங்கத்தின் வேலையைப் பாராட்டி யிருக்கிறார்கள். இப்போது இம்மாதம் 25,26-ந் தேதிகளில் லாகூரில் ஜாதி முறையை ஒழிக்கும் மகாநாடு ஒன்று கூடியது. அம் மகாநாட்டில் 'இந்திய மக்கள் மனதில் தேசீய உணர்ச்சி ததும்பாம லிருப்பதற்கு ஜாதிபேத உணர்ச்சி தான் காரண மென்றும், இது தான் நாட்டின் அரசியல் முன்னேற்றத்தை ஒவ்வொரு கட்டத்திலும் தடுத்து வந்திருக்கிற தென்றும் ஆதலின் ஜாதி உணர்ச்சியை ஒழித்து விடுவதற்கு அனுகுணமான சிறந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டு மென்றும் இம் மகாநாடு காங்கிரஸ் மகாசபையைக் கேட்டுக் கொள்கிறது' என்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேறி யிருக்கிறது. இத் தீர்மானத்தின் அவசியம் இதிலேயே நன்கு விளக்கப்பட்டிருப்பதால் அதைப்பற்றி அதிகமாக நாம் ஒன்றும் விவரிக்கத் தேவை யில்லை. மேற்படி மகாநாடு காங்கிரசைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானித்ததிலும் ஒரு விசேஷ மிருக்கிறது. ஜாதி உணர்ச்சியை ஒழித்தல் போன்ற சீர்திருத்தங்களை விரைவில் அமலுக்குக் கொண்டுவரக் கூடிய சக்தி மகத்தான தேசீய ஸ்தாபனமாகிய காங்கிரசுக்குத் தான் உண்டு. நாட்டில் அரசியல் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் ஜாதிபேத உணர்ச்சியை ஒழிப்பது காங்கிரசின் கடமையேயாகும். முதலில் உயர்வு தாழ்வு மனப்பான்மை ஒழிய வேண்டும். உயர் ஜாதியினர் என்போர் தாங்களே நேராக பிரம்மாவின் முகத்தினின்று தோன்றியதாகவும், தங்களுக்கே எல்லா உயரிய அம்சங்களும் உண்டென்றும் எண்ணிக்கொண்டு இதர ஜாதியாரைத் தாழ்வாக நினைக்கும் மனோபாவம் ஒழியாத வரையில் அவர்கள் பிரிட்டிஷாரிட மிருந்து ஏகாதிபத்ய உணர்ச்சி ஒழிய வேண்டு மென்று எதிர் பார்ப்பது ஆஷாடபூதித் தனமேயாகும். காங்கிரசில் இருப்பவர்களுக்குத் தான் தேசீய உணர்ச்சி காரணமாக ஜாதிபேத உணர்ச்சிகள் சிறிது சிறிதாக மறைந்து வருகின்றன. ஆதலின் லாகூர் மகாநாட்டின் முயற்சி வெற்றிபெற வேண்டு மென்றே பிரார்த்திக்கிறோம்.

★

ஹரிஜன விமோசனம் எப்போது?

ஹரிஜன சமூகத்தின் தலைவர்களில் ஒருவரென மதிக்கப்படும் திவான் பகதூர் ஆர். சீனிவாசன் அச் சமூகத்தின் நலத்துக்காகப் பெரிதும் உழைத்திருக்கிறார் என்பது வாஸ்தவமே யாயினும் அரசியல் விஷயத்தில் அவர் பத்தொன்பதாம் பசலிப் பேர்வழியாக இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. பிரிட்டிஷ் ஆட்சி என்றென்றும் இங்கு நிலைத்திருக்க வேண்டுமென்று கருதும் பிரகஸ்பதிகளில் அவரும் ஒருவர்; பிரிட்டிஷாரால் தான் தமது சமூகத்துக்கு ஏதோ நன்மை ஏற்பட்டிருப்பது போலவும், இன்னமும் தங்கள் விமோசனமே அவர்கள் கையில் தான் இருப்பதாகவும் கருதும் சுபாவமுடையவர். அவரது தலைமையில் சமீபத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் தற்சமயம் கொடுக்கப் படலாகாதென்றும் தாழ்த்தப்பட்டாரும் மற்ற சிறுபான்மை சமூகத்தாரும் பல துறைகளிலும் மெஜாரிட்டியினரின் நிலைமைக்கு வரும் வரையில் சுயராஜ்யப் பேச்சு பயனற்றதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட் டிருக்கிறது. இது சமுத்திரத்தில் அலை ஓய்ந்த பிறகு தான் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று காத்திருந்த மூடனின் கதையையே நமக்கு ஞாபக மூட்டுகிறது. சிறுபான்மையோர் பிரச்னையையும், நமக்குள் இருக்கும் வகுப்பு வித்தியாசங்களையும் தங்கள் நலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் மூன்றாவது ஆசாமிகள், அதாவது அன்னியர்கள், ஆதிக்கத்தில் இருக்கும் வரையில் இப் பிரச்னைகள் தீரக் கூடிய விஷயமா? பிரிட்டிஷார் சென்ற நூற்றைம்பது வருஷகால ஆட்சியில் ஹரிஜனங்களைச் சமூக அந்தஸ்தில் எவ்வளவு உயர்த்தி விட்டார்கள்; ஏதோ ஒரு சிலருக்குச் சில தாழ்ந்த வேலைகளைக் கொடுத்து விட்டதாலேயே சமூகம் முன்னேறிவிட முடியுமா? மத விஷயத்தில் தலையிட மாட்டோம் என்பது தானே அவர்கள் கொள்கை. இப்போது காங்கிரஸ் சமூக சீர்திருத்த விஷயத்தில் சிரத்தை செலுத்தி ஹரிஜன முன்னேற்றத்துக்கும், தீண்டாமை விலக்குக்கும் உழைத்து வருவதால் தான் கிராமங்களிலும் கூட ஹரிஜன சமூகம் நல்ல அந்தஸ்தையும் சௌகரியங்களையும் பெற்று வருகிறது. இன்னும் சுயராஜ்யத்தில் தான் அச் சமூகம் பூரண வளர்ச்சியை யடைய முடியும். ஏனெனின் அந்த ஜனநாயக அரசியலில் அச் சமூகத்துக்குப் பங்கும் அதிகாரமும் உண்டல்லவா? காங்கிரஸ் விரும்பும் சுயராஜ்யம் எத்தகையதாக இருக்கு மென்பதைத் தெரிந்து கொள்ளாமலும் திவான் பகதூர் சீனிவாசன் போன்றவர்கள் தாறுமாறாகப் பேசிப் பாமர மக்களின் மனதைக் குழப்புவது தேசத் துரோகமாகும். உயர் ஜாதியினரின் ஆதிக்கமும் அநியாயமும் இன்னமும் சிறிது இருந்து கொண்டிருக்கிறதென்றாலும் இப்போது அடைந்துள்ள நிலைமையே மகத்தான மாறுதலுடையது என்பதை மறுக்க முடியுமா? ‘பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை’ என்று பாரதியார் பாடியது போல் சுயராஜ்யத்தில் தான் அனைவருக்கும் விடுதலை என்பதை அச் சமூகம் உணரவேண்டிய காலம் வந்து விட்டதென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

★

விற்பனை வரியும் வியாபாரிகளும்

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் சர்க்கார் விற்பனை வரியை விதித்தது சம்பந்தமாக அச்சமயத்தில் அறியாமையாலோ அவசரத்தாலோ எப்படிப்பட்ட அபிப்பிராயம் ஏற்பட்டிருந்த போதிலும் இப்போது அவர்கள் ஒருவித நிதானத்தை யடைந்திருக்கிறார்கள். சென்னை அசெம்பிளியில் சென்னை வியாபார சபையின் பிரதிநிதியாக இருக்கும் ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இது சம்பந்தமாகச் சமீபத்தில் கோவை வியாபார சங்கத்தில் பேசியது குறிப்பிடத்தக்கது, அவர், "சென்னை சர்க்கார் வரி முறையைப் பற்றிய வரையில் நாம் அவர்களின் மதுவிலக்குக் கொள்கையை எதிர்க்கவில்லை. ஆனால் அதற்காக விதிக்கப்படும் வரிப்பளு நியாயமாகவும், வியாபாரத்தைப் பாதிக்காமலும் இருக்கவேண்டு மென்பதுதான் நமது கோரிக்கை. விற்பனை வரிச்சட்டம் அமலுக்கு வந்தாகிவிட்டது. இனி வைசிராய்க்கு மனுச் செய்வதிலோ கோர்ட்டில் வழக்குத் தொடருவதிலோ பயனில்லை. சட்டம் அமல் செய்யப்படுகையில் குற்றங்களிருந்தால் அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டலாம். நூற்றுக்கு அரை ரூபாயாக இப்போதிருக்கும் வரி பாதகமில்லை. ஆனால் இன்னும் அதிகமாகாமலிருக்க நாம் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும்' என்று தெரிவித்திருக்கிறார். இனி வியாபாரிகள் விற்பனைவரி சம்பந்தமாக முணுமுணுக்க மாட்டார்களென்று நம்புகிறோம். நல்ல கொள்கைகள் நிறைவேற்றப் படுவதற்கு வியாபாரிகளும் துணையாக இருக்கவேண்டாமா? என்பதே பொதுஜனங்களின் கேள்வி.

★

காங்கிரசுக்கு வியாபாரிகள் ஆதரவு

இந்திய வியாபார சம்மேளனத்தில் ஒரு குறிப்பிட்ட ஜாதியாரோ அல்லது கட்சியாரோமட்டும் இல்லை. வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எல்லா ஜாதி மதம் கட்சியினர் சார்பாகவுமே அம்மகாசபை பேசுகிறது. அந்த சம்மேளனம் காங்கிரசின் தேசீய கோரிக்கையை ஆதரிப்பது கவனிக்கத் தக்கது. நமது நாட்டில் தொழில்கள் செழித்து வர்த்தகமும் பெருக வேண்டுமானால் தேசம் அரசியல் சுதந்தரம் பெற்றதாக இருக்கவேண்டு மென்பதை உணர்ந்தே வியாபார சம்மேளனத்தார் தேசீய கோரிக்கையை ஆதரிக்கிறார்கள். சமீபத்தில் கல்கத்தாவில் கூடிய இந்திய வியாபார சம்மேளனக்கூட்டத்தில் அதன் தலைவர் ஸ்ரீ ஜி. எல். மேத்தா பேசுகையில், 'சுயேச்சையை என்ன பெயரிட்டு அழைத்தாலும் சரி, இந்தியா அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் பூரண சுயேச்சையைப் பெறும்படியாகப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியாவுக்குண்டான அந்தஸ்தைத் தெளிவுபடுத்தி விடவேண்டு மென்னும் தேசீய கோரிக்கையை இந்திய வியாபார சமூகத்தினர் பூரணமாக ஆதரிக்கிறார்கள்' என்று தெரிவித்தார். தேசியத்தின எதிரிகளான சிலர் செய்துவரும் விஷமத்தனத்தில் மயங்கிவிடும் சில சில்லறை வியாபாரிகள் காங்கிரசைப் பற்றியும், தேசீய லக்ஷியத்தைப் பற்றியும் எப்படி நினைத்தபோதிலும் பிரபல வியாபாரிகளும், வர்த்தக சங்கமும் உண்மையை உணர்ந்து தேசீய விடுதலைக்கு ஆதாரவாக இருப்

பது ஆறுதலையே அளிக்கிறது. சில்லறை வியாபாரிகளும் மேற்படி சங்கத்தைப் பின்பற்றித் தேச பக்தியுடன் காங்கிரசை ஆதரிப்பதே நலம்.

★

ஜாதி வேற்றுமையை ஒழிக்க வழி

நமது நாட்டில் ஹிந்து முஸ்லிம் வேற்றுமை என்னும் வகுப்புவாத நோய் ஒருபுறமிருக்க, நமது ஹிந்து சமூகத்திலேயே ஜாதி வேற்றுமை என்னும் நோய் அட்டைபோல் ஒட்டிக்கொண்டு நம்முள் கட்டுப்பாடும் ஒற்றுமையும் சமத்துவமும் ஏற்படாதபடி தடுத்து வருகிறது. இதனால் நம்மிடையே சிறந்த தேசிய உணர்ச்சியை நிலை நிறுத்தவும் முடிவதில்லை. இதற்காகச் சமீபத்தில் லாகூரில் கூடிய ஜாதிமுறையொழிப்பு மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமதி. ராமேஸ்வரி நேரு, தற்காலத்தில் அனுஷ்டிக்கப்படும் ஜாதி முறையையும், ஹிந்துக்களின் சமூக அமைப்புக்கு அதனால் ஏற்படும் கேடுகளையும் விளக்குகையில், அத்தகைய அனுஷ்டானத்துக்கும் ஜாதி வேற்றுமைக்கும் சாஸ்திர சம்மதமே கிடையாதென்று கூறினார். லாலா சாந்தராம் என்பவர் பேசுகையில் ஜாதி வேற்றுமை தொலைவதற்கு சமபந்தி போஜனமும் கலப்பு மணமும்தான் சரியான வழி என்று கூறினார். உண்மையிலேயே இந்த ஜாதி வேற்றுமையும், வகுப்பு வாதமும்தான் நமது அரசியல் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதால் அவற்றை ஒழிக்க வழிதேட வேண்டியது அவசியம். ஹிந்து சமூகத்தின் கட்டுப்பாட்டை ஜாதிபேதம், உயர்வு தாழ்வு, மனப்பான்மை முதலியவற்றால் குலைப்பது பெரும் பாதகமாகும்.

★

தேசியக் கொடியை அவமதிப்பதா?

காங்கிரசின் மூவர்ணக்கொடி நமது தேசியக் கொடியேயாகும். அதை ஒரு கட்சியாரின் கொடி என்று கருதுவதோ கூறுவதோ தவறு. ஏனெனின் காங்கிரசே தேசம், தேசமே காங்கிரஸ் என்பதுதான் உண்மை. காங்கிரசை இத்தேசத்தின் மகத்தான தேசிய ஸ்தாபனமாகக் கொள்ள வேண்டுமே யொழிய ஒரு சாதாரணகட்சி என்று நினைப்பது கூடாது. நமது தேசியக்கொடி ஆத்ம பலத்தையும் அஹிம்சா தர்மக் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டது. நவம்பர் 25-ந் தேதியன்று அலகாபாத் சர்வகலாசாலை பட்டமளிப்பு விழா நடைபெற்றபோது செனட் சபையினர் அக்கட்டடத்தின்மீது தேசியக் கொடியைப் பறக்க விட்டதற்காக, அவ்விழாவில் பேச இருந்த கவர்னர் பேச மறுத்துவிட்டார். அதற்கு அவர் கூறும் சமாதானத்தில் எல்லோருக்கும் பொதுவான சர்வகலாசாலையில் ஒரு கட்சியைச் சார்ந்த குறி இருக்கலாகாதென்று தெரிவித்திருக்கிறார். அவரது மனப்பான்மை தவறு. தேசியக் கொடியும் அனைவருக்கும் பொதுவானதே. அன்று அங்கு தேசியக்கொடியை ஏற்றுவித்த சர்வகலாசாலை காரியதரிசியைத் தாருல்ஹஸ் இந்திய தேசியத்தைப் பலியிட்டுப் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை நாம் ஆதரிக்க முடியாதென்றும், தேசக்கொடிக்கு எத்தகைய அவமதிப்பு ஏற்படுவதையும் மாணவர்கள் சகிக்க மாட்டார்களென்றும் கூறி

யது பாராட்டத்தக்கது. அலகாபாத் சர்வகலாசாலை அதிகாரிகளின் தேச பக்தியும் தைரியமும் உறுதியும் போற்றத்தக்கதே. இப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த தேசீயக்கொடியை இங்குள்ள சு. ம.க்கள் அவமதிப்பது அவர்களுடைய கோமாளித் தனத்தையே காண்பிக்கிறது. தேசீயக் கொடியை எவரும் அவமதிக்காதபடி பார்த்துக் கொள்வது நமது கடமை.

★

உணவுப் பொருள்களின் அகவிலை

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமான பிறகு கப்பல் போக்கு வரத்து சரியாக இல்லாததால் அன்னிய நாட்டுப் பொருள்களின் விலை ஒருவாறு அதிகரிப்பதில் அர்த்தமிருக்கிறது. அதுவும் ஸ்டாக் வைத்திருப்பவர்கள் மறைக்காமல், நியாயமான அளவு விலையை யுயர்த்தி சரக்குகளை விற்பதே நியாயம். அரசாங்கத்தாரும் நமக்கு மிக மிக அவசியமான அன்னியப் பொருள்கள், இந்தியாவிலேயே தயாரிக்கும்படி செய்து எப்படியாவது அவை சற்று அதிக விலையிலேனும் கிடைக்கும்படி செய்யவேண்டுமே யொழிய, யுத்தம் காரணமாக வாழ்க்கைக்கு அவசியமான சரக்கு கிடைக்க முடியாதபடியே விட்டுவிடுவது தவறாகும். யுத்த சமயத்திலேனும் உள்நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியாவதற்கு வழிதேட வேண்டாமா? முதலாளிகளும் தாராளமாகப் பணம் போட்டு சுதேசி சாமான்கள் அதிகம் உற்பத்தியவாதற்கு வழிதேட வேண்டியது அவசியம். நிற்க, உள்நாட்டிலேயே உற்பத்தியாகும் சாமான்கள், அதிலும் உணவுப் பொருள்களின் விலை, யுத்தம் காரணமாக, அளவுக்கு மிஞ்சி அதிகரிப்பதென்றால் அதை வியாபாரிகளின் அக்கிரமம், கொள்ளை லாபமடிக்க அவர்கள் கொள்ளும் ஆசை என்றே கூறவேண்டும். அரிசி, எண்ணெய், பருப்பு தினுசுகள் முதலிய உணவுப் பொருள்களின் விலை சமீபத்தில் சகிக்க முடியாத அளவிற்குத் திடீரென்று உயர்த்தப்பட்டு விட்டது கண்டிக்கத் தக்கதாகும். யுத்தம் ஆரம்பமானதும் இவ்வாறு விலையை யுயர்த்தியபோது, அப்போது அதிகாரத்திலிருந்த காங்கிரஸ் சர்க்கார் உடனே நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். இப்போது கவர்னர் ஆட்சி நடைபெறுகிறது. எனினும் எல்லா இலாகாக்களையும் நிர்வகிக்கும் ஆங்கிலேயர்களும், காங்கிரஸ் சர்க்காரையே பின்பற்றி எல்லா விஷயங்களையும் கவனித்து வருவதாகவே தெரிகிறது. ஆதலின் அவர்கள் உடனே இதில் கவனத்தைச் செலுத்தி வியாபாரிகளின் அக்கிரமத்தை அடக்கவேண்டியது அவசியமாகும். இன்றேல் நடுத்தர வகுப்பினர், ஏழைகள் ஆகியோர் அதிகம் கஷ்டப்பட வேண்டியிருக்குமாதலால் பசியின் கொடுமையால் அவர்கள் தகாத காரியங்களிலும் இறங்கிவிடும்படியான ஆபத்தும் ஏற்படலாம் என்று அஞ்சுகிறோம். அதைத் தடுக்கவேண்டியது சர்க்கார் கடமை. வியாபாரிகளும் நியாயமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

★

பிராங்க் நாய்ஸின் பூச்சாண்டி

"இந்தியா தனித்து நிற்கமுடியாது" என்று ஸர். பிராங்க் நாய்ஸ் பூச்சாண்டி காட்டுகிறார். ஏனென்றால், அதற்கு 'யுத்தகாலம், சமாதான காலம் இரண்டின் தேவைகளையும் பூர்த்தி செய்யத் தக்கவாறு பொருளாதார முறை உருவகப் படவில்லை'யாம். 'நவீன யுத்தத்தில் தரை, கடல், ஆகாயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் பூரண ஆயுத முஸ்தீப்பு செய்து கொள்ளக் கூடியவாறு பொருளாதார சக்தி வாய்ந்ததாய் எந்த நாடு மில்லை'யாம். ஆதலால், சுயேச்சை பொருந்திய பெரிய பெரிய நாடுகளே அவ்வித நிலைமையி லிருக்குமேயானால், பல வருஷங்களாக அடிமை நாடாய் இருந்துவரும் இந்தியா எம்மாத்திரம் என்பது அவருடைய எண்ணம் போலும்? எனவே, அவர் இந்தியாவுக்கு ஒரு அருமையான யோசனை சொல்லுகிறார். அது என்ன? 'இந்தியா மற்ற நாடுகளுடன் சேர்ந்திருப்பதன் மூலம் தனது தற்காப்புக்கு ஓரளவு முயற்சி செய்தால் போதும்' என்று அவர் உபதேசிக்கிறார். அதை விட்டு, 'அந் நாடு வீண் படாடோபமான அந்தஸ்தைப் பெரிதாகக் கருதி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விலகி நிற்குமாயின், அது ரஷ்யாவையும் ஜெர்மனியையும் போல் தனது செல்வத்தை வீணாக்கித் திண்டாட நேரும்' என்றும் அவர் எச்சரிக்கிறார். அவர் அத்துடன் நிற்கவில்லை. 'எந்த நாடும் முற்றிலும் சுயேச்சையாக வாழுங் காலம் மலையேறிவிட்டது' என்று கூறிச் சுதந்திரத்துக்காகப் போராடும் இந்தியர்களாகிய நம்மை மருட்டுகிறார். 'உணவு வேண்டுமா! அல்லது துப்பாக்கிவேண்டுமா என்பதை இந்தியா முடிவு செய்யவேண்டும்' என்று கேட்டு ஸர். பிராங்க் நாய்ஸ் மேற்குறித்த விதமாகவெல்லாம் பூச்சாண்டி காட்டுவதைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை. நம்மவர்களிலேயே அடிமை புத்தியுள்ள பிற்போக்காளர் சிலர், "இந்தப் பொல்லாத காங்கிரஸ்காரர்கள் 'சுயராஜ்யம் வேண்டும்; சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' என்றெல்லாம் கூச்சல் போடுகிறார்களே! சுயராஜ்யம் கொடுத்தால் இவர்களுக்கு அரசாளத் தெரியுமா! அன்னிய நாட்டார் படை யெடுத்து வந்தால் நம் நாட்டைக் காப்பாற்றத்தான் வகை தெரியுமா! இதெல்லாம் நடக்கிற காரியமா, சார்! ஏதோ நமது அதிர்ஷ்டவசமாகப் பிரிட்டிஷ் சர்க்காரின் சம்பந்த மேற்பட்டு அவர்களுடைய பேருதவி யிருந்து வருகிறதே என்று நன்றி செலுத்தி, அவர்கள் விருப்பப்பட்டு நமக்குக் கொடுத்து வரும் சௌகரியங்களையும் அரசியல் அந்தஸ்துகளையும் இரு கைகளாலும் ஏற்று அவ்வளவோடு திருப்தி யடைந்திருப்பதை விட்டு வெறுங் கூச்சல் போடுகிறார்களே! இவர்களது மடமையை என்னென்பது!" என்று கூறி வருகிறார்களென்றால், ஒரு பிரிட்டிஷ் பிரமுகரின் பேச்சைக் கேட்டு ஆச்சரியப் படுவதற்கென்ன இருக்கிறது? ஆனால், இத்தகையோருக்கு நாம் ஒன்று கூற விரும்புகிறோம். மாகாண சுயாட்சியில் காங்கிரஸ் காரர்கள் மந்திரி பதவி யேற்று அரசியல் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி, இந்தியர்களுக்கும் அரசாளத் தெரியும் என்று உலகோர்க்குக் காட்டியது போல், இந்தியா சுயேச்சை நாடாகி, பிரிட்டன் போன்ற ஒரு வல்லரசின் துணையில்லாமலே, மற்ற தேசங்களைப் போல தனி நாடாக விளங்கக் கூடும் என்பதை நிரூபித்துக் காட்டுங்காலம் வெகு தூரத்திலில்லை என்பதுதான்.

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

பிரமாதிஆ மார்கழிமீ—கலியுகாதி 5041, சாலிவாகனம் 1862,
பசலி 1349, கொல்லமாண்டு 1115, ஹிஜரா 1358,
இங்கிலீஷ் 1939ஆ டிசம்பர்மீ—1940ஆ ஜனவரிமீ

மார்கழிமீ	டிசம்பர்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	16	சனி	பஞ்4-8	அ35-58	சி35-58அ	சஷ்டி, ஸ்காந்த சஷ்டி
2	17	ஞா	சஷ்10-15	சத43-23	சித்60	சூரிய விரதம், நீருவேம்பாவை உற்சவாரம்பம்
3	18	திங்	சப்16-45	பூர50-58	ம50-58சி	எற்றம் ஸ்தாபிக்க
4	19	செவ்	அஷ்23-15	உத்58-8	அ58-8சித்	வியாதியஸ்தர் குளிக்க
5	20	புத	நவ28-45	ரேவ60	மர60	கிருதினஸ்பிருக்
6	21	வியா	தச◌2-58	ரேவ4-3	சித்4-3மர	கரிநாள், மருந்துண்ண
7	22	வெள்	ஏகா35-13	அஸ்8-28	அமி8-28சி	சர்வ, மத்வ ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி
8	23	சனி	து35-35	ப✻11-5	சி11-5அமி	கிருத்திகை, மச்ச துவாதசி
9	24	ஞா	திர34-0	கிரு11-45	சித்60	பிரதோஷம் அநுமத் விரதம்
10	25	திங்	சது30-40	ரோ10-45	அமி60	பாஷாண சதுர்த்தசி
11	26	செவ்	○26-3	மிரு7-55	சித்7-55ம	பௌர்ணமி, சிவ பூஜை
12	27	புத	பிர20-0	திரு4-5 புன59-28	சித்60	ஆருத்திரா தரிசனம், அவமாகம், பரசுராம ஜயந்தி
13	28	வியா	துதி13-28	பூச54-18	அ54-18சி	கர்ப்போட்டம் ஆரம்பம் [நா-47-15
14	29	வெள்	திரி6-28 சது59-33	ஆயி49-5	மர60	சங்காஷ்ட சதுர்த்தி, அவமாகம்
15	30	சனி	பஞ்53-0	மக44-18	அ44-18சி	
16	31	ஞா	சஷ்47-5	பூர38-3	சி38-3அமி	
17	1940ஆ ஜனவரி 1	திங்	சப்42-0	உத்36-28	சித்60	
18	2	செவ்	அஷ்37-40	அஸ்33-43	சித்60	
19	3	புத	நவ34-13	சித்31-50	சித்60	
20	4	வியா	தச31-40	சுவா30-48	அ30-48சி	
21	5	வெள்	ஏகா30-0	வி30-38	சித்60	
22	6	சனி	து29-10	அ31-20	சித்60	
23	7	ஞா	திர29-5	கே32-48	ம32-48அ	
24	8	திங்	சது29-58	மூல35-8	சித்35-8ம	
25	9	செவ்	●31-53	பூரா38-33	சி38-33அ	சர்வத்திர அமாவாசை
26	10	புத	பிர35-5	உத்42-58	அ42-58சி	புஷ்ய சுத்தம், கெற்போட்டம் நிவர்த்தி நா-53-13
27	11	வியா	துதி39-13	திரு48-28	சித்60	சந்திர தெரிசனம்
28	12	வெள	திரி44-28	அவி54-58	சித்60	வியாதியஸதர் குளிக்க
29	13	சனி	சது50-40	சதை60	அமி60	மாச சதுர்த்தி விரதம், போகி பண்டிகை

குரு	சனி கேது		
செ	4-மகர-சுக் 9-மீன-செ 17-தனு-புத 28-கும்-சுக்		
